# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2500 - 2026 ජූලි මස 31 වැනි සිකුරාදා - 2026.07.31

2500 ஆம் இலக்கம் - 2026 ஆம் ஆண்டு யூலை மாதம் 31 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (IIஅ) – விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | - | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 4 |


**கவனிக்க.-** ஊழல் எதிர்ப்பு (திருத்தம்) சட்டமூலம் 2026.07.24 ஆந் திகதிய, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் பகுதி II இற்குரிய குறைநிரப்பியாக வெளியிடப்படுகிறது.

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2026, ஓகத்து மாதம் 21 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2026, ஓகத்து மாதம் 07 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."

**பிரசன்ன ஜயரத்ன**,
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2026 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 02 ஆந் திகதி.
*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

## இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரசாங்க சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

1. **வேண்டப்படும் பொதுத் தகைமைகள்** :

1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிற பதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களுக்கும் ஏற்புடைத்தாகாது).

1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

2. **சேவை நிபந்தனைகள் : பொது**

2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை, திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரசாங்க சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.

அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர்; தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.

3. **நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள்** :

3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்க வேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-

3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.

3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுரத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/ 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.

3.1.7 அரசாங்க சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரசாங்க சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரசாங்க சேவையில் ஏற்கனவே நிரந்தர/ தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த)தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

4. **பணிக்கமர்த்தும் நியதிகள்** :

4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.

4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.

4.3 அரசாங்க சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிச் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரசாங்க சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.

4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரசாங்க சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

5. **யுத்த சேவைச் சலுகை** :

5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.

6. **அரசாங்க சேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள்** :

6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரசாங்க சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரசாங்க சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.

6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவு செய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவு செய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமையபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

7. **தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை** :

7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம், படி முதலியன சேர்ந்திருக்கா.

8. **ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை** :

இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/ 90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

# பரீட்சார்த்திகளுக்கான விதிகளும் அறிவுறுத்தல்களும்

1976 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்கத் திருத்தச் சட்டத்துக்கமைவான, 1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் காலத்துக்குக்காலம் வெளியிடப்படுகின்ற சட்டங்களுக்கும் ஒழுங்குமுறைகளுக்கும் ஏற்ப ஒழுகுவதற்கு சகல பரீட்சார்த்திகளும் கட்டுப்பட்டவர்களாவர்.

1976 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்கத் திருத்தச் சட்டத்துக்கமைவான, 1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் 20 ஆம் வாசகத்தின் மூலம் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்துக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய கீழ்க் குறிப்பிடப்படும் நிபந்தனைகள் மற்றும் கட்டுப்பாடுகள் விதிக்கப்படுகின்றன.

அனைத்துப் பரீட்சார்த்திகளும், கீழ்க் குறிப்பிடப்படும் விதிகளுக்கு கட்டுப்பட வேண்டும் என்பதுடன் இவ் விதிகளில் எவற்றையேனும் மீறும் பரீட்சார்த்தி ஒருவர் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் தீர்மானத்துக்கு அமைய கீழ்க் குறிப்பிடப்படும் தண்டனைகளில் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட தண்டனைகளுக்கு உட்படுத்தப்படுவார்.

I. விசாரணைக்கு உட்படுத்தப்படுகின்ற முழுப் பரீட்சைக்கும் அல்லது அதன் ஒரு பகுதிக்கு தோற்றுவதற்குத் தடை விதித்தல்;
II. விசாரணைக்கு உட்படுத்தப்படும் பரீட்சையின் ஒரு பாடத்திற்கு அல்லது மொத்தப் பரீட்சைக்கும் தகுதியற்றவர் ஆக்குதல்;
III. இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் நடாத்தப்படுகின்ற அனைத்துப் பரீட்சை களுக்கும் தோற்றுவதற்கு வாழ்நாள் தடை விதித்தல்;
IV. குறிப்பிட்ட காலப் பகுதிக்கு இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் நடாத்தப்படுகின்ற பரீட்சைகளில் தோற்றுவதற்குத் தடை விதித்தல்;
V. இடைநிறுத்தப்பட்ட, பரீட்சைக்கான தடை உடன் கடிதம் ஒன்றை வழங்குதல்;
VI. குறிப்பிட்ட காலப் பகுதிக்கு சான்றிதழ் தடை செய்யப்படல்;
VII. பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் கீழ் குற்றவியல் வழக்கு ஒன்றைத் தாக்கல் செய்வதற்காக பரீட்சார்த்தியை காவற்றுறையிடம் ஒப்படைத்தல் அல்லது அக்குறித்த செயற்பாடு தொடர்பாக காவற்றுறையில் புகார் செய்தல்;
VIII. பரீட்சார்த்தி அரசாங்க ஊழியராக அமையும் சந்தர்ப்பத்தில் குறித்த பரீட்சார்த்தியின் செயற்பாடு தொடர்பாக (ஒழுக்காற்று நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக) குறித்த பரீட்சார்த்தியின் நியமன அதிகாரிக்கு அறிவித்தல்.

பரீட்சைக்கு முன்பு, பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது அல்லது பரீட்சைக்கு பின்பு அல்லது வேறு எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் அவ்வாறான பரீட்சார்த்தி தொடர்பாக நடவடிக்கை எடுக்கும் அதிகாரத்தை பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், தம்வசம் கொண்டவர் ஆவார். இது தொடர்பாக அவரால் மேற்கொள்ளப்படும் தீர்மானம் இறுதியானதாகும்.

1. சகல பரீட்சார்த்திகளும் பரீட்சை மண்டபத்தினுள் மற்றும் பரீட்சை நடைபெறும் வளாகத்தினுள் பரீட்சை மேற்பார்வையாளருக்கு அவரது பணிக் குழாமுக்கு, அதே போன்று ஏனைய பரீட்சார்த்திகளுக்கு இடையூறு அல்லது தடங்கல்கள் ஏற்படாத வகையில் நடந்துகொள்ள வேண்டும். பரீட்சார்த்திகள் பரீட்சை வளாகத்தின் சொத்துகளுக்கு அல்லது பரீட்சை ஊழியர்களின் தனிப்பட்ட சொத்துகளுக்கு சேதம் ஏற்படுத்துதல் கூடாது.
2. பரீட்சார்த்திகள் பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருக்கும் காலப் பகுதியிலும் பரீட்சை ஆரம்பிப்பதற்கு முன்பும் அதே போன்று பரீட்சை நடைபெற்று முடிவடைந்தவுடனும் பரீட்சை மேற்பார்வையாளர் மற்றும் அவரது பணிக் குழுவின் அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப நடந்து கொள்ளல் வேண்டும்.
3. பரீட்சையின் போது வினாப்பத்திரத்திற்கு விடையளிப்பது ஆரம்பிக்கப்பட்டு அரை மணித்தியாலம் கழிந்த பின்னர் எந்தவொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்திற்குள் அனுமதிக்கப்பட மாட்டார்கள். மேலும் பரீட்சை முடிவடையும் வரை எந்தவொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்வதற்கும் இடமளிக்கப்பட மாட்டாது. செயன்முறைப் பரீட்சைகள் அல்லது வாய்மொழி மூலமான பரீட்சைகளுக்கு உரிய நேரத்திற்கு சமுகம் அளிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
4. சகல பரீட்சார்த்திகளும் தமது சுட்டெண்ணுக்குரிய ஆசனம் தவிர்ந்த வேறு எந்த இடத்திலும் அமர்தல் கூடாது. பரீட்சை மேற்பார்வையாளரின் விசேட அனுமதி இன்றி தன்னுடைய இடத்தை மாற்றக் கூடாது. தனக்கு ஒதுக்கப்பட்ட ஆசனத்தைத் தவிர வேறு இடத்தில் அமர்தல் மோசடி நோக்கத்துடன் செய்யப்பட்ட செயலாகக் கருதப்பட நேரிடும்.
5. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி பேணப்பட வேண்டும். எக் காரணம் கொண்டும் பரீட்சை மண்டபத்தினுள் பரீட்சை மேற்பார்வை பணிக்குழுவில் உள்ள ஒருவரைத் தவிர பரீட்சை மண்டபத்தினுள் அல்லது வெளியே இருக்கும் எவர் ஒருவருடனும் எந்தவித காரணத்திற்காகவும் கதைத்தல் அல்லது தகவல் பரிமாறல் அல்லது வேறு எந்தவிதமான கொடுக்கல் வாங்கலிலும் ஈடுபடுதல் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது.
6. பரீட்சை சுட்டெண்ணை மட்டும் கொண்டே பரீட்சார்த்தியின் விடைத்தாள்கள் இனங்காணப்படுகின்றமையால் விடைத்தாளில் தன்னுடைய பெயரை எழுதுதல், விடைத்தாளை இனங்கண்டு கொள்ளக்கூடிய வகையில் ஏதேனும் குறியீடு அல்லது குறிப்பு இடுதல், விடைத்தாளில் அநாகரிகமான அல்லது அவசியமற்ற விடயங்களை எழுதுதல், விடைத்தாளுடன் நாணயத்தாள்களை இணைத்தல் ஆகியவை முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளன. மேலும் வேறு எவரேனும் பரீட்சார்த்தியின் சுட்டெண்ணை தன்னுடைய விடைத்தாளில் எழுதுதலும் மோசடி நடவடிக்கை ஒன்றைச் செய்வதற்கு முயன்றதாகக் கருதப்படும். இனங்கண்டு கொள்ள முடியாத வகையில் சுட்டெண் எழுதப்பட்ட விடைத்தாள்களும் நிராகரிக்கப்படும்;
7. உமக்கு பரீட்சை மண்டபத்தினுள் வழங்கப்படும் தாள்கள் (பரீட்சை நடைபெறும் திகதிக்குரிய நோக்குனரின் குறுகிய கையொப்பம் மற்றும் திகதி இடப்பட்ட விடை எழுதும் தாள்கள்) தவிர வினாத்தாளிலோ அல்லது மேசையிலோ அல்லது வேறு ஏதேனும் இடத்திலோ எவற்றையும் எழுதுதல் கூடாது. இந்த அறிவுறுத்தல்களுக்கு மாறாக செயற்படுதல் மோசடி நோக்கத்துடன் செய்யப்பட்ட செயலாகக் கருதப்படும்.
8. பரீட்சார்த்திக்கு வழங்கப்படுகின்ற தாள்களை அல்லது விடை எழுதும் புத்தகத்தை கிழித்தல் அல்லது கசக்குதல் கூடாது. பரும்படி வேலைகளை செய்து பார்ப்பதற்காக உபயோகிக்கும் சகல தாள்களையும் தெளிவாக குறுக்காக கோடிட்டு விடைத்தாளுடன் இணைத்தல் அல்லது விடைத்தாளுடன் கையளித்தல் அல்லது வழங்கப்படுகின்ற அறிவுறுத்தலின் படி செய்தல் வேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதப்பட்ட எதனையும் வெளியே கொண்டு செல்லுதல் தடை செய்யப்பட்டுள்ளது. ஒரே வினாவிற்கான விடை இரு இடங்களில் எழுதப்பட்டிருப்பின் அவசியமற்ற விடையைத் தெளிவாக வெட்டி விட வேண்டும்.
9. பரீட்சையின் போது விடையளிப்பதற்காக உமக்கு வழங்கப்படுகின்ற தாள்கள் மற்றும் வேறு பொருட்களை பரீட்சை மண்டபத்திற்கு வெளியே கொண்டு செல்லுதல் தடை செய்யப்பட்டுள்ளது. இவ்வாறான அனைத்துப் பொருட்களும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்திற்கு சொந்தமானதுடன் இவ் விதியினை மீறுதல் ஒரு தண்டனைக்குரிய செயற்பாடாகக் கருதப்படும்.
10. பரீட்சையின் போது விடையளிப்பதற்காக தனக்கு வழங்கப்படுகின்ற காகிதாதிகள் ஒவ்வொரு பரீட்சையின் போதும் தனதருகே வைத்துக் கொள்ளக்கூடிய எழுத்து மூலமான அனுமதியுள்ள பொருட்கள் தவிர்ந்த ஏனைய குறிப்புப் புத்தகங்கள், குறிப்புகள் உள்ளடங்கிய தாள்கள் அல்லது கடதாசித்துண்டுகள் போன்றவை பரீட்சை மண்டபத்தினுள் பரீட்சைக்குத் தோற்றும் சந்தர்ப்பத்தில் தன் வசம் அல்லது அருகே வைத்திருத்தல் கூடாது. அது போன்றே பரீட்சை மண்டபத்தினுள் கையடக்கத் தொலைபேசி, இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகள் (Electronic Communication Instruments/ Devices) தன் வசம் அல்லது அருகே வைத்திருத்தல் மற்றும் அந்த சாதனங்கள்/கருவிகளை உபயோகித்து வெளி நபர்களின் உதவிகளைப் பெற்றுக் கொள்ளல் மற்றும் பரீட்சை நடைபெறும் போது வேறு நபர்களுக்கு மற்றும் சமூக ஊடகங்களுக்கு தகவல் அனுப்புதல் மோசடிச் செயற்பாடு என்பதுடன் தண்டனைக்குரிய குற்றமாகும்.
11. இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகள் மேற்குறிப்பிட்ட 10ஆவது பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள செயற்பாடுகள் தொடர்பாக உபயோகிக்கப்பட்டது கண்டுபிடிக்கப்பட்டால் அச் சாதனங்கள்/கருவிகள் உரிய விசாரணை நடவடிக்கைகள் முடிவடையும் வரை பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் வசம் எடுக்கப்படுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.
12. பரீட்சை மண்டபத்தில் அமர்ந்த பின்னர், பரீட்சைக்கு முன் அல்லது பரீட்சை நடைபெறும் சந்தர்ப்பத்தில் எந்தவொரு பரீட்சார்த்தியும் தன் அருகே பரீட்சைக்காக கொண்டு வருவதற்கு அனுமதிக்கப்படாத எந்தவொரு பொருளையும் அல்லது உபகரணத்தையும் வைத்திருத்தல் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது. பரீட்சை மேற்பார்வையாளர் மற்றும் அவரது பணிக் குழாம் கட்டளையிட்டால் சகல பரீட்சார்த்திகளும் தன் வசம் உள்ளவற்றை வெளிப்படுத்துவதற்கும் மற்றும் பரிசோதிப்பதற்கும் கட்டுப்படுவதுடன் இவ்வாறான தேவைப்பாட்டினை மீறுவது மோசடியான செயற்பாட்டை செய்வதற்கு முயற்சித்ததாகக் கருதப்படும்.
13. எவரேனும் ஒரு பரீட்சார்த்தி வேறு ஒரு பரீட்சார்த்தியின் விடைத்தாளிலிருந்து அல்லது புத்தகத்திலிருந்து அல்லது தாளிலிருந்து அல்லது குறிப்பெழுதிய தாள்களிலிருந்து அல்லது சமிக்ஞைகள் மூலம் அல்லது வேறு ஏதேனும் ஒன்றிலிருந்து பார்த்து எழுதுதல் அல்லது பார்த்து எழுத முயற்சித்தல் அல்லது மோசடியாக நடந்து கொள்ளல் என்பன குற்றமாகும். வேறு பரீட்சார்த்திக்கு உதவி செய்தல், வேறு பரீட்சார்த்தியிடமிருந்து அல்லது நபரிடமிருந்து அல்லது பரீட்சை பணிக் குழுவினரிடமிருந்து உதவி பெறுதல் குற்றம் என்பதுடன் விடையளித்து முடிந்த சகல தாள்களையும் எழுதிக் கொண்டிருக்கும் தாளுக்குக் கீழே வைத்து விடையளித்தல் வேண்டும். எழுதுகின்ற தாள்களை மேசையின் மேல் பரப்பி வைத்திருத்தல் கூடாது.
14. பரீட்சை ஆரம்பிக்கப்பட்டு வினாத்தாளுக்கு விடையளிக்கும் போது எக்காரணம் கொண்டும் குறுகிய நேரத்திற்குக் கூட பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்வதற்கு எந்தவொரு பரீட்சார்த்திக்கும் இடமளிக்கப்பட மாட்டாது. எனினும், ஒரு பரீட்சார்த்திக்கு மலசலகூடத்திற்கு செல்வதற்காக பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்ல வேண்டிய அவசியம் ஏற்பட்டால் பரீட்சை மேற்பார்வையாளரின் உதவி பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவரின் கண்காணிப்பின் கீழ் பரீட்சார்த்திக்கு சிறிது நேரம் வெளியே செல்வதற்கு அனுமதிக்கப்படுவார். அவ்வாறு வெளியே செல்லும் முன்பும், மீண்டும் பரீட்சை மண்டபத்திற்குள் வரும் போதும் அவர் சோதனைக்கு உட்படுத்தப்படல் வேண்டும்.
15. பரீட்சை மண்டபத்தில் விடையளிக்கத் தொடங்குவதற்கு முன் அல்லது பின் உரிய பரீட்சார்த்திக்குப் பதிலாக போலிப் பரீட்சார்த்தி ஒருவர் தோற்றுதல் தண்டனைக்கு உள்ளாகக்கூடிய செயற்பாடாகும். ஆளடையாள அட்டையை மாற்றுதல் அல்லது போலி அடையாள அட்டையைச் சமர்ப்பித்தல் ஒரு மோசடிச் செயற்பாடாகக் கருதப்படும்.
16. பரீட்சார்த்தி ஒருவர் அல்லது பரீட்சார்த்தி அல்லாத ஒருவர் எந்தவொரு பரீட்சார்த்திக்கும் தவறான முறையில், மோசடி செய்யும் வகையில் உதவி செய்தல் ஒரு பாரிய குற்றமாக கருதப்படும்.
17. பரீட்சார்த்தி ஒருவர் கீழ்க் குறிப்பிடப்படும் அறிவுறுத்தல்களுக்கமைய செயற்படல் வேண்டும்:
    (i) சகல பரீட்சார்த்திகளும் தனது அனுமதிப்பத்திரத்தில் கையொப்பத்தினை உறுதி செய்து கொள்வதும், விண்ணப்பிக்கப்பட்ட பாடங்கள் மற்றும் அனுமதிப்பத்திரத்தில் குறிப்பிட்டுள்ள பாடங்களுக்கிடையில் பொருந்தாத தன்மை காணப்படின் பரீட்சைத் திணைக்களத்தில் விசாரித்து பரீட்சைக்கு முன் அதைத் திருத்திக் கொள்வதும் மேற்கொள்ளப்பட வேண்டும்;
    (ii) பரீட்சை ஆரம்பிப்பதற்கு அரை (1/2) மணித்தியாலத்திற்கு முன்னர் பரீட்சை மண்டபத்திற்கு சமுகமளித்தல் உசிதமானது என்பதுடன், பரீட்சை மண்டபம் நிச்சயமாகத் தெரியாதவிடத்து பரீட்சை ஆரம்பிக்கும் தினத்திற்கு முன்னரே அது குறித்து விசாரித்து பரீட்சை மண்டபத்தை சரியாக இனங்காணல் சிறந்தது;
    (iii) பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்தி ஒவ்வொரு பாடங்களுக்குத் தோற்றும் போதும் தனது ஆள் அடையாள அட்டையை வழங்கி தனது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்.
        (a) ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்வதற்குத் தேவையான ஆவணங்களை பரீட்சை மண்டபத்தில் சமர்ப்பிக்காவிடின், பரீட்சார்த்தியாய் இருத்தல் இரத்துச் செய்யப்பட நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதுடன், ஏதேனும் காரணத்தால் அதற்குத் தேவையான ஆவணங்களை பரீட்சை மண்டபத்திற்கு கொண்டு வர மறந்திருப்பின் அதனைப் பற்றி பரீட்சை மேற்பார்வையாளருக்கு அறிவித்து பரீட்சை முடிவடைவதற்கு முன்னர் அவற்றைச் சமர்ப்பிப்பதற்குரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.
        (b) சகல பரீட்சார்த்திகளும் தனது ஆள் அடையாளம் தெளிவாக வெளிப்படுத்தும் வகையில், முழு முகத்தையும் நன்றாக அடையாளம் காணக்கூடிய வகையில் பரீட்சை நடைபெறும் கால எல்லையில் பரீட்சை மண்டபத்தில் இருக்க வேண்டும்.
    (iv) பரீட்சார்த்தி புளூடூத் (Bluetooth) போன்ற இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகளை (Electronic Communication Devices) உபயோகிக்கவில்லை என்பதனை உறுதி செய்து கொள்வதற்காக பரீட்சை மண்டபத்தில் தனது இரு காதுகளையும் தெளிவாகத் தெரியும் வகையில் வைத்திருத்தல் வேண்டும்;
    (v) பரீட்சை மண்டபத்தில் உமக்கு வழங்கப்படுகின்ற தாள்களை விடுத்து வேறு எவ்வித கடதாசிகளையும் விடையளிப்பதற்கு உபயோகிக்கக் கூடாது. எஞ்சிய கடதாசிகளை மற்றும் வேறு பொருட்களை அசுத்தப்படுத்தாது மீண்டும் உபயோகிக்கக்கூடிய வகையில் உமது மேசையின் மேல் வைக்க வேண்டும்;
    (vi) பரீட்சார்த்திகள் தங்களது பேனா, பென்சில், அழிறப்பர், அடிமட்டம், கேத்திரகணித உபகரணங்கள், வர்ணப் பென்சில் பெட்டி, வர்ண சோக் பெட்டி போன்றவற்றைக் கொண்டு வருதல் வேண்டும்;
    (vii) நீங்கள் உபயோகிக்கும் விடையளிக்கும் புத்தகம் மற்றும் சகல தாள்களிலும் விடையெழுத தொடங்கும் போது உடனடியாக சுட்டெண்ணைத் தெளிவாகக் குறிப்பிட வேண்டும். விடைத்தாள்களின் இருபுறமும் தெளிவாக, சுத்தமாக விடையெழுத வேண்டும். வினாவொன்றின் ஒரு பகுதிக்கு விடையெழுதிய பின் அவ் வினாவின் மற்றைய பகுதியை ஆரம்பிப்பதற்கு முன் ஒரு வரியையாவது வெறுமையாக விடுதல் வேண்டும். ஒவ்வொரு வினாக்களுக்குமான விடையினைப் புதிய பக்கத்தில் ஆரம்பித்தல் வேண்டும்;
    (viii) விடையளிக்கும் தாளின் இடதுபுற விளிம்புக்கோடு காணப்படுவது வினாக்களின் இலக்கங்களை எழுதுவதற்காகும். வலதுபுற விளிம்புக்கோடு ஒதுக்கப்பட்டிருப்பது மதிப்பிடுபவரின் உபயோகத்திற்காகும். அதனால் அவற்றில் எதுவும் எழுதுதலாகாது. உம்மால் விடையளிக்கப்பட்ட வினாக்களின் இலக்கங்களைப் பிழையாக இடுவது குழப்பத்திற்குக் காரணமாக அமையும் என்பதனால் வினா இலக்கத்தைச் சரியாக எழுதுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்;
    (ix) கணித வினாக்களுக்கு விடையளிக்கும் போது கணக்குச் செய்முறைகள் பார்த்த மற்றும் பரும்படி வேலைகள் அந்தந்த ஒழுங்கில் கணக்கிற்கான விடையைக் கண்டு பிடித்ததன் ஒரு பகுதியாகக் காட்டப்பட வேண்டும். அவசியமான இடங்களில் வரையப்படும் வரிப்படங்கள் மற்றும் படங்கள் சரியானவையாகவும் குறிப்பிடத்தக்க அளவு பெரிதானதாகவும் இருத்தல் வேண்டும்;
    (x) கட்டாயமான வினா மற்றும் தெரிவு செய்யப்பட வேண்டிய ஏனைய வினாக்கள் தொடர்பாக வினாப்பத்திரத்தில் ஆரம்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசித்தல் வேண்டும். வினாப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப விடையளிக்கப்படாத சந்தர்ப்பங்களில் புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது;
    (xi) ஒவ்வொரு வினாவிற்கும் விடையளித்து முடிந்த பின் விடையளித்த புத்தகத்திற்கு மேலதிகமாக எழுதிய தாள்களை பக்க இலக்கங்களின் ஒழுங்கில் இணைத்து இடதுபுற மேல்மூலையில் கழறாத வகையில் கட்டுதல்/இணைத்தல் வேண்டும். விடைப்பத்திரத்தைக் கையளிக்கும் முன் சகல விடைத்தாள்களும் இணைக்கப்பட்டுள்ளனவா என்பதனை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். விடைப்பத்திரத்தைக் கையளித்த பின் பரீட்சை மண்டபத்திற்கு வெளியே கொண்டு செல்லப்பட்ட எந்தவொரு விடை எழுதிய தாளும் மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்பட மாட்டாது;
    (xii) உங்கள் விடைத்தாளை பரீட்சை மேற்பார்வையாளரிடம் அல்லது பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவரிடம் கையளித்தல் வேண்டும். விடைப்பத்திரங்களை சேகரிக்கும் வரை உங்களது ஆசனத்தில் அமர்ந்திருத்தல் வேண்டும். அவ்வாறு செய்வதற்குத் தவறுவதானது, சிலவேளை உமது விடைப்பத்திரம் காணாமல் போவதற்கும் நீர் ஏதாவது பாடத்திற்கு சமுகமளிக்கவில்லை என்று கருதுவதற்கும் காரணமாக அமையும்;
    (xiii) ஏதாவது காரணத்துக்காக பரீட்சை மேற்பார்வையாளருடன் அல்லது பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவருடன் கதைக்க வேண்டிய அவசியம் ஏற்படின், ஏனையவர்களுக்கு இடையூறு ஏற்படாத வகையில் மேசையில் இருமுறை தட்டுவதன் மூலம் சமிக்ஞை செய்தல் வேண்டும்.

**பரீட்சைகள் ஆணையாளர் நாயகம்.**

**இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்,**
**பெலவத்தை,**
**பத்தரமுல்லை.**

# பதவிகள் - வெற்றிடம்

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

### முஸ்லிம் / மேலதிக முஸ்லிம் விவாக பதிவாளர் பதவி – (சிங்களம்) புத்தளம் மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்ட பிரிவுகளுக்குரிய முஸ்லிம் / மேலதிக முஸ்லிம் விவாகம் பதிவு செய்தல் பதிவாளர் பதவிக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர் உரிய முஸ்லிம் விவாகம் பதிவு செய்தல் பிரிவினுள் நிரந்தர வதிவிடதாரியாகவும் மற்றும் போதியளவான ஆதனத்திற்கு உரித்தான பிரதேசவாசிகளின் மதிப்பினைப் பெறும் ஆளுமையுடையவராகவும் இருத்தல் வேண்டும்.

2. இந்தப் பதவி ஊதியம் வழங்கப்படாத சேவையாவதுடன் இதற்காக ஆண்கள் மாத்திரம் விண்ணப்பிக்க இயலும்.

3. விண்ணப்பம் கோரப்படும் இறுதித் தினம், விண்ணப்பதாரரின் வயது 30 வருடங்களுக்கு குறையாதிருத்தல் வேண்டும் என்பதுடன் 55 வருடங்களுக்கு மேற்படாதிருத்தல் வேண்டும்.

4. இளைப்பாறும் உச்ச வயதெல்லை 65 ஆண்டுகள் ஆவதுடன் 65 வயது தொடக்கம் 70 வரை, பதிவாளரினால் மேற்கொள்ளப்படும் சேவையின் திருப்தித்தன்மை மற்றும் உடல், மன உறுதி ஆகியவற்றிற்கு அமைய ஆண்டுதோறும் சேவைக்காலம் நீடிக்கப்படும். அவ்வாறு சேவைக் காலம் நீடிக்கப்படாத எந்தவொரு சந்தர்ப்பத்திலும் குறித்த பதிவாளரின் சேவை முடிவுறுத்தப்படும்.

5. முஸ்லிம் விவாகப் பதிவாளர் பதவிக்காக விண்ணப்பிப்பவர்கள் விவாகமானவராக இருத்தல் வேண்டும் என்பதுடன் தாரமிழந்தவர் அல்லது விவாகரத்தானவராக இருத்தல் கூடாது.

6. பிரிவில் மக்களின் மொழித் தேவைக்கிணங்க இரண்டாம் மொழியில் கடமையினை மேற்கொள்ளும் இயலுமையுடன் இரண்டுக்கு மேற்படாத தவணைகளில் சிங்களம்/தமிழ் மொழிக்காக (பதவிக்குரிய மொழிமூலம்) சிறப்பு சித்திகள் உட்பட க. பொ. த. (சா./த.) பரீட்சையில் குறைந்தது சிறப்புச் சித்திகள் இரண்டுடன் (02) ஆறு பாடங்களில் (06) சித்தி பெற்றிருத்தல் வேண்டும் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

**கருத்திற் கொள்ளவும்.**- க. பொ. த. (சா./த.) அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் ஒரு பாடம் இரண்டு பகுதிகளாக சித்தியடைந்திருக்கும் சந்தர்ப்பங்களில், அது ஒரு பாடமாக கருதப்படல் வேண்டும். அந்த பாடப் பகுதிகள் இரண்டும் சித்தியடைந்திருந்தால் மாத்திரமே அந்தப் பாடம் சித்தியடைந்ததாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.மௌலவி சான்றிதழ் அல்லது அராபி டிப்ளோமா சான்றிதழ் பெற்றிருத்தல், மேற்குறிப்பிடப்பட்ட அடிப்படைத் தகைமைகளினைப் பூர்த்தி செய்திருத்தலாக கருதப்படும்.

7. பிரிவில் அனைவருக்கும் அல்லது அநேகமானவர்களுக்கு இலகுவாக நெருங்கக்கூடிய பிரிவின் மத்திய இடமொன்றில் அமைந்த பதவியின் கௌரவத்தினை பாதுகாக்கும் விதத்திலான கட்டிடத்தில் அலுவலகத்தினை அமைப்பதற்கு இயலுமாயிருத்தல் வேண்டும்.

8. விண்ணப்பம் கோரப்படும் முஸ்லிம் விவாகம் பதிவு செய்தல் பிரிவுக்கு உட்புகுத்தப்படும் கிராம பட்டியல்கள்/ கிராம அலுவலர் பிரிவு, கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் ஆகிய மேலதிக விபரங்கள் கீழ்க் குறிப்பிடப்படும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட மாவட்டச் செயலகம், பிரதேச செயலகம் அல்லது உரிய காணி மற்றும் மாவட்டச் செயலகம், கிராம அலுவலர் அலுவலகம், சமுர்த்தி அபிவிருத்திச் சங்க அலுவலகம் மற்றும் தபால் அலுவலகம் ஆகிய பிரிவின் பிரசித்தமான இடங்களில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள அறிவித்தல்களில் பார்த்துக்கொள்ள இயலும்.

9. இதற்குத் தேவையான விண்ணப்பங்கள் மற்றும் கிராம பட்டியல்கள்/ கிராம அலுவலர் பிரிவுகள் உள்ளடங்கிய "இணைப்பு I" உரிய மாவட்டத்தின் மாவட்டச் செயலாளர், (அரசாங்க அதிபர்) அலுவலகத்தில் மற்றும் உரிய காணி

மற்றும் மாவட்டப் பதிவகத்தில் அல்லது பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ள இயலும். விண்ணப்பம் பதிவாளர் நாயகம் திணைக்களத்தின் இணையத் தளத்திலும் (www.rgd.gov.lk) பெற்றுக்கொள்ள இயலும்.

10. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 2026, ஓகத்து மாதம் 31 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னதாக அட்டவணையில் குறிப்பிடப்பட்ட முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

எஸ். ஜலதீபன்,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2026, யூலை 08.

**அட்டவணை**

| *மாவட்டம்* | *பிரதேச செயலகப் பிரிவு* | *விண்ணப்பம் கோரப்படும் பிரிவும் பதவியும்* | *விண்ணப்பம் அனுப்பப்பட வேண்டிய முகவரி* |
|---|---|---|---|
| புத்தளம் | முந்தல் | புத்தளம் பற்று பிரிவின் பெருக்குவட்டான் பிரதேசத்தின் முஸ்லிம் விவாகப் பதிவாளர் பதவி. (சிங்கள மொழி மூலம்) | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், புத்தளம் |
| புத்தளம் | சிலாபம் | வடக்கு பிட்டிகல் கோரளை பிரிவின் சிலாபம் நகர் பிரதேசத்தின் முஸ்லிம் விவாகப் பதிவாளர் பதவி. (சிங்கள மொழி மூலம்) | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், புத்தளம் |

07-484

---

**பதிவாளர் நாயகம் திணைக்களம்**

**சிங்கள மொழி பிறப்பு, இறப்பு மற்றும் விவாகம்/ மேலதிக விவாகம் (கண்டிய/பொது) பதிவாளர் பதவி - பதுளை மாவட்டம்**

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்ட பிரிவில் உள்ள பிறப்பு, இறப்பு மற்றும் விவாகம்/ மேலதிக விவாகம் பதிவாளர் பதவிக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர் உரிய பிறப்பு, இறப்பு மற்றும் விவாகம்/மேலதிக விவாகம் பிரிவினுள் நிரந்தர வதிவிடதாரி யாகவும் மற்றும் போதியளவான ஆதனத்திற்கு உரித்தான பிரதேசவாசிகளின் மதிப்பினைப் பெறும் ஆளுமையுடையவராக இருத்தல் வேண்டும்.

2. இந்தப் பதவி ஊதியம் வழங்கப்படாத சேவையாவதுடன் இதற்காக ஆண்/ பெண் இருபாலாரும் விண்ணப்பிக்க இயலும்.

3. விண்ணப்பம் கோரப்படும் இறுதித் தினம், விண்ணப்பதாரரின் வயது 30 வருடங்களுக்கு குறையாதிருத்தல் வேண்டும் என்பதுடன், 55 வருடங்களுக்கு மேற்படாதிருத்தல் வேண்டும்.

4. இளைப்பாறும் உச்ச வயதெல்லை 65 ஆண்டுகள் ஆவதுடன் 65 வயது தொடக்கம் 70 வரை, பதிவாளரினால் மேற்கொள்ளப்படும் சேவையின் திருப்தித்தன்மை மற்றும் உடல், மன உறுதி ஆகியவற்றிற்கு அமைய ஆண்டுதோறும் சேவைக்காலம் நீடிக்கப்படும். அவ்வாறு சேவைக் காலம் நீடிக்கப்படாத எந்தவொரு சந்தர்ப்பத்திலும் குறித்த பதிவாளரின் சேவை முடிவுறுத்தப்படும்.

5. விவாகப் பதிவாளர் பதவிக்காக விண்ணப்பிப்பவர்கள் விவாகமானவராக இருத்தல் வேண்டும் என்பதுடன் தாரமிழந்தவர் அல்லது விவாகரத்தானவராக இருத்தல் கூடாது.

6. பிரிவில் மக்களின் மொழித் தேவைக்கிணங்க இரண்டாம் மொழியில் கடமையினை மேற்கொள்ளும் இயலுமையுடன் இரண்டுக்கு மேற்படாத தவணைகளில் சிங்கள மொழிக்கான சிறப்பு சித்தி உட்பட க. பொ. த. (சா.த.) பரீட்சையில் குறைந்தது சிறப்புச் சித்திகள் இரண்டுடன் (02) ஆறு பாடங்களில் (06) சித்தி பெற்றிருத்தல் வேண்டும் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

**கருத்திற் கொள்ளவும்.-** க. பொ. த. (சா./த.) அல்லது அதற்கு சமமான பரீட்சையில் ஒரு விடயம் இரண்டு பகுதிகளாக சித்தியடைந்திருக்கும் சந்தர்ப்பங்களில், அது ஒரு விடயமாக கருதப்படல் வேண்டும். அந்த விடய பகுதிகள் இரண்டும் சித்தியடைந்திருந்தால் மாத்திரமே அவ்விடயம் சித்தியடைந்ததாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

7. பிரிவில் அனைவருக்கும் அல்லது அநேகமானவர்களுக்கு இலகுவாக நெருங்கக்கூடிய பிரிவின் மத்திய இடமொன்றில் அமைந்த பதவியின் கௌரவத்தினை பாதுகாக்கும் விதத்திலான கட்டிடத்தில் அலுவலகத்தினை அமைப்பதற்கு இயலுமாயிருத்தல் வேண்டும்.

8. விண்ணப்பம் கோரப்படும் பிறப்பு, இறப்பு மற்றும் விவாகம்/மேலதிக விவாகம் பதிவு செய்தல் பிரிவிற்கு உட்புகுத்தப்படும் கிராம பட்டியல்கள்/கிராம அலுவலர் பிரிவு, கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் ஆகிய மேலதிக விபரங்கள் கீழ்க் குறிப்பிடப்படும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட மாவட்டச் செயலகம், பிரதேச செயலகம் அல்லது உரிய காணி மற்றும் மாவட்டச் செயலகம், கிராம அலுவலர் அலுவலகம், சமுர்த்தி அபிவிருத்திச் சங்க அலுவலகம் மற்றும் தபால் அலுவலகம் ஆகிய பிரிவின் பிரசித்தமான இடங்களில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள அறிவித்தல்களில் பார்த்துக்கொள்ள இயலும்.

9. இதற்குத் தேவையான விண்ணப்பங்கள் மற்றும் கிராம பட்டியல்கள்/ கிராம அலுவலர் பிரிவுகள் உள்ளடங்கிய “இணைப்பு 1” உரிய மாவட்டத்தின் மாவட்டச் செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்தில் மற்றும் உரிய காணி மற்றும் மாவட்டப் பதிவகத்தில் அல்லது பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ள இயலும். விண்ணப்பம் பதிவாளர் நாயகம் திணைக்களத்தின் இணையத்தளத்திலும் (www.rgd.gov.lk) பெற்றுக்கொள்ள இயலும்.

10. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 2026, ஓகத்து மாதம் 31 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னதாக அட்டவணையில் குறிப்பிடப்பட்ட முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

எஸ். ஜலதீபன்,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2026, யூலை 02.

**அட்டவணை**

| *மாவட்டம்* | *பிரதேச செயலகப் பிரிவு* | *விண்ணப்பம் கோரப்படும் பிரிவும் பதவியும்* | *விண்ணப்பம் அனுப்பப்பட வேண்டிய முகவரி* |
|---|---|---|---|
| பதுளை | வெளிமடை | பொரலந்தை பிரிவின் பிறப்பு, இறப்பு மற்றும் உடுகிந்த பிரிவின் விவாக (கண்டிய/ சாதாரண) பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், பதுளை |

07-485

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

## சிங்கள மொழி பிறப்பு, இறப்பு மற்றும் விவாகம்/ மேலதிக விவாகம் (கண்டிய/பொது) பதிவாளர் பதவி - மொணராகலை மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்ட பிரிவில் உள்ள பிறப்பு, இறப்பு மற்றும் விவாகம்/ மேலதிக விவாகம் பதிவாளர் பதவிக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர் உரிய பிறப்பு, இறப்பு மற்றும் விவாகம்/மேலதிக விவாகம் பிரிவினுள் நிரந்தர வதிவிடதாரி யாகவும் மற்றும் போதியளவான ஆதனத்திற்கு உரித்தான பிரதேசவாசிகளின் மதிப்பினைப் பெறும் ஆளுமையுடையவராக இருத்தல் வேண்டும்.

2. இந்தப் பதவி ஊதியம் வழங்கப்படாத சேவையாவதுடன் இதற்காக ஆண்/ பெண் இருபாலாரும் விண்ணப்பிக்க இயலும்.

3. விண்ணப்பம் கோரப்படும் இறுதித் தினம், விண்ணப்பதாரரின் வயது 30 வருடங்களுக்கு குறையாதிருத்தல் வேண்டும் என்பதுடன், 55 வருடங்களுக்கு மேற்படாதிருத்தல் வேண்டும்.

4. இளைப்பாறும் உச்ச வயதெல்லை 65 ஆண்டுகள் ஆவதுடன் 65 வயது தொடக்கம் 70 வரை, பதிவாளரினால் மேற்கொள்ளப்படும் சேவையின் திருப்தித்தன்மை மற்றும் உடல், மன உறுதி ஆகியவற்றிற்கு அமைய ஆண்டுதோறும் சேவைக்காலம் நீடிக்கப்படும். அவ்வாறு சேவைக் காலம் நீடிக்கப்படாத எந்தவொரு சந்தர்ப்பத்திலும் குறித்த பதிவாளரின் சேவை முடிவுறுத்தப்படும்.

5. விவாகப் பதிவாளர் பதவிக்காக விண்ணப்பிப்பவர்கள் விவாகமானவராக இருத்தல் வேண்டும் என்பதுடன் தாரமிழந்தவர் அல்லது விவாகரத்தானவராக இருத்தல் கூடாது.

6. பிரிவில் மக்களின் மொழித் தேவைக்கிணங்க இரண்டாம் மொழியில் கடமையினை மேற்கொள்ளும் இயலுமையுடன் இரண்டுக்கு மேற்படாத தவணைகளில் சிங்கள மொழிக்கான சிறப்பு சித்தி உட்பட க. பொ. த. (சா.த.) பரீட்சையில் குறைந்தது சிறப்புச் சித்திகள் இரண்டுடன் (02) ஆறு பாடங்களில் (06) சித்தி பெற்றிருத்தல் வேண்டும் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

**கருத்திற் கொள்ளவும்.-** க. பொ. த. (சா./த.) அல்லது அதற்கு சமமான பரீட்சையில் ஒரு விடயம் இரண்டு பகுதிகளாக சித்தியடைந்திருக்கும் சந்தர்ப்பங்களில், அது ஒரு விடயமாக கருதப்படல் வேண்டும். அந்த விடய பகுதிகள் இரண்டும் சித்தியடைந்திருந்தால் மாத்திரமே அவ்விடயம் சித்தியடைந்ததாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

7. பிரிவில் அனைவருக்கும் அல்லது அநேகமானவர்களுக்கு இலகுவாக நெருங்கக்கூடிய பிரிவின் மத்திய இடமொன்றில் அமைந்த பதவியின் கௌரவத்தினை பாதுகாக்கும் விதத்திலான கட்டிடத்தில் அலுவலகத்தினை அமைப்பதற்கு இயலுமாயிருத்தல் வேண்டும்.

8. விண்ணப்பம் கோரப்படும் பிறப்பு, இறப்பு மற்றும் விவாகம்/மேலதிக விவாகம் பதிவு செய்தல் பிரிவிற்கு உட்புகுத்தப்படும் கிராம பட்டியல்கள்/கிராம அலுவலர் பிரிவு, கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் ஆகிய மேலதிக விபரங்கள் கீழ்க் குறிப்பிடப்படும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட மாவட்டச் செயலகம், பிரதேச செயலகம் அல்லது உரிய காணி மற்றும் மாவட்டச் செயலகம், கிராம அலுவலர் அலுவலகம், சமுர்த்தி அபிவிருத்திச் சங்க அலுவலகம் மற்றும் தபால் அலுவலகம் ஆகிய பிரிவின் பிரசித்தமான இடங்களில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள அறிவித்தல்களில் பார்த்துக்கொள்ள இயலும்.

9. இதற்குத் தேவையான விண்ணப்பங்கள் மற்றும் கிராம பட்டியல்கள்/ கிராம அலுவலர் பிரிவுகள் உள்ளடங்கிய “இணைப்பு 1” உரிய மாவட்டத்தின் மாவட்டச் செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்தில் மற்றும் உரிய காணி மற்றும் மாவட்டப் பதிவகத்தில் அல்லது பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ள இயலும். விண்ணப்பம் பதிவாளர் நாயகம் திணைக்களத்தின் இணையத்தளத்திலும் (www.rgd.gov.lk) பெற்றுக்கொள்ள இயலும்.

10. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 2026, ஓகத்து மாதம் 31 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னதாக அட்டவணையில் குறிப்பிடப்பட்ட முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

எஸ். ஜலதீபன்,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2026, யூலை 14.

**அட்டவணை**

| *மாவட்டம்* | *பிரதேச செயலகப் பிரிவு* | *விண்ணப்பம் கோரப்படும் பிரிவும் பதவியும்* | *விண்ணப்பம் அனுப்பப்பட வேண்டிய முகவரி* |
|---|---|---|---|
| மொணராகலை | மடுல்ல | பொத்துலியந்த பிரிவின் பிறப்பு, இறப்பு மற்றும் மடுல்ல பிரிவின் விவாகம் (கண்டிய/ சாதாரண) விவாகப் பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், மொணராகலை |

07-486

---

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

## சிங்கள மொழி பிறப்பு, இறப்பு மற்றும் விவாகம்/ மேலதிக விவாகம் (கண்டிய/பொது) பதிவாளர் பதவி - நுவரெலியா மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்ட பிரிவில் உள்ள பிறப்பு, இறப்பு மற்றும் விவாகம்/ மேலதிக விவாகம் பதிவாளர் பதவிக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர் உரிய பிறப்பு, இறப்பு மற்றும் விவாகம்/மேலதிக விவாகம் பிரிவினுள் நிரந்தர வதிவிடதாரியாகவும் மற்றும் போதியளவான ஆதனத்திற்கு உரித்தான பிரதேசவாசிகளின் மதிப்பினைப் பெறும் ஆளுமையுடையவராக இருத்தல் வேண்டும்.

2. இந்தப் பதவி ஊதியம் வழங்கப்படாத சேவையாவதுடன் இதற்காக ஆண்/ பெண் இருபாலாரும் விண்ணப்பிக்க இயலும்.

3. விண்ணப்பம் கோரப்படும் இறுதித் தினம், விண்ணப்பதாரரின் வயது 30 வருடங்களுக்கு குறையாதிருத்தல் வேண்டும் என்பதுடன், 55 வருடங்களுக்கு மேற்படாதிருத்தல் வேண்டும்.

4. இளைப்பாறும் உச்ச வயதெல்லை 65 ஆண்டுகள் ஆவதுடன் 65 வயது தொடக்கம் 70 வரை, பதிவாளரினால் மேற்கொள்ளப்படும் சேவையின் திருப்தித்தன்மை மற்றும் உடல், மன உறுதி ஆகியவற்றிற்கு அமைய ஆண்டுதோறும் சேவைக்காலம் நீடிக்கப்படும். அவ்வாறு சேவைக் காலம் நீடிக்கப்படாத எந்தவொரு சந்தர்ப்பத்திலும் குறித்த பதிவாளரின் சேவை முடிவுறுத்தப்படும்.

5. விவாகப் பதிவாளர் பதவிக்காக விண்ணப்பிப்பவர்கள் விவாகமானவராக இருத்தல் வேண்டும் என்பதுடன் தாரமிழந்தவர் அல்லது விவாகரத்தானவராக இருத்தல் கூடாது.

6. பிரிவில் மக்களின் மொழித் தேவைக்கிணங்க இரண்டாம் மொழியில் கடமையினை மேற்கொள்ளும் இயலுமையுடன் இரண்டுக்கு மேற்படாத தவணைகளில் சிங்கள மொழிக்கான சிறப்பு சித்தி உட்பட க. பொ. த. (சா.த.) பரீட்சையில் குறைந்தது சிறப்புச் சித்திகள் இரண்டுடன் (02) ஆறு பாடங்களில் (06) சித்தி பெற்றிருத்தல் வேண்டும் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

**கருத்திற் கொள்ளவும்.-** க. பொ. த. (சா./த.) அல்லது அதற்கு சமமான பரீட்சையில் ஒரு விடயம் இரண்டு பகுதிகளாக சித்தியடைந்திருக்கும் சந்தர்ப்பங்களில், அது ஒரு விடயமாக கருதப்படல் வேண்டும். அந்த விடய பகுதிகள் இரண்டும் சித்தியடைந்திருந்தால் மாத்திரமே அவ்விடயம் சித்தியடைந்ததாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

7. பிரிவில் அனைவருக்கும் அல்லது அநேகமானவர்களுக்கு இலகுவாக நெருங்கக்கூடிய பிரிவின் மத்திய இடமொன்றில் அமைந்த பதவியின் கௌரவத்தினை பாதுகாக்கும் விதத்திலான கட்டிடத்தில் அலுவலகத்தினை அமைப்பதற்கு இயலுமாயிருத்தல் வேண்டும்.

8. விண்ணப்பம் கோரப்படும் பிறப்பு, இறப்பு மற்றும் விவாகம்/மேலதிக விவாகம் பதிவு செய்தல் பிரிவிற்கு உட்புகுத்தப்படும் கிராம பட்டியல்கள்/கிராம அலுவலர் பிரிவு, கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் ஆகிய மேலதிக விபரங்கள் கீழ்க் குறிப்பிடப்படும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட மாவட்டச் செயலகம், பிரதேச செயலகம் அல்லது உரிய காணி மற்றும் மாவட்டச் செயலகம், கிராம அலுவலர் அலுவலகம், சமுர்த்தி அபிவிருத்திச் சங்க அலுவலகம் மற்றும் தபால் அலுவலகம் ஆகிய பிரிவின் பிரசித்தமான இடங்களில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள அறிவித்தல்களில் பார்த்துக்கொள்ள இயலும்.

9. இதற்குத் தேவையான விண்ணப்பங்கள் மற்றும் கிராம பட்டியல்கள்/ கிராம அலுவலர் பிரிவுகள் உள்ளடங்கிய “இணைப்பு 1” உரிய மாவட்டத்தின் மாவட்டச் செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்தில் மற்றும் உரிய காணி மற்றும் மாவட்டப் பதிவகத்தில் அல்லது பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ள இயலும். விண்ணப்பம் பதிவாளர் நாயகம் திணைக்களத்தின் இணையத்தளத்திலும் (www.rgd.gov.lk) பெற்றுக்கொள்ள இயலும்.

10. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 2026, ஓகத்து மாதம் 31 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னதாக அட்டவணையில் குறிப்பிடப்பட்ட முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

எஸ். ஜலதீபன்,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2026, யூலை 26.

**அட்டவணை**

| *மாவட்டம்* | *பிரதேச செயலகப் பிரிவு* | *விண்ணப்பம் கோரப்படும் பிரிவும் பதவியும்* | *விண்ணப்பம் அனுப்பப்பட வேண்டிய முகவரி* |
|---|---|---|---|
| நுவரெலியா | வலப்பனை | வலப்பனை பிரிவின் மேலதிக விவாக (கண்டிய/சாதாரண) பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், நுவரெலியா |
| நுவரெலியா | வலப்பனை | வலப்பனை ஒயபலாத்த பிரிவின் மேலதிக விவாக (கண்டிய/சாதாரண) பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், நுவரெலியா |
| நுவரெலியா | அம்பகமுவ | அம்பகமுவ வடக்கு பிரிவின் மேலதிக விவாக (கண்டிய/சாதாரண) பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், நுவரெலியா |

07-530

**பதிவாளர் நாயகம் திணைக்களம்**

சிங்கள மொழியில் பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவி – நுவரெலியா மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்ட பிரிவில் உள்ள பிறப்பு மற்றும் இறப்பு பதிவு செய்தல் பதிவாளர் பதவிக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர் உரிய பிறப்பு மற்றும் இறப்பு பதிவு செய்தல் பிரிவினுள் நிரந்தர வதிவிடதாரியாகவும் மற்றும் போதியளவான ஆதனத்திற்கு உரித்தான பிரதேசவாசிகளின் மதிப்பினைப் பெறும் ஆளுமையுடையவராக இருத்தல் வேண்டும்.

2. இந்தப் பதவி ஊதியம் வழங்கப்படாத சேவையாவதுடன் இதற்காக ஆண்/ பெண் இருபாலாரும் விண்ணப்பிக்க இயலும்.

3. விண்ணப்பம் கோரப்படும் இறுதித் தினம், விண்ணப்பதாரரின் வயது 30 வருடங்களுக்கு குறையாதிருத்தல் வேண்டும் என்பதுடன் 55 வருடங்களுக்கு மேற்படாதிருத்தல் வேண்டும்.

4. இளைப்பாறும் உச்ச வயதெல்லை 65 ஆண்டுகள் ஆவதுடன் 65 வயது தொடக்கம் 70 வரை, பதிவாளரினால் மேற்கொள்ளப்படும் சேவையின் திருப்தித்தன்மை மற்றும் உடல், மன உறுதி ஆகியற்றிற்கு அமைய ஆண்டுதோறும் சேவைக்காலம் நீடிக்கப்படும். அவ்வாறு சேவைக் காலம் நீடிக்கப்படாத எந்தவொரு சந்தர்ப்பத்திலும் குறித்த பதிவாளரின் சேவை முடிவுறுத்தப்படும்.

5. உரிய பிரிவில் மக்களின் மொழித் தேவைக்கிணங்க இரண்டாம் மொழியில் கடமையினை மேற்கொள்ளும் இயலுமையுடன் இரண்டுக்கு மேற்படாத தவணைகளில் சிங்களம் மொழிக்கான சிறப்பு சித்தி உட்பட க. பொ. த. (சா./ த.) பரீட்சையில் குறைந்தது சிறப்புச் சித்திகள் இரண்டுடன் (02) ஆறு விடயங்களில் (06) சித்தி பெற்றிருத்தல் வேண்டும் அல்லது அதற்கு சமமான பரீட்சையில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

**கருத்திற் கொள்ளவும்.**- க. பொ. த. (சா./த.) அல்லது அதற்கு சமமான பரீட்சையில் ஒரு விடயம் இரண்டு பகுதிகளாக சித்தியடைந்திருக்கும் சந்தர்ப்பங்களில், அது ஒரு விடயமாக கருதப்படல் வேண்டும். அந்த விடய பகுதிகள் இரண்டும் சித்தியடைந்திருந்தால் மாத்திரமே அவ்விடயம் சித்தியடைந்ததாக கருத்திற்கொள்ளப்படல் வேண்டும்.

6. உரிய பிரிவில் அனைவருக்கும் அல்லது அநேகமானவர்களுக்கு இலகுவாக நெருங்கக்கூடிய பிரிவின் மத்திய இடமொன்றில் அமைந்த பதவியின் கௌரவத்தினை பாதுகாக்கும் விதத்திலான கட்டிடத்தில் அலுவலகத்தினை அமைப்பதற்கும் இயலுமாயிருத்தல் வேண்டும்.

வைத்தியசாலையினுள் பிறப்பு, இறப்புக்களினை பதிவு செய்யும் பிறப்பு, இறப்பு பதிவாளர்களினை சேர்த்துக் கொள்ளும் பொழுது விண்ணப்பதாரர் அரசாங்க வைத்தியசாலையில் போதுமான அலுவலக வசதி கிடைக்கப்பெறாத சந்தர்ப்பங்களில் வைத்தியசாலைக்கு 01 கி.மீ. வரையிலான தூரத்தில் பிரிவிற்குள் அமைந்துள்ள பொருத்தமான வேறு கட்டிடத்தில் அலுவலகத்தினை அமைப்பதற்கு இயலுமாயிருத்தல் வேண்டும்.

7. விண்ணப்பம் கோரப்படும் பிறப்பு மற்றும் இறப்பு பதிவு செய்தல் பிரிவிற்கு உட்புகுத்தப்படும் கிராம பட்டியல்கள்/ கிராம அலுவலர் பிரிவு, கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் ஆகிய மேலதிக விபரங்கள் கீழ்க் குறிப்பிடப்படும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட மாவட்டச் செயலகம், பிரதேச செயலகம் அல்லது உரிய காணி மற்றும் மாவட்டச் செயலகம், கிராம அலுவலர் அலுவலகம், சமுர்த்தி அபிவிருத்திச் சங்க அலுவலகம் மற்றும் தபால் அலுவலகம் ஆகிய பிரிவின் பிரசித்தமான இடங்களில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள அறிவித்தல்களில் பார்த்துக்கொள்ள இயலும்.

8. இதற்குத் தேவையான விண்ணப்பங்கள் மற்றும் கிராம பட்டியல்கள்/ கிராம அலுவலர் பிரிவுகள் உள்ளடங்கிய “இணைப்பு I” உரிய மாவட்டத்தின் மாவட்டச் செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்தில் மற்றும் உரிய காணி மற்றும் மாவட்டப் பதிவகத்தில் அல்லது பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ள இயலும். பதிவாளர் நாயகம் திணைக்களத்தின் இணையத்தளத்திலும் (www.rgd.gov.lk) விண்ணப்பங்களைப் பெற்றுக்கொள்ள இயலும்.

9. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 2026, ஓகத்து மாதம் 31 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னதாக அட்டவணையில் குறிப்பிடப்பட்ட முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

எஸ். ஜலதீபன்,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2026, யூலை 20.

**அட்டவணை**

| *மாவட்டம்* | *பிரதேச செயலாளர் பிரிவு* | *விண்ணப்பம் கோரப்படும் பிரிவும் பதவியும்* | *விண்ணப்பம் அனுப்பப்பட வேண்டிய முகவரி* |
|---|---|---|---|
| நுவரெலியா | அம்பகமுவ | ஹட்டன் - டிக்கோயா பிரிவின் பிறப்பு, இறப்பு பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், நுவரெலியா |
| நுவரெலியா | நுவரெலியா | தலவாக்கலை லிந்துல பிரிவின் பிறப்பு, இறப்பு பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், நுவரெலியா |

07-531

---

**பதிவாளர் நாயகம் திணைக்களம்**

**சிங்கள மொழி பிறப்பு, இறப்பு மற்றும் விவாகம்/ மேலதிக விவாகம் (கண்டிய/பொது) பதிவாளர் பதவி - கண்டி மாவட்டம்**

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்ட பிரிவில் உள்ள பிறப்பு, இறப்பு மற்றும் விவாகம்/ மேலதிக விவாகம் பதிவாளர் பதவிக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர் உரிய பிறப்பு, இறப்பு மற்றும் விவாகம்/மேலதிக விவாகம் பிரிவினுள் நிரந்தர வதிவிடதாரி யாகவும் மற்றும் போதியளவான ஆதனத்திற்கு உரித்தான பிரதேசவாசிகளின் மதிப்பினைப் பெறும் ஆளுமையுடையவராக இருத்தல் வேண்டும்.

2. இந்தப் பதவி ஊதியம் வழங்கப்படாத சேவையாவதுடன் இதற்காக ஆண்/ பெண் இருபாலாரும் விண்ணப்பிக்க இயலும்.

3. விண்ணப்பம் கோரப்படும் இறுதித் தினம், விண்ணப்பதாரரின் வயது 30 வருடங்களுக்கு குறையாதிருத்தல் வேண்டும் என்பதுடன், 55 வருடங்களுக்கு மேற்படாதிருத்தல் வேண்டும்.

4. இளைப்பாறும் உச்ச வயதெல்லை 65 ஆண்டுகள் ஆவதுடன் 65 வயது தொடக்கம் 70 வரை, பதிவாளரினால் மேற்கொள்ளப்படும் சேவையின் திருப்தித்தன்மை மற்றும் உடல், மன உறுதி ஆகியவற்றிற்கு அமைய ஆண்டுதோறும் சேவைக்காலம் நீடிக்கப்படும். அவ்வாறு சேவைக் காலம் நீடிக்கப்படாத எந்தவொரு சந்தர்ப்பத்திலும் குறித்த பதிவாளரின் சேவை முடிவுறுத்தப்படும்.

5. விவாகப் பதிவாளர் பதவிக்காக விண்ணப்பிப்பவர்கள் விவாகமானவராக இருத்தல் வேண்டும் என்பதுடன் தாரமிழந்தவர் அல்லது விவாகரத்தானவராக இருத்தல் கூடாது.

6. பிரிவில் மக்களின் மொழித் தேவைக்கிணங்க இரண்டாம் மொழியில் கடமையினை மேற்கொள்ளும் இயலுமையுடன் இரண்டுக்கு மேற்படாத தவணைகளில் சிங்கள மொழிக்கான சிறப்பு சித்தி உட்பட க. பொ. த. (சா.த.) பரீட்சையில் குறைந்தது சிறப்புச் சித்திகள் இரண்டுடன் (02) ஆறு பாடங்களில் (06) சித்தி பெற்றிருத்தல் வேண்டும் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

**கருத்திற் கொள்ளவும்.-** க. பொ. த. (சா./த.) அல்லது அதற்கு சமமான பரீட்சையில் ஒரு விடயம் இரண்டு பகுதிகளாக சித்தியடைந்திருக்கும் சந்தர்ப்பங்களில், அது ஒரு விடயமாக கருதப்படல் வேண்டும். அந்த விடய பகுதிகள் இரண்டும் சித்தியடைந்திருந்தால் மாத்திரமே அவ்விடயம் சித்தியடைந்ததாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

7. பிரிவில் அனைவருக்கும் அல்லது அநேகமானவர்களுக்கு இலகுவாக நெருங்கக்கூடிய பிரிவின் மத்திய இடமொன்றில் அமைந்த பதவியின் கௌரவத்தினை பாதுகாக்கும் விதத்திலான கட்டிடத்தில் அலுவலகத்தினை அமைப்பதற்கு இயலுமாயிருத்தல் வேண்டும்.

8. விண்ணப்பம் கோரப்படும் பிறப்பு, இறப்பு மற்றும் விவாகம்/மேலதிக விவாகம் பதிவு செய்தல் பிரிவிற்கு உட்புகுத்தப்படும் கிராம பட்டியல்கள்/கிராம அலுவலர் பிரிவு, கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் ஆகிய மேலதிக விபரங்கள் கீழ்க் குறிப்பிடப்படும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட மாவட்டச் செயலகம், பிரதேச செயலகம் அல்லது உரிய காணி மற்றும் மாவட்டச் செயலகம், கிராம அலுவலர் அலுவலகம், சமுர்த்தி அபிவிருத்திச் சங்க அலுவலகம் மற்றும் தபால் அலுவலகம் ஆகிய பிரிவின் பிரசித்தமான இடங்களில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள அறிவித்தல்களில் பார்த்துக்கொள்ள இயலும்.

9. இதற்குத் தேவையான விண்ணப்பங்கள் மற்றும் கிராம பட்டியல்கள்/ கிராம அலுவலர் பிரிவுகள் உள்ளடங்கிய "இணைப்பு 1" உரிய மாவட்டத்தின் மாவட்டச் செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்தில் மற்றும் உரிய காணி மற்றும் மாவட்டப் பதிவகத்தில் அல்லது பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ள இயலும். விண்ணப்பம் பதிவாளர் நாயகம் திணைக்களத்தின் இணையத்தளத்திலும் (www.rgd.gov.lk) பெற்றுக்கொள்ள இயலும்.

10. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 2026, ஓகத்து மாதம் 31 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னதாக அட்டவணையில் குறிப்பிடப்பட்ட முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

எஸ். ஜலதீபன்,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2026, யூலை 20.

**அட்டவணை**

| *மாவட்டம்* | *பிரதேச செயலகப் பிரிவு* | *விண்ணப்பம் கோரப்படும் பிரிவும் பதவியும்* | *விண்ணப்பம் அனுப்பப்பட வேண்டிய முகவரி* |
|---|---|---|---|
| கண்டி | உடபலாத்த | கந்துகர இஹல கிழக்கு பிரிவின் பிறப்பு, இறப்பு மற்றும் உடபலாத்த பிரிவின் விவாகம் (கண்டிய/சாதாரண) பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், கண்டி |
| கண்டி | யட்டிநுவர | உடுநுவர - யட்டிநுவர பிரிவின் மேலதிக விவாகம் (கண்டிய/சாதாரண) பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், கண்டி |
| கண்டி | கடவத்சத்தர மற்றும் கங்கவட்ட கோரளை | கடவத்சத்தர மற்றும் கங்கவட்ட கோரளை பிரிவின் பிறப்பு, இறப்பு மற்றும் கண்டி நகர் பிரிவின் விவாக (கண்டிய/சாதாரண) பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், கண்டி |

| *மாவட்டம்* | *பிரதேச செயலகப் பிரிவு* | *விண்ணப்பம் கோரப்படும் பிரிவும் பதவியும்* | *விண்ணப்பம் அனுப்பப்பட வேண்டிய முகவரி* |
|---|---|---|---|
| கண்டி | பஸ்பாகே கோரளை | பஸ்பாகே கோரளை பிரிவின் மேலதிக விவாக (கண்டிய/சாதாரண) பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், கண்டி |
| கண்டி | உடபலாத்த | உடபலாத்த பிரிவின் சிங்ஹாபிட்டிய பிரதேசத்தின் மேலதிக விவாக (கண்டிய/ சாதாரண) பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், கண்டி |
| கண்டி | உடுநுவர | வத்துபொல பிரதேசத்தின் மேலதிக விவாக (கண்டிய/சாதாரண) பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், கண்டி |
| கண்டி | உடுநுவர | உடுநுவர மற்றும் யட்டிநுவர (வெளிகல்லை) பிரிவின் மேலதிக விவாக (கண்டிய/ சாதாரண) பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், கண்டி |
| கண்டி | பாத்தஹேவாஹெட்ட | பாத்தஹேவாஹெட்ட பிரிவின் மேலதிக விவாக (கண்டிய/சாதாரண) பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், கண்டி |

06-532

---

**பதிவாளர் நாயகம் திணைக்களம்**

சிங்கள மொழியில் பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவி – கண்டி மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்ட பிரிவில் உள்ள பிறப்பு மற்றும் இறப்பு பதிவு செய்தல் பதிவாளர் பதவிக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர் உரிய பிறப்பு மற்றும் இறப்பு பதிவு செய்தல் பிரிவினுள் நிரந்தர வதிவிடதாரியாகவும் மற்றும் போதியளவான ஆதனத்திற்கு உரித்தான பிரதேசவாசிகளின் மதிப்பினைப் பெறும் ஆளுமையுடையவராக இருத்தல் வேண்டும்.

2. இந்தப் பதவி ஊதியம் வழங்கப்படாத சேவையாவதுடன் இதற்காக ஆண்/ பெண் இருபாலாரும் விண்ணப்பிக்க இயலும்.

3. விண்ணப்பம் கோரப்படும் இறுதித் தினம், விண்ணப்பதாரரின் வயது 30 வருடங்களுக்கு குறையாதிருத்தல் வேண்டும் என்பதுடன் 55 வருடங்களுக்கு மேற்படாதிருத்தல் வேண்டும்.

4. இளைப்பாறும் உச்ச வயதெல்லை 65 ஆண்டுகள் ஆவதுடன் 65 வயது தொடக்கம் 70 வரை, பதிவாளரினால் மேற்கொள்ளப்படும் சேவையின் திருப்தித்தன்மை மற்றும் உடல், மன உறுதி ஆகியற்றிற்கு அமைய ஆண்டுதோறும் சேவைக்காலம் நீடிக்கப்படும். அவ்வாறு சேவைக் காலம் நீடிக்கப்படாத எந்தவொரு சந்தர்ப்பத்திலும் குறித்த பதிவாளரின் சேவை முடிவுறுத்தப்படும்.

5. உரிய பிரிவில் மக்களின் மொழித் தேவைக்கிணங்க இரண்டாம் மொழியில் கடமையினை மேற்கொள்ளும் இயலுமையுடன் இரண்டுக்கு மேற்படாத தவணைகளில் தமிழ் மொழிக்கான சிறப்பு சித்தி உட்பட க. பொ. த. (சா./ த.) பரீட்சையில் குறைந்தது சிறப்புச் சித்திகள் இரண்டுடன் (02) ஆறு விடயங்களில் (06) சித்தி பெற்றிருத்தல் வேண்டும் அல்லது அதற்கு சமமான பரீட்சையில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

**கருத்திற் கொள்ளவும்.**- க. பொ. த. (சா./த.) அல்லது அதற்கு சமமான பரீட்சையில் ஒரு விடயம் இரண்டு பகுதிகளாக சித்தியடைந்திருக்கும் சந்தர்ப்பங்களில், அது ஒரு விடயமாக கருதப்படல் வேண்டும். அந்த விடய பகுதிகள் இரண்டும் சித்தியடைந்திருந்தால் மாத்திரமே அவ்விடயம் சித்தியடைந்ததாக கருத்திற்கொள்ளப்படல் வேண்டும்.

6. உரிய பிரிவில் அனைவருக்கும் அல்லது அநேகமானவர்களுக்கு இலகுவாக நெருங்கக்கூடிய பிரிவின் மத்திய இடமொன்றில் அமைந்த பதவியின் கௌரவத்தினை பாதுகாக்கும் விதத்திலான கட்டிடத்தில் அலுவலகத்தினை அமைப்பதற்கும் இயலுமாயிருத்தல் வேண்டும்.

வைத்தியசாலையினுள் பிறப்பு, இறப்புக்களினை பதிவு செய்யும் பிறப்பு, இறப்பு பதிவாளர்களினை சேர்த்துக் கொள்ளும் பொழுது விண்ணப்பதாரர் அரசாங்க வைத்தியசாலையில் போதுமான அலுவலக வசதி கிடைக்கப்பெறாத சந்தர்ப்பங்களில் வைத்தியசாலைக்கு 01 கி.மீ. வரையிலான தூரத்தில் பிரிவிற்குள் அமைந்துள்ள பொருத்தமான வேறு கட்டிடத்தில் அலுவலகத்தினை அமைப்பதற்கு இயலுமாயிருத்தல் வேண்டும்.

7. விண்ணப்பம் கோரப்படும் பிறப்பு, இறப்பு மற்றும் விவாகம்/ மேலதிக விவாகம் பதிவு செய்தல் பிரிவிற்கு உட்புகுத்தப்படும் கிராம பட்டியல்கள்/ கிராம அலுவலர் பிரிவு, கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் ஆகிய மேலதிக விபரங்கள் கீழ்க் குறிப்பிடப்படும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட மாவட்டச் செயலகம், பிரதேச செயலகம் அல்லது உரிய காணி மற்றும் மாவட்டச் செயலகம், கிராம அலுவலர் அலுவலகம், சமுர்த்தி அபிவிருத்திச் சங்க அலுவலகம் மற்றும் தபால் அலுவலகம் ஆகிய பிரிவின் பிரசித்தமான இடங்களில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள அறிவித்தல்களில் பார்த்துக்கொள்ள இயலும்.

8. இதற்குத் தேவையான விண்ணப்பங்கள் மற்றும் கிராம பட்டியல்கள்/ கிராம அலுவலர் பிரிவுகள் உள்ளடங்கிய "இணைப்பு I" உரிய மாவட்டத்தின் மாவட்டச் செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்தில் மற்றும் உரிய காணி மற்றும் மாவட்டப் பதிவகத்தில் அல்லது பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ள இயலும். பதிவாளர் நாயகம் திணைக்களத்தின் இணையத் தளத்திலும் விண்ணப்பங்களைப் (www.rgd.gov.lk) பெற்றுக்கொள்ள இயலும்.

9. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 2026, ஓகத்து மாதம் 31 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னதாக அட்டவணையில் குறிப்பிடப்பட்ட முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

எஸ். ஜலதீபன்,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2026, யூலை 26.

**அட்டவணை**

| *மாவட்டம்* | *பிரதேச செயலாளர் பிரிவு* | *விண்ணப்பம் கோரப்படும் பிரிவும் பதவியும்* | *விண்ணப்பம் அனுப்பப்பட வேண்டிய முகவரி* |
|---|---|---|---|
| கண்டி | கடவத்சத்தர மற்றும் கங்கவட்ட கோரளை | கட்டுகஸ்தோட்டை பிரிவின் பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், கண்டி |

07-533

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

### தமிழ் மொழியில் பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவி - கண்டி மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்ட பிரிவில் உள்ள பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவிக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர் உரிய பிறப்பு மற்றும் இறப்பு பதிவு செய்தல் பிரிவினுள் நிரந்தர வதிவிடதாரியாகவும் மற்றும் போதியளவான ஆதனத்திற்கு உரித்தான பிரதேசவாசிகளின் மதிப்பினைப் பெறும் ஆளுமையுடையவராக இருத்தல் வேண்டும்.

2. இந்தப் பதவி ஊதியம் வழங்கப்படாத சேவையாவதுடன் இதற்காக ஆண் /பெண் இருபாலாரும் விண்ணப்பிக்க இயலும்.

3. விண்ணப்பம் கோரப்படும் இறுதித் தினம், விண்ணப்பதாரரின் வயது 30 வருடங்களுக்கு குறையாதிருத்தல் வேண்டும் என்பதுடன், 55 வருடங்களுக்கு மேற்படாதிருத்தல் வேண்டும்.

4. இளைப்பாறும் உச்ச வயதெல்லை 65 ஆண்டுகள் ஆவதுடன் வயது 65 தொடக்கம் 70 வரை, பதிவாளரினால் மேற்கொள்ளப்படும் சேவையின் திருப்தித்தன்மை மற்றும் உடல், மன உறுதி ஆகியற்றிற்கு அமைய ஆண்டுதோறும் சேவைக்காலம் நீடிக்கப்படும். அவ்வாறு சேவைக் காலம் நீடிக்கப்படாத எந்தவொரு சந்தர்ப்பத்திலும் குறித்த பதிவாளரின் சேவை முடிவுறுத்தப்படும்.

5. பிரிவில் மக்களின் மொழித் தேவைக்கிணங்க இரண்டாம் மொழியில் கடமையினை மேற்கொள்ளும் இயலுமையுடன் இரண்டுக்கு மேற்படாத தவணைகளில் தமிழ் மொழிக்காக சிறப்பு சித்தி உள்ளடங்கலாக க. பொ. த. (சா./த.) பரீட்சையில் குறைந்தது சிறப்புச் சித்திகள் இரண்டுடன் (02) ஆறு பாடங்களில் (06) சித்தி பெற்றிருத்தல் வேண்டும் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

**கருத்திற் கொள்ளவும்.**- க. பொ. த. (சா./த.) அல்லது அதற்கு சமமான பரீட்சையில் ஒரு விடயம் இரண்டு பகுதிகளாக சித்தியடைந்திருக்கும் சந்தர்ப்பங்களில், அது ஒரு விடயமாக கருதப்படல் வேண்டும். அந்த விடய பகுதிகள் இரண்டும் சித்தியடைந்திருந்தால் மாத்திரமே அவ்விடயம் சித்தியடைந்ததாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

6. பிரிவில் அனைவருக்கும் அல்லது அநேகமானவர்களுக்கு இலகுவாக நெருங்கக்கூடிய பிரிவின் மத்திய இடமொன்றில் அமைந்த பதவியின் கௌரவத்தினை பாதுகாக்கும் விதத்திலான கட்டிடத்தில் அலுவலகத்தினை அமைப்பதற்கு இயலுமாயிருத்தல் வேண்டும்.

வைத்தியசாலையினுள் பிறப்பு, இறப்புக்களினை பதிவு செய்யும் பிறப்பு, இறப்பு பதிவாளர்களினை சேர்த்துக்கொள்ளும் பொழுது விண்ணப்பதாரர் அரசாங்க வைத்தியசாலையில் போதுமான அலுவலக வசதி கிடைக்கப்பெறாத சந்தர்ப்பங்களில் வைத்தியசாலைக்கு 01 கி. மீ. வரையிலான தூரத்தில் பிரிவில் அமைந்துள்ள பொருத்தமான வேறு கட்டிடத்தில் அலுவலகத்தினை அமைப்பதற்கு இயலுமாயிருத்தல் வேண்டும்.

7. விண்ணப்பம் கோரப்படும் பிறப்பு மற்றும் இறப்பு பதிவு செய்தல் பிரிவிற்கு உட்புகுத்தப்படும் கிராம பட்டியல்கள்/ கிராம அலுவலர் பிரிவு, கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் ஆகிய மேலதிக விபரங்கள் கீழ்க் குறிப்பிடப்படும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட மாவட்டச் செயலகம், பிரதேச செயலகம் அல்லது உரிய காணி மற்றும் மாவட்டச் செயலகம், கிராம அலுவலர் அலுவலகம், சமுர்த்தி அபிவிருத்திச் சங்க அலுவலகம் மற்றும் தபால் அலுவலகம் ஆகிய பிரிவின் பிரசித்தமான இடங்களில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள அறிவித்தல்களில் பார்த்துக்கொள்ள இயலும்.

8. இதற்குத் தேவையான விண்ணப்பங்கள் மற்றும் கிராம பட்டியல்கள் /கிராம அலுவலர் பிரிவுகள் உள்ளடங்கிய "இணைப்பு I" உரிய மாவட்டத்தின் மாவட்டச் செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்தில் மற்றும் உரிய காணி மற்றும் மாவட்டப் பதிவகத்தில் அல்லது பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ள இயலும். விண்ணப்பம் பதிவாளர் நாயகம் திணைக்களத்தின் இணையத்தளத்திலும் (www.rgd.gov.lk) பெற்றுக்கொள்ள இயலும்.

9. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 2026, ஓகத்து மாதம் 31 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னதாக அட்ட வணையில் குறிப்பிடப்பட்ட முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

எஸ். ஜலதீபன்,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2026, யூலை 26.

**அட்டவணை**

| *மாவட்டம்* | *பிரதேச செயலகப் பிரிவு* | *விண்ணப்பம் கோரப்படும் பிரிவும் பதவியும்* | *விண்ணப்பம் அனுப்பப்பட வேண்டிய முகவரி* |
|---|---|---|---|
| கண்டி | பஸ்பாகே கோரளை | நாவலப்பிட்டி மாவட்ட பொது வைத்தியசாலை உள்ளடங்கலாக பஸ்பாகே கோரளை பிரதேச செயலக பிரிவின் பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவி (தமிழ் மொழிமூலம்) | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், கண்டி |

07-534

---

**பதிவாளர் நாயகம் திணைக்களம்**

**சிங்கள மொழி பிறப்பு, இறப்பு மற்றும் விவாகம்/ மேலதிக விவாகம் (கண்டிய/பொது) பதிவாளர் பதவி - மாத்தளை மாவட்டம்**

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்ட பிரிவில் உள்ள பிறப்பு, இறப்பு மற்றும் விவாகம்/ மேலதிக விவாகம் பதிவாளர் பதவிக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர் உரிய பிறப்பு, இறப்பு மற்றும் விவாகம்/மேலதிக விவாகம் பிரிவினுள் நிரந்தர வதிவிடதாரி யாகவும் மற்றும் போதியளவான ஆதனத்திற்கு உரித்தான பிரதேசவாசிகளின் மதிப்பினைப் பெறும் ஆளுமையுடையவராக இருத்தல் வேண்டும்.

2. இந்தப் பதவி ஊதியம் வழங்கப்படாத சேவையாவதுடன் இதற்காக ஆண்/ பெண் இருபாலாரும் விண்ணப்பிக்க இயலும்.

3. விண்ணப்பம் கோரப்படும் இறுதித் தினம், விண்ணப்பதாரரின் வயது 30 வருடங்களுக்கு குறையாதிருத்தல் வேண்டும் என்பதுடன், 55 வருடங்களுக்கு மேற்படாதிருத்தல் வேண்டும்.

4. இளைப்பாறும் உச்ச வயதெல்லை 65 ஆண்டுகள் ஆவதுடன் வயது 65 தொடக்கம் 70 வரை, பதிவாளரினால் மேற்கொள்ளப்படும் சேவையின் திருப்தித்தன்மை மற்றும் உடல், மன உறுதி ஆகியவற்றிற்கு அமைய ஆண்டுதோறும் சேவைக்காலம் நீடிக்கப்படும் அவ்வாறு சேவைக் காலம் நீடிக்கப்படாத எந்தவொரு சந்தர்ப்பத்திலும் குறித்த பதிவாளரின் சேவை முடிவுறுத்தப்படும்.

5. விவாகப் பதிவாளர் பதவிக்காக விண்ணப்பிப்பவர்கள் விவாகமானவராக இருத்தல் வேண்டும் என்பதுடன் தாரமிழந்தவர் அல்லது விவாகரத்தானவராக இருத்தல் கூடாது.

6. பிரிவில் மக்களின் மொழித் தேவைக்கிணங்க இரண்டாம் மொழியில் கடமையினை மேற்கொள்ளும் இயலுமையுடன் இரண்டுக்கு மேற்படாத தவணைகளில் சிங்கள மொழிக்கான சிறப்பு சித்தி உட்பட க. பொ. த. (சா.த.) பரீட்சையில் குறைந்தது சிறப்புச் சித்திகள் இரண்டுடன் (02) ஆறு பாடங்களில் (06) சித்தி பெற்றிருத்தல் வேண்டும் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

**கருத்திற் கொள்ளவும்.**- க. பொ. த. (சா./த.) அல்லது அதற்கு சமமான பரீட்சையில் ஒரு விடயம் இரண்டு பகுதிகளாக சித்தியடைந்திருக்கும் சந்தர்ப்பங்களில், அது ஒரு விடயமாக கருதப்படல் வேண்டும். அந்த விடய பகுதிகள் இரண்டும் சித்தியடைந்திருந்தால் மாத்திரமே அவ்விடயம் சித்தியடைந்ததாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

7. பிரிவில் அனைவருக்கும் அல்லது அநேகமானவர்களுக்கு இலகுவாக நெருங்கக்கூடிய பிரிவின் மத்திய இடமொன்றில் அமைந்த பதவியின் கௌரவத்தினை பாதுகாக்கும் விதத்திலான கட்டிடத்தில் அலுவலகத்தினை அமைப்பதற்கு இயலுமாயிருத்தல் வேண்டும்.

8. விண்ணப்பம் கோரப்படும் பிறப்பு, இறப்பு மற்றும் விவாகம்/மேலதிக விவாகம் பதிவு செய்தல் பிரிவிற்கு உட்புகுத்தப்படும் கிராம பட்டியல்கள்/கிராம அலுவலர் பிரிவு, கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் ஆகிய மேலதிக விபரங்கள் கீழ்க் குறிப்பிடப்படும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட மாவட்டச் செயலகம், பிரதேச செயலகம் அல்லது உரிய காணி மற்றும் மாவட்டச் செயலகம், கிராம அலுவலர் அலுவலகம், சமுர்த்தி அபிவிருத்திச் சங்க அலுவலகம் மற்றும் தபால் அலுவலகம் ஆகிய பிரிவின் பிரசித்தமான இடங்களில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள அறிவித்தல்களில் பார்த்துக்கொள்ள இயலும்.

9. இதற்குத் தேவையான விண்ணப்பங்கள் மற்றும் கிராம பட்டியல்கள்/ கிராம அலுவலர் பிரிவுகள் உள்ளடங்கிய "இணைப்பு 1" உரிய மாவட்டத்தின் மாவட்டச் செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்தில் மற்றும் உரிய காணி மற்றும் மாவட்டப் பதிவகத்தில் அல்லது பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ள இயலும். விண்ணப்பம் பதிவாளர் நாயகம் திணைக்களத்தின் இணையத்தளத்திலும் (www.rgd.gov.lk) பெற்றுக்கொள்ள இயலும்.

10. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 2026, ஓகத்து மாதம் 31 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னதாக அட்டவணையில் குறிப்பிடப்பட்ட முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

எஸ். ஜலதீபன்,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2026, யூலை 20.

**அட்டவணை**

| *மாவட்டம்* | *பிரதேச செயலகப் பிரிவு* | *விண்ணப்பம் கோரப்படும் பிரிவும் பதவியும்* | *விண்ணப்பம் அனுப்பப்பட வேண்டிய முகவரி* |
|---|---|---|---|
| மாத்தளை | மாத்தளை | கம்பஹசிய பிரிவின் பிறப்பு, இறப்பு மற்றும் மாத்தளை தெற்கு விவாக (கண்டிய/ சாதாரண) பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், மாத்தளை |
| மாத்தளை | வில்கமுவ | ஹந்துன்கமுவ பிரிவின் பிறப்பு, இறப்பு மற்றும் மாத்தளை கிழக்கு விவாக (கண்டிய/ சாதாரண) பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், மாத்தளை |

06-568

---

## இலங்கை இராணுவத்தின் நிரந்தர படையின் கெடேற் உத்தியோகத்தர் பதவிகளுக்கு ஆட்சேரப்புச் செய்வதற்காக விண்ணப்பங்களை கோருதல் (குறுங்கால பாடநெறி - டிப்ளோமா )

1. இலங்கை இராணுவத்தின் நிரந்தர படைக்கு கெடெற் உத்தியோகத்தர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரர்களுக்கு இலங்கை இராணுவ கல்வியற் கல்லூரியில் பயிற்சி அளிக்கப்படும்.

2. இலங்கையில் பயிற்சியை வெற்றிகரமாக பூர்த்தி செய்து வெளியேறும் கெடெற் உத்தியோகத்தர்களுக்கு பாதுகாப்புக் கற்கையில் டிப்ளோமா வழங்கப்படும். அவர்கள் 2 ஆம் லெப்டினன்ட் நிலையில் அதிகாரவாணைக்கு நியமிக்கப்பட்டு தகைமைகளுக்கும் இலங்கை இராணுவத்தின் தேவைகளுக்கும் ஏற்ப இலங்கை இராணுவ நிரந்தரபடையின் படையணி ஒன்றிற்கு சேர்த்துக் கொள்ளப்படுவார்கள்.

3. **அடிப்படைத் தகைமைகள்:**

| | |
|---|---|
| அ. குடியுரிமை | : இலங்கையரான ஆண் குடிமகனாக இருத்தல் வேண்டும். |
| ஆ. சிவில் அந்தஸ்து | : திருமணமாகாதவராக இருத்தல் வேண்டும். |
| இ. வயது | : 2026, ஒற்றோபர் 01 ஆம் திகதிக்கு 18 வயதுக்கும் 23 வயதுக்கும் இடைப்பட்டவராக இருத்தல் வேண்டும். |
| ஈ. உயரம் | : 5 அடி 6 அங்குலத்திற்கு (167.5 cm) குறையாது இருத்தல் வேண்டும். |
| உ. நிறை | : 52 கிலோவுக்கு (118 இறாத்தல்) குறையாது இருத்தல் வேண்டும். |
| ஊ. மார்பு | : 32 அங்குலத்திற்கு குறையாது இருத்தல் வேண்டும். |
| எ. பார்வைக் கூர்மை | : 6/6 (மூக்கு கண்ணாடி மற்றும் வில்லைபாவிக்காது) இருத்தல் வேண்டும். |
| ஏ. உடல் பருமன் சுட்டி (B. M. I. Index) | : 18.5 $Kg/m^2$-25$Kg/m^2$ இடைப்பட்டதாக இருத்தல் வேண்டும். |

4. **கல்வித்தகைமைகள்:**

அ. க.பொ.த (உயர் தரம்) பரீட்சையில் மூன்று தடவைகளுக்கு மேற்படாதவாறு ஒரே அமர்வில் மூன்று (03) பாடங்களில் சித்தியடைந்திருத்தல் (சாதாரண சித்தி S) வேண்டும். சாதாரண பொதுப் பரீட்சையில் 30% புள்ளிகளை பெற்றிருத்தல் மற்றும் பல்கலைக்கழக சேர்ப்பு "YES" ஆக குறிப்பிட வேணும்

மற்றும்

ஆ. க.பொ.த (சாதாரண தரம்)பரீட்சையில் இரண்டுக்கு மேற்படாத அமர்வுகளில் ஒரே தடவையில் ஐந்து(05) பாடங்களுக்கு (C) சித்தியுடன் எட்டு (08) பாடங்களில் (விஞ்ஞானபாடம் உட்பட) சித்தியடைந்திருத்தல் வேண்டும். அத்துடன் இரண்டுக்கு மேற்படாத அமர்வுகளில் ஆங்கிலம், கணிதம், சிங்களம்/தமிழ் ஆகிய பாடங்களுக்கு (C) சித்திபெற்றிருத்தல் அல்லது ஆங்கில பாடத்திற்கு சாதாரண சித்தி (S) மட்டும் பெற்றுள்ள விண்ணப்பதாரிகள் க.பொ.த (உயர்தரம்)பரீட்சையில் ஆங்கில பாடத்திற்கு திறமைச் சித்தி (C) பெற்றிருத்தல் அல்லது NVQ – 4 ஆம் மட்டத்தில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட கல்வி நிறுவனமொன்றிடமிருந்து டிப்ளோமா ஆங்கில மொழிக்காக டிப்ளோமா/பெற்றிருத்தல். (NVQ சான்றிதழை சமர்ப்பித்தல் வேண்டும்)

அல்லது

இ. இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தால் அங்கீகரிக்கப்பட்ட க.பொ.த. (சாதாரண தரம்) மற்றும் க.பொ.த. (உயர்தரம்) பரீட்சைகளுக்குச் சமமான சர்வதேசப் பரீட்சை ஒன்றில் (Person Edexcel GCSE, GCE மற்றும் Cambridge அல்லது மற்றவை) அதற்குச் சமமான சித்தியை பெற்றிருத்தல் வேண்டும் (மேலே உள்ள கட்டாயப் பாடங்கள் உட்பட).

5. **வேறு தகைமைகள் :** தேசிய/ சர்வதேச மட்டத்தில் விளையாட்டு, தலைமைத்துவம், வேறு சாதனைகளை பெற்றிருத்தல் மற்றும் பிற மொழிகளை கையாளக்கூடியதிறமை (சிங்களம் மற்றும் ஆங்கிலம் தவிர) விசேட தகைமைகளாக கருதப்படும்.

6. பொது :

அ. பயிற்சிக் காலத்தில் கெடெற் உத்தியோகத்தர்களுக்குத் திருமணம் முடிப்பதற்கு அனுமதி வழங்கப்பட மாட்டாது.

ஆ. விண்ணப்பதாரர்கள் சிறந்த உடல் ஆரோக்கியத்துடன் இருத்தல் வேண்டும். நேர்முகப்பரீட்சைக்குத் தெரிவுசெய்யப் பட்ட அனைத்து விண்ணப்பதாரர்களும் ஆட்சேர்ப்புக்கு முன், இலங்கை இராணுவத்தால் நடாத்தப்படும் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படுதல் வேண்டும் என்பதுடன், அதில் அவர்கள் தேர்ச்சி பெறல் வேண்டும்.

7. **சேவை நிபந்தனைகள்:**

அ. பயிற்சிக் காலத்தின் இறுதியிலிருந்து (அதிகாரவாணைக்கு நியமனம் செய்யப்பட்ட திகதியிலிருந்து) 10 வருடங்கள் கட்டாயமாக இராணுவ சேவையில் ஈடுபடுதல் வேண்டும். அதற்காக, இலங்கை இராணுவத்துடன் பிணைமுறியொன்றுக்கும் ஒப்பந்தமொன்றுக்கும் உட்படுத்தப்படுவர்.

ஆ. பயிற்சிக் காலத்தில் கெடெற் உத்தியோகத்தர் ஒருவரின் மாத சம்பளம் ரூ.105,415.80 ஆகும். (அனைத்து கொடுப்பனவுகள் அடங்கலாக). கெடெற் உத்தியோகத்தர் ஒருவராக சேவையாற்றும் காலப்பகுதியில் அவர்கள் எந்தவொரு சம்பள அதிகரிப்புக்கும் உரித்துடையவராக மாட்டார்.

இ. கெடெற் உத்தியோகத்தர்கள் இலங்கை இராணுவ கல்வியற் கல்லூரியில் 15 மாத கால பயிற்சியைப் பெறுதல் வேண்டும்.

ஈ. பயிற்சிக் காலப்பகுதியில் கெடெற் உத்தியோகத்தர்களின் அந்தஸ்து சாதாரண சிப்பாய்களுக்கு சமமாக இருக்கும் என்பதுடன், அவர்கள் இராணுவச் சட்டத்திற்கும் சிவில் சட்டத்திற்கும் கட்டுப்படுதல் வேண்டும்.

உ. **பாடநெறியிலிருந்து விலகுதல்/நீக்குதல்:**

(1) பயிற்சிக் காலப்பகுதியில் கெடெற் உத்தியோகத்தர் ஒருவர் தனது சுய விருப்பில் தனது அதிகாரவாணைக்கான அபேட்சகத்துவத்தை முடிவுறுத்துவாராயின், கெடெற் உத்தியோகத்தர் சார்பில் இலங்கை குடியரசுக்கு அது வரை ஏற்க நேரிட்ட எல்லாச் செலவுகளையும் அவருடைய பாதுகாவலர் அல்லது பிணையாளர்கள் இலங்கைச் சனநாயக சோசலிச குடியரசுக்கு திருப்பிச் செலுத்துதல் வேண்டும்.

(2) கெடெற் உத்தியோகத்தர் ஒருவர் பயிற்சிக் காலத்தில் ஏதாவதொரு சந்தர்ப்பத்தில் அல்லது துர்நடத்தை காரணமாக விலக்குதல், தனது மோசமான பாதுகாப்பு அறிக்கை, தன்னால் தவிர்க்க கூடிய காரணிகள் காரணமாகவோ அதிகாரவாணை வழங்கப்படுவதற்கு தகுதியற்றவர் என உத்தியோகத்தர்களினால் அறிக்கை சமர்ப்பிக்கப்படும் பட்சத்தில், உத்தியோகத்தர் சார்பில் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கு ஏற்க நேரிட்ட எல்லாச் செலவுகளையும் அவருடைய பாதுகாவலர் அல்லது பிணையாளர்கள் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கு திருப்பிச் செலுத்துதல் வேண்டும்.

(3) பாடநெறியிலிருந்து விலகிய, விலக்கப்பட்ட அல்லது மருத்துவக் காரணங்களின் அடிப்படையில் தகுதியற்றவர் என பயிற்சியிலிருந்து நீக்கப்பட்ட கெடெற் உத்தியோகத்தர் ஒருவருக்கு மீண்டும் இலங்கை இராணுவத்தின் கெடெற் உத்தியோகத்தர் ஒருவராக இணைந்து கொள்ள முடியாது.

8. **சம்பளம் மற்றும் கொடுப்பனவுகள் :**

இலங்கை இராணுவத்தின் நிரந்தர படையின் உத்தியோகத்தர்களாக இரண்டாம் லெப்டினன்ட் நிலையில் அதிகாரவாணைக்கு நியமிக்கப்படும் போது, அவர்கள் இலங்கை இராணுவத்தின் உத்தியோகத்தர்களுக்குரிய பின்வரும் சம்பள அளவுத் திட்டத்தில் வைக்கப்படுவார்கள்:

| *தொடர் இல.* | *பதவி* | *அரச முகாமைத்துவ சுற்றறிக்கை இல. 05/2025 இன் படி திரட்டிய ஊதியம்* | | *ஊதிய அதிகரிப்பு* |
|---|---|---|---|---|
| | | *2026* | *2027* | |
| 1 | இரண்டாம் லெப்டினன்ட் | ரூ. 60,709.00 | ரூ.65,880.00 | நிரந்தரமான |
| 2 | லெப்டினன்ட் | ரூ. 74.,438.00 | ரூ. 82,150.00 | 30x2400 |
| 3 | கெப்டன் | ரூ. 86,601.00 | ரூ. 96,550.00 | 24x2400 |
| 4 | மேஜர் | ரூ. 94,710.00 | ரூ.106,150.00 | 22x2400 |
| 5 | லெப்டினன்ட் கேணல் | ரூ. 97,192.00 | ரூ.109,090.00 | 17x2940 |
| 6 | கேணல் | ரூ. 117,857.00 | ரூ.133,570.00 | 17x3900 |
| 7 | பிரிகேடியர் | ரூ. 124,446.00 | ரூ.141,370.00 | 15x3900 |
| 8 | மேஜர் ஜெனரல் | ரூ. 136,575.00 | ரூ.156,000.00 | 12 x850 |
| 9 | லெப்டினன்ட் ஜெனரல் | ரூ. 144,770.00 | ரூ.165,700.00 | 10 x4850 |
| 10 | ஜெனரல் | ரூ.157,063.00 | ரூ.180,250.00 | 7x4850 |

9. **ஏனைய கொடுப்பனவுகள் :**

பின்வரும் மாதாந்த கொடுப்பனவுகள் செலுத்தப்படும்:

அ. தகைமை கொடுப்பனவுகள்.

ஆ. இலவச உணவு அல்லது உணவுக் கொடுப்பனவுகள்.

இ. உள்ளே தங்குவதற்கு கட்டளையிடப்பட்டிருக்கையில் அனுமதி குலைவுப்படி (Disturbance Allowance) (திருமணமான உத்தியோகத்தர்களுக்கு மட்டும்).

ஈ. சீருடை பேணல் கொடுப்பனவு.

10. **பின்வரும் வசதிகள்/கொடுப்பனவுகள் செலுத்தப்படும்:**

அ. உள்ளே தங்குவதற்கு கட்டளையிடப்பட்டிருக்கையில் இலவச தங்குமிட வசதி.

ஆ. வாடகை வீடுகளில் வசிக்கும் போது மட்டுப் படுத்தப்பட்ட வீட்டு வாடகை.

இ. இலவச சீருடை.

ஈ. திருமணமான உத்தியோகத்தர்களுக்கு பணியாள் படி (Batmen Allowance) அல்லது திருமணமாகாத உத்தியோகத்தர்களுக்கு பணியாள் சேவை (Batmen services).

உ. உள்ளே தங்குவதற்கு கட்டளையிடப்பட்டுள்ள உத்தியோகத்தர்களுக்கு வேலைத்தளத்திலிருந்து வீடு வரை பிரயாணம் செய்வதற்கு மாதத்திற்கு ஒரு தடவை புகையிரத ஆணைச்சீட்டொன்று.

11. **சம்பளம் மற்றும் அடுத்த கட்ட சேவை நிபந்தனைகள் தொடர்பில் பின்வரும் ஒழுங்குவிதிகள் உத்தியோகத்தர் களுக்குப் பொருந்தும்:**

அ. அரசாங்க முகாமைத்துவ சுற்றறிக்கை இல 05/2025.

ஆ. இராணுவ சம்பளக் கோவை.

இ. 1993 ஆம் ஆண்டு ஓகத்து 17 ஆம் திகதிய 780/7 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட காலத்திற்குக் காலம் திருத்தப் பட்ட 1992 ஆம் ஆண்டின் இராணுவ உத்தியோ கத்தர் (நிரந்தர படையணி) ஒழுங்குவிதிகள்.

ஈ. 1989 ஆம் ஆண்டு யூன் 15 ஆம் திகதிய 562/11 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்த மானியில் பிரசுரிக்கப்பட்ட காலத்திற்குக் காலம் திருத்தப்பட்ட 1981 ஆம் ஆண்டின் இராணுவ ஓய்வூதிய மற்றும் சம்பளப் பணிக்கொடை பிரமாணக் குறிப்பு.

12. இங்கு கீழே பந்தி 13 இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு பிரகடனப் பத்திரமொன்றில் பெற்றோர் அல்லது பாதுகாவலரால் கையொப்பமிடப்படல் வேண்டும் என்பதுடன், அதனை விண்ணப்பப்படிவத்துடன் சமர்ப் பித்தல் வேண்டும். மேற்படி தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரர்களை நியமிப்பதற்கு முன்னர் விண் ணப்பதாரர்களின் பெற்றோர் அல்லது பாது காவலர்கள் பிரகடனத்தில் உள்ளவாறு இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுடன் பிணைமுறி யொன்றில் கையொப்பமிடுதல் வேண்டும். விசேட சந்தர்ப்பங்களை தவிர தந்தை உயிருடன் இருக்கும் பயிலிளவல் உத்தியோகத்தர் ஒருவரின் பாதுகாவலராக தந்தை இருப்பார் என்பதுடன், அவர் உயிருடன் இல்லாதிருப்பின் மட்டும் தாய் அல்லது பாதுகாவலர் பாதுகாவலராக இருப்பார்.

13. விண்ணப்பதாரரின் தாய், தந்தை அல்லது பாது காவலரால் கையொப்பமிடப்பட வேண்டிய பிரகடனம்:

அ. நான், இலங்கை இராணுவத்தின் கெடெற் உத்தியோகத்தர் விண்ணப்பதாரரான ........... .......... என்பவரின் தந்தை/தாய்/பாதுகாவலர் ஆவேன்.

ஆ. மேலே குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்பதாரர் இலங்கையிலோ அல்லது வெளிநாட்டிலோ பயிற்சி நெறியைத் தொடர தெரிவு செய்யப்படின், இங்கு பின்வரும் விடயங்கள் தொடர்பிலான பொறுப்பை நான் ஏற்றுக்கொள்கிறேன்.

(1) பயிற்சிக் காலத்தின் போது விண்ணப்ப தாரருக்கு ஏற்க நேரிடும் அனைத்து தனிப்பட்ட செலவுகளையும் ஏற்றல்.

(2) மேற்கூறிய விண்ணப்பதாரர் பயிற்சிக் காலப்பகுதியில் சுய விருப்புடன் அதிகார வாணையிலிருந்து வெளியேறினால், அவர் சார்பில் அரசாங்கத்திற்கு ஏற்க நேரிட்ட அனைத்து செலவுகளையும் இலங்கை குடியரசிற்கு திருப்பிச் செலுத்துதல்.

(3) மேற்குறிப்பிட்ட விண்ணப்பதாரர் பயிற்சிக் காலப்பகுதியில் எந்தவொரு சந்தரப்பத்திலும் (துர்நடத்தை காரணமாக அல்லது தனது கட்டுப்பாட்டுக்கு உட்பட்ட காரணி காரணமாக) அதிகாரவாணை பெறுவதற்குத் தகுதியற்றவர் என அதிகாரிகளினால் அறிக்கை சமர்ப்பிக்கப்படுமாயின், அவர் சார்பில் அரசாங்கத்திற்கு ஏற்க நேரிட்ட அனைத்து செலவுகளையும் இலங்கை குடியரசிற்கு திருப்பிச் செலுத்தல்.

❖ பொருந்தாத சொற்களை வெட்டி விடுக.

..............................................
தாய்/தந்தை/பாதுகாவலரின் கையொப்பம்

பெயரும் முகவரியும் (தெளிவான எழுத்துக்களில்) :
.......................................

திகதி :................................................................

சாட்சி கையொப்பம் :......................................

பெயரும் முகவரியும் (தெளிவான எழுத்துக்களில்):
...........................................

14. **மொழித் தேவைகள் :** தெரிவு செய்யப்பட்ட விண்ணப்ப தாரர்கள், 1956 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க, அரசகரும மொழிகள் சட்டத்திற்கும் அச்சட்டத்திற்கான திருத்தங்களுக்கும் அமைவாகவும், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசகரும மொழிக் கொள்கையை அமுல் செய்வதற்கு காலத்துக்கு காலம் விதிக்கப்படுகின்ற சட்டத்திட்டங்களுக்கும் ஏற்ப செயற்படுதல் வேண்டும்.

15. **ஆளடையாளத்தை உறுதிப்படுத்தல் :** விண்ணப்ப தாரர்கள் தங்கள் அடையாளத்தை உறுதிப்படுத்து வதற்கு ஆதாரங்களை சமர்ப்பித்தல் வேண்டும். இதற்காக ஆட்பதிவு திணைக்களம் அல்லது

தபால் மாஅதிபரால் வழங்கப்பட்ட அடையாள அட்டை மற்றும் மோட்டார் வாகன ஆணையாளர் நாயகத்தினால் வழங்கப்பட்ட சாரதி அனுமதிப் பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும்.

16. பொதுச் சேவையில் உள்ள விண்ணப்பதாரர்களின் விண்ணப்பங்களை, அவர்கள் தெரிவு செய்யப்படும் பட்சத்தில் விடுவிக்க முடியும் என்ற திணைக்களத் தலைவரின் அத்தாட்சியுடன் அனுப்பி வைத்தல் வேண்டும்.

17. விண்ணப்பங்கள் விண்ணப்பப்படிவம் விண்ணப்ப தாரரின் சொந்தக் கையெழுத்தில் கீழே காட்டப்பட்டுள்ள மாதிரிப் படிவத்திற்கமைய தயாரிக்கப்பட்டு, 2026.07.31 ஆம் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு, “ஆளனி நிருவாகப் பணிப்பகம், இலங்கைத் தரைப்படைத் தலைமையகம், பாதுகாப்பு தலைமையக கட்டிடத் தொகுதி, அக்குரேகொட வீதி, பத்தரமுல்லை" என்ற முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும். விண்ணப்பங்கள் இடப்படும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் ‘இலங்கை இராணுவ நிரந்தர படையில் குறுகியகால கெடெற் உத்தியோகத்தர் 26 ஆவது (டிப்ளோமா) பாடநெறியின் பயிலிளவல் உத்தியோகத்தர் பதவிக்கான விண்ணப்பம்" எனக் குறிப்பிடுதல் வேண்டும். பிந்திக்கிடைக்கும் விண்ணப்பங்களும் கெடெற் விண்ணப்பப் படிவத்திற்கு அமைய தயாரிக்கப்படாத விண்ணப்பங்களும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. மேலும், இராணுவத் தலைமை யகத்தினால் விண்ணப்பங்கள் விநியோகிக்கப் படவும் மாட்டாது. மேலதிக விபரங்களுக்கும் விண்ணப்பங்களை பதிவிறக்கம் செய்வதற்கும் www.army.lk/officers எனும் இணையத்தளத்தினுள் பிரவேசிக்கவும்.

18. விண்ணப்பத்துடன் பின்வரும் சான்றிதழ்களின் நிழற் பிரதிகளை அனுப்புதல் வேண்டும்:

அ. பிறப்புச் சான்றிதழ்.

ஆ. கல்வித் தகைமைகளை அத்தாட்சிப்படுத்தும் சான்றி தழ்கள்.

இ. விளையாட்டு மற்றும் இணைச் செயற்பாடு களுக்கான சான்றிதழ்கள்.

ஈ. மேலும்,தேசிய அடையாள அட்டையின் நகல் பிரதி மற்றும் அண்மையில் பெறப்பட்ட 2’’ x 2½’’ அளவிலான நீல நிற பின்புலத்தையுடைய புகைப் படம் என்பன கிராம அலுவலரினால் அல்லது சட்டத்தரணி ஒருவரினால் சான்றுப்படுத்தப்பட்டு அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும்.

19. நேர்முகப் பரீட்சைகளை நடாத்துதல் மேற்கண்ட தேவைகளைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரர்கள் ஆரம்பத் தெரிவுக்கு உட்படுத்தப்படுவார்கள். அவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்ட விண்ணப்பதாரிகள் இராணுவத் தளபதியால் விதிக்கப்படுகின்றவாறு பரீட்சைகளுக்குத் தோற்றுதல் வேண்டும். பாதுகாப்பு அமைச்சினால் நியமிக்கப்படுகின்ற தெரிவுக் குழுவின் முன்னால், தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரிகள் நேர்முகப் பரீட்சைக்கு உட்படுத்தப்பட்டு இறுதியாக தெரிவு செய்யப்படுவார்கள்.

20. நேர்முகப் பரீட்சைக்குத் தெரிவுசெய்யப்படுகின்ற விண்ணப்பதாரிகளுக்கு நேர்முகப் பரீட்சை நடைபெறுகின்ற இடம், நேரம் மற்றும் திகதி என்பன மின்னஞ்சல் முகவரி ஊடாக அறிவிக்கப்படும். நேர்முகப் பரீட்சை இலங்கை இராணுவ தலைமையகம், பாதுகாப்பு தலைமையகக் கட்டடத்தொகுதி, அக்குரேகொட வீதி, பத்தரமுல்ல எனும் இடத்தில் நடாத்தப்படும். விண்ணப்பதாரிகளின் பயணச் செலவுகள் அல்லது பிற செலவுகள் எதுவும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசினால் மீள செலுத்தப்படமாட்டாது.

21. விண்ணப்பதாரி ஒருவரைப் பரிந்துரைக்க முயற்சி செய்யும் எவரும் நற்சான்றிதழொன்றை வழங்குவதன் மூலம் அவ்வாறு செய்யலாம். விண்ணப்பதாரி யொருவரின் தேர்வை எந்த வகையிலும் தூண்டுவது அல்லது செல்வாக்குச் செலுத்த முயற்சிப்பது விண்ணப்ப தாரியை தகுதி இழக்கச் செய்யும்.

22. ஆட்சேர்ப்புக்குத் தகைமை பெறாத விண்ணப்ப தாரர்களுக்கு அதுபற்றி அறிவிக்கப்பட மாட்டாது. அத்தகைய விண்ணப்பதாரர்களினால் முன்வைக்கப் படுகின்ற மனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படவும் மாட்டாது.

குறிப்பு : இந்த வர்த்தமானி அறிவித்தல் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் வெளியிடப் பட்டுள்ளது. சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிமூல வாசகங்களுக்கு இடையில் ஏதேனும் முரண்பாடு காணப்படின், சிங்கள மொழிமூல வாசகம் மேலோங்கி நிற்கும்.

பீ கே ஜீ எம் எல் றொட்ரிகோ ஆர்எஸ்பீ சீடீஎப்-
என்டீயூ பீஎஸ்சீ ஐஜி,
லெப்டினன்ட் ஜெனரல்,
இராணுவத் தளபதி.

இலங்கைத் தரைப்படைத் தலைமையகம்,
பாதுகாப்பு தலைமையக கட்டிடத் தொகுதி,
அக்குரேகொட வீதி,
பத்தரமுல்லை,
2026, மாச்சு 25.

07-491/ 1

## இலங்கை இராணுவத்தின் நிரந்தர படையின் மகளிர் கெடேற் உத்தியோகத்தர் பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்காக விண்ணப்பங்களை கோருதல்

1. இலங்கை இராணுவத்தின் நிரந்தர படைக்கு மகளிர் கெடேற் உத்தியோகத்தர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரர்கள் இலங்கை இராணுவ பயிற்சிக்கல்லூரியில் பயிற்சி அளிக்கப்படுவர்.

2. இலங்கையில் பயிற்சியைவெற்றிகரமாக பூர்த்தி செய்து வெளியேறும் மகளிர் கெடேற் உத்தியோகத்தர்களுக்கு பாதுகாப்புக் கற்கை டிப்ளோமா சான்றிதழ் வழங்கப்படும். அவர்கள் 2 ஆம் லெப்டினன்ட் ஆரம்ப பதவியில் அதிகார ஆணைக்கு நியமிக்கப்பட்டு தகைமைகளுக்கும், இலங்கை இராணுவத்தின் தேவைகளுக்கும் ஏற்ப இலங்கை இராணுவ நிரந்தரபடையின் படைப்பிரிவு ஒன்றிற்கு சேர்த்துக் கொள்ளப்படுவார்கள்.

3. **அடிப்படைத் தகைமைகள்**:

அ. குடியுரிமை : இலங்கையரான பெண் இலங்கை பிரசையாக இருத்தல் வேண்டும்.

ஆ. சிவில் அந்தஸ்து : திருமணமாகாதவராக இருத்தல் வேண்டும்.

இ. வயது : 2026, ஒற்றோபர் 01 ஆம் திகதிக்கு 18 வயதுக்கும் 22 வயதுக்கும் இடைப்பட்டவராக இருத்தல் வேண்டும்.

ஈ. உயரம் : 5 அடி 3 அங்குலத்திற்கு (162cm) குறையாது இருத்தல் வேண்டும்.

உ. நிறை : 45 கிலோவுக்கு (99 இறாத்தல்) குறையாது இருத்தல் வேண்டும்.

ஊ. பார்வைக் கூர்மை : 6/6 (மூக்கு கண்ணாடி மற்றும் வில்லை பாவிக்காது) இருத்தல் வேண்டும்.

எ. உடல் பருமன் சுட்டி (B.M.I. Index) : 18.5 $Kg/m^2$-25$Kg/m^2$ இடைப்பட்டதாக இருத்தல் வேண்டும்.

4. **கல்வித்தகைமைகள்:**

அ. க.பொ.த (உயர் தரம்) பரீட்சையில் மூன்று தடவைகளுக்குமேற்படாதவாறு ஒரே அமர்வில் மூன்று (03) பாடங்களில் சித்தியடைந்திருத்தல் (சாதாரண சித்தி) வேண்டும். சாதாரண பொதுப் பரீட்சையில் 30% புள்ளிகளை பெற்றிருத்தல் வேண்டும்

மற்றும்

ஆ. க.பொ.த (சாதாரண தரம்) பரீட்சையில் இரண்டுக்கு மேற்படாத அமர்வுகளில் ஒரே தடவையில் ஐந்து (05) பாடங்களுக்கு (C) சித்தியுடன் எட்டு (08) பாடங்களில் (விஞ்ஞானபாடம் உட்பட) சித்தியடைந்திருத்தல் வேண்டும். அத்துடன் இரண்டுக்கு மேற்படாத அமர்வுகளில் ஆங்கிலம், கணிதம், சிங்களம்/தமிழ் ஆகிய பாடங்களுக்கு (C) சித்திபெற்றிருத்தல் அல்லது ஆங்கில பாடத்திற்கு சாதாரண சித்தி (S) மட்டும் பெற்றுள்ள விண்ணப்பதாரிகள் க.பொ.த (உயர்தரம்) பரீட்சையில் ஆங்கில பாடத்திற்கு திறமைச் சித்தி (C) பெற்றிருத்தல் அல்லது NVQ - 4 ஆம் மட்டத்தில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட கல்வி நிறுவனமொன்றிடமிருந்து டிப்ளோமா ஆங்கில மொழிக்காக டிப்ளோமா பெற்றிருத்தல். (NVQ சான்றிதழை சமர்ப்பித்தல் வேண்டும்)

அல்லது

இ. இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தால் அங்கீகரிக்கப்பட்ட க.பொ.த. (சாதாரண தரம்) மற்றும் க.பொ.த (உயர்தரம்) பரீட்சைகளுக்குச் சமமான சர்வதேசப் பரீட்சை ஒன்றில் (Pearson Edexcel GCSE, GCE மற்றும் Cambridge அல்லது மற்றவை) அதற்குச் சமமான சித்தியை பெற்றிருத்தல் வேண்டும் (மேலே உள்ள கட்டாயப் பாடங்கள் உட்பட).

5. **வேறு தகைமைகள் :**

தேசிய/சர்வதேச மட்டத்தில் விளையாட்டு, தலைமைத்துவம், வேறு சாதனைகளை பெற்றிருத்தல் மற்றும் பிற மொழிகளை கையாளக்கூடியதிறமை (சிங்களம் மற்றும் ஆங்கிலம் தவிர) விசேட தகைமைகளாக கருதப்படும்.

6. **பொதுவானது:**

அ. பயிற்சிக் காலத்தில் மகளிர் கெடேற் உத்தியோகத்தர்களுக்குத் திருமணம் முடிப்பதற்கு அனுமதி வழங்கப்பட மாட்டாது.

ஆ. விண்ணப்பதாரர்கள் சிறந்த உடல் ஆரோக்கியத்துடன் இருத்தல் வேண்டும்.நேர்முகப்பரீட்சைக்குத் தெரிவுசெய்யப் பட்ட அனைத்து விண்ணப்பதாரர்களும் ஆட்சேர்ப்புக்கு முன், இலங்கை இராணுவத்தால் நடாத்தப்படும் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படுதல் வேண்டும் என்பதுடன் அதில் அவர்கள் தேர்ச்சி பெற வேண்டும்.

7. **சேவை நிபந்தனைகள்:**

அ. பயிற்சிக் காலத்தின் இறுதியிலிருந்து (அதிகார ஆணைக்கு நியமனம் செய்யப்பட்ட திகதியிலிருந்து) 10 வருடங்கள் கட்டாயமாக இராணுவ சேவையில் ஈடுபடுதல் வேண்டும். அதற்காக, இலங்கை இராணுவத்துடன் பிணைமுறியொன்றுக்கும் ஒப்பந்தமொன்றுக்கும் வருதல் வேண்டும்.

ஆ. பயிற்சிக் காலத்தில் மகளிர் கெடேற் உத்தியோகத்தர் ஒருவரின் மாத சம்பளம் ரூ. 91,551.80 ஆகும். (அனைத்து கொடுப்பனவுகள் உட்பட). மகளிர் கெடேற் உத்தியோகத்தர் ஒருவராக சேவையாற்றும் காலப்பகுதியில் அவர்கள் எந்தவொரு சம்பள அதிகரிப்புக்கும் உரித்துடையவராக மாட்டார்.

இ. மகளிர் கெடேற் உத்தியோகத்தரகள் இலங்கை இராணுவ பயிற்சிக் கல்லூரியில் 15 மாத பயிற்சியைப் பெறுதல் வேண்டும்.

ஈ. பயிற்சிக்காலப்பகுதியில் மகளிர் கெடேற் உத்தியோகத்தர்களின் அந்தஸ்து மற்றைய பதவிகளுக்கு சமமாக இருக்கும் என்பதுடன, அவரகள் இராணுவச் சட்டத்திற்கும் சிவில் சட்டத்திற்கும் கட்டுப்படுதல் வேண்டும்.

உ. **பாடநெறியிலிருந்து விலகுதல்/நீக்குதல்:**

(1) பயிற்சிக் காலப்பகுதியில் மகளிர் கெடேற் உத்தியோகத்தர் ஒருவர் தனது சுய விருப்பில் தனது அபேட்சகத்துவத்தை முடிவுறுத்துவாராயின், மகளிர் கெடேற் உத்தியோகத்தர் சார்பில் இலங்கை குடியரசுக்கு அதுவரை ஏற்க நேரிட்ட எல்லாச் செலவுகளையும் அவருடைய பாதுகாவலர் அல்லது பிணையாளர்கள் இலங்கை குடியரசுக்கு திருப்பிச் செலுத்துதல் வேண்டும்.

(2) மகளிர் கெடேற் உத்தியோகத்தர் ஒருவர் பயிற்சிக் காலத்தில் ஏதாவதொரு சந்தர்ப்பத்தில் துர்நடத்தை காரணமாக தனது மோசமான பாதூகாப்பு செயல் திறன், தனது கட்டுப்பாட்டுக்கு உட்பட்ட காரணிகள் காரணமாக அதிகார ஆணை வழங்கப்படுவதற்கு தகுதியற்றவர் என உத்தியோகத்தர்களினால் அறிக்கை சமர்ப்பிக்கப்படும் பட்சத்தில், உத்தியோகத்தர் சார்பில் இலங்கை குடியரசுக்கு ஏற்க நேரிட்ட எல்லாச் செலவுகளையும் அவளுடைய பாதுகாவலர் அல்லது பிணையாளர்கள் இலங்கை குடியரசுக்கு திருப்பிச் செலுத்துதல் வேண்டும்.

(3) பாடநெறியிலிருந்து விலகிய, விலக்கப்பட்ட அல்லது மருத்துவக் காரணங்களின் அடிப்படையில் தகுதியற்றவர் என பயிற்சியிலிருந்து நீக்கப்பட்ட மகளிர் கெடேற் உத்தியோகத்தர் ஒருவருக்கு மீண்டும் இலங்கை இராணுவத்தின் மகளிர் கெடேற் உத்தியோகத்தர் ஒருவராக இணைந்து கொள்ள முடியாது.

8. **சம்பளம் மற்றும் கொடுப்பனவுகள் :**

இலங்கை இராணுவத்தின் நிரந்தர படையின் உத்தியோகத்தர்களாக இரண்டாம் லெப்டினன்ட் நிலையில் அதிகார வாணைக்கு நியமிக்கப்படும் போது, அவர்கள் இலங்கை இராணுவத்தின் உத்தியோகத்தர்களுக்குரிய பின்வரும் சம்பள அளவுத் திட்டத்தில் வைக்கப்படுவார்கள்:

| *தொடர் இல.* | *பதவி* | *அரச முகாமைத்துவ சுற்றறிக்கை இல. 05/2025 படி திரட்டிய ஊதியம்* | | *ஊதிய அதிகரிப்பு* |
|---|---|---|---|---|
| | | *2026* | *2027* | |
| 1 | இரண்டாம் லெப்டினன்ட் | ரூ. 60,709.00 | ரூ.65,880.00 | நிரந்தரமான |
| 2 | லெப்டினன்ட் | ரூ. 74.,438.00 | ரூ. 82,150.00 | 30x2400 |
| 3 | கெப்டன் | ரூ. 86,601.00 | ரூ. 96,550.00 | 24x2400 |

| தொடர் இல. | பதவி | அரச முகாமைத்துவ சுற்றறிக்கை இல. 05/2025 படி திரட்டிய ஊதியம் | | ஊதிய அதிகரிப்பு |
|---|---|---|---|---|
| | | 2026 | 2027 | |
| 4 | மேஜர் | ரூ. 94,710.00 | ரூ.106,150.00 | 22x2400 |
| 5 | லெப்டினன் கேணல் | ரூ. 97,192.00 | ரூ.109,090.00 | 17x2940 |
| 6 | கேணல் | ரூ. 117,857.00 | ரூ.133,570.00 | 17x3900 |
| 7 | பிரிகேடியர் | ரூ. 124,446.00 | ரூ.141,370.00 | 15x3900 |
| 8 | மேஜர் ஜெனரல் | ரூ. 136,575.00 | ரூ.156,000.00 | 12 x850 |
| 9 | லெப்டினன் ஜெனரல் | ரூ. 144,770.00 | ரூ.165,700.00 | 10 x4850 |
| 10 | ஜெனரல் | ரூ.157,063.00 | ரூ.180,250.00 | 7x4850 |

9. **ஏனைய வசதிகள் பின்வரும் மாதாந்த கொடுப்பனவுகள் செலுத்தப்படும்:**

அ. தகைமை கொடுப்பனவுகள்.

ஆ. இலவச உணவு அல்லது உணவுக் கொடுப்பனவுகள்.

இ. உள்ளே தங்குவதற்குகட்டளையிடப்பட்டிருக்கையில் அனுமதி குலைவுப்படி (Disturbance Allowance) (திருமணமான உத்தியோகத்தர்களுக்கு மட்டும்).

ஈ. சீருடை பேணல் கொடுப்பனவு.

10. **பின்வரும் வசதிகள் வழங்கப்படும் / கொடுப்பனவுகள் செலுத்தப்படும் :**

அ. உள்ளே தங்குவதற்கு கட்டளையிடப்பட்டிருக்கையில் இலவச தங்குமிட வசதி.

ஆ. வாடகை வீடுகளில் வசிக்கும்போது மட்டுப்படுத்தப்பட்ட வீட்டு வாடகை.

இ. இலவச சீருடை.

ஈ. திருமணமான உத்தியோகத்தர்களுக்கு பணியாள் படி (Batmen Allowance)அல்லது திருமணமாகாத உத்தியோகத்தர்களுக்கு பணியாள் சேவை (Batmen Services).

உ. உள்ளே தங்குவதற்கு கட்டளையிடப்பட்டுள்ள உத்தியோகத்தர்களுக்கு வேலைத்தலத்திலிருந்து வீடு வரை பிரயாணம் செய்வதற்கு மாதத்திற்கு ஒரு தடவை புகையிரத ஆணைச்சீட்டொன்று.

11. **சம்பளம் மற்றும் அடுத்த கட்ட சேவை நிபந்தனைகள் தொடர்பில் பின்வரும் ஒழுங்குவிதிகள் மகளிர் உத்தியோகத்தர் களுக்குப் பொருந்தும்:**

அ. இராணுவ சம்பளக் கோவை.

ஆ. 1988 ஆம் ஆண்டு ஒற்றோபர் 21 ஆம் திகதிய 528/15 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட காலத்திற்குக் காலம் திருத்தப்பட்ட 1987 ஆம் ஆண்டின் இராணுவ மகளிர் உத்தியோகத்தர் ஒழுங்குவிதிகள்.

இ. 1989 ஆம் ஆண்டு யூன் 15 ஆம் திகதிய 562/11ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட காலத்திற்குக் காலம் திருத்தப்பட்ட 1981 ஆம் ஆண்டின் இராணுவ ஓய்வூதிய மற்றும் சம்பளப் பணிக்கொடை பிரமாணக் குறிப்பு.

12. இங்கு கீழே பந்தி 13 இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு பிரகடனப் பத்திரமொன்றில் பெற்றோர் அல்லது பாதுகாவலரால் கையொப்பமிடப்படல் வேண்டும் என்பதுடன், அதனை விண்ணப்பப் படிவத்துடன் சமர்ப்பித்தல் வேண்டும். மேற்படி தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரர்களை நியமிப்பதற்கு முன்னர் விண்ணப்பதாரர்களின் பெற்றோர்

அல்லது பாதுகாவலர்கள் பிரகடனத்தில் உள்ளவாறு இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுடன் பிணைமுறியொன்றில் கையொப்பமிடுதல் வேண்டும். விசேட சந்தர்ப்பங்களை தவிர தந்தை உயிருடன் இருக்கும் பயிலிளவல் உத்தியோகத்தர் ஒருவரின் பாதுகாவலராக தந்தை இருப்பார் என்பதுடன், அவர் உயிருடன் இல்லாதிருப்பின் மட்டும் தாய் அல்லது பாதுகாவலர் பாதுகாவலராக இருப்பார்.

13. **விண்ணப்பதாரரின் தாய், தந்தை அல்லது பாதுகாவலரால் கையொப்பமிடப்பட வேண்டிய பிரகடனம்:**

அ. நான், இலங்கை இராணுவத்தின் மகளிர் கெடேற் உத்தியோகத்தர் பதவிக்கான விண்ணப்பதாரரான ...................... என்பவரின் தந்தை/தாய்/பாதுகாவலர் ஆவேன்.

ஆ. மேலே குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்பதாரர் இலங்கையிலோ அல்லது வெளிநாட்டிலோ பயிற்சி நெறியைத் தொடர தெரிவு செய்யப்படின், இங்கு பின்வரும் விடயங்கள் தொடர்பான பொறுப்பை நான் ஏற்றுக்கொள்கிறேன்.

(1) பயிற்சிக் காலத்தின் போது விண்ணப்பதாரருக்கு ஏற்க நேரிடும் அனைத்து தனிப்பட்ட செலவுகளையும் ஏற்றல்.

(2) மேற்கூறிய விண்ணப்பதாரர் பயிற்சிக் காலப்பகுதியில் சுய விருப்புடன் அதிகார ஆணையிலிருந்து வெளியேறினால், அவர் சார்பில் அரசாங்கத்திற்கு ஏற்க நேரிட்ட அனைத்து செலவுகளையும் இலங்கை குடியரசிற்கு திருப்பிச் செலுத்துதல்.

(3) மேற்குறிப்பிட்ட விண்ணப்பதாரர் பயிற்சிக் காலப்பகுதியில் எந்தவொரு சந்தரப்;பத்திலும் (துர்நடத்தை காரணமாக அல்லது தனது கட்டுப்பாட்டுக்கு உட்பட்ட காரணி காரணமாக) அதிகார ஆணை பெறுவதற்குத் தகுதியற்றவர் என அதிகாரிகளினால் அறிக்கை சமர்ப்பிக்கப்படுமாயின், அவள் சார்பில் அரசாங்கத்திற்கு ஏற்க நேரிட்ட அனைத்து செலவுகளையும் இலங்கை குடியரசிற்கு திருப்பிச் செலுத்தல்.

❖ பொருந்தாத சொற்களை வெட்டி விடுக.

............................................
தாய்/ தந்தை/ பாதுகாவலரின்
கையொப்பம்

பெயரும் முகவரியும் (தெளிவான எழுத்துக்களில்):......................................
திகதி:..............................................................
சாட்சி கையொப்பம்:......................................
பெயரும் முகவரியும் (தெளிவான எழுத்துக்களில்):..........................................

14. **மொழித் தேவைகள்:**

தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரர்கள், 1956 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க, அரசகரும மொழிகள் சட்டத்திற்கும் அச்சட்டத்திற்கான திருத்தங்களுக்கும் அமைவாகவும், இலங்கைக் குடியரசின் அரசகரும மொழிக் கொள்கையை அமுல் செய்வதற்கு காலத்துக்கு காலம் விதிக்கப்படுகின்ற சட்டத்திட்டங்களுக்கும் ஏற்ப செயற்படுதல் வேண்டும்.

15. **ஆளடையாளத்தை உறுதிப்படுத்தல்:**

விண்ணப்பதாரர்கள் தங்கள் ஆளடையாளத்தை உறுதிப்படுத்துவதற்கு ஆதாரங்களை சமர்ப்பிக்க வேண்டும். இதற்காக ஆட்பதிவு திணைக்களம் அல்லது தபால் மாஅதிபரால் வழங்கப்பட்ட அடையாள அட்டை மற்றும் மோட்டார் வாகன ஆணையாளர் நாயகத் தினால் வழங்கப்பட்ட சாரதி அனுமதி பத்திரம் ஏற்றுக் கொள்ளப்படும்.

16. பொதுச் சேவையில் உள்ள விண்ணப்பதாரர்களின் விண்ணப்பங்களை, அவர்கள் தெரிவு செய்யப்படும் பட்சத்தில் விடுவிக்க முடியும் என்ற திணைக்களத் தலைவரின் அத்தாட்சியுடன் அனுப்பி வைத்தல் வேண்டும்.

17. **விண்ணப்பங்கள் :**

விண்ணப்பப்படிவம் விண்ணப்பதாரரின் சொந்தக் கையெழுத்தில் கீழே காட்டப்பட்டுள்ள மாதிரிப்படிவத் திற்கமைய தயாரிக்கப்பட்டு, 2026.07.31 ஆம் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு, “ஆளனி நிருவாகப் பணிப்பகம், இலங்கைத் தரைப்படைத் தலைமையகம், பாதுகாப்பு தலைமையக கட்டிடத் தொகுதி, அக்குரேகொட வீதி, பத்தரமுல்லை” என்ற முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும். விண்ணப்பங்கள் இடப்படும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் “இலங்கை இராணுவ நிரந்தர படையில் மகளிர் கெடேற் உத்தியோகத்தர் பாடநெறியின் மகளிர் கெடேற் உத்தியோகத்தர் பதவிக்கான விண்ணப்பம்” எனக் குறிப்பிடுதல் வேண்டும். பிந்திக்கிடைக்கும் விண்ணப்பங்களும் மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைய தயாரிக்கப்படாத விண்ணப்பங்களும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. மேலும், இராணுவத் தலைமையகத்தினால் விண்ணப்பங்கள் விநியோகிக்கப்படவும் மாட்டாது. மேலதிக விபரங்களுக்கும் விண்ணப்பங்களை பதிவிறக்கம் செய்வதற்கும் www.army.lk/officers எனும் இணையத் தளத்தினுள் பிரவேசிக்கவும்.

18. விண்ணப்பத்துடன் பின்வரும் சான்றிதழ்களின் நிழற் படப் பிரதிகளை அனுப்புதல் வேண்டும்:

அ. பிறப்புச் சான்றிதழ்.

ஆ. கல்வித் தகைமைகளை அத்தாட்சிப்படுத்தும் சான்றிதழ்கள்.

இ. விளையாட்டு மற்றும் இணைச் செயற்பாடு களுக்கான சான்றிதழ்கள்.

ஈ. மேலும், தேசிய ஆளடையாள அட்டையின் நகல் பிரதி மற்றும் அண்மையில் பெறப்பட்ட 2''x2½'' அளவிலான நீல நிற பின்புலத்தையுடைய புகைப்படம் என்பன கிராம அலுவலரினால் அல்லது சட்டத்தரணி ஒருவரினால் சான்றுப் படுத்தப்பட்டு அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும்.

19. **நேர்முகப் பரீட்சைகளை நடாத்துதல்:**

மேற்கண்ட தேவைகளைப் பூர்த்தி செய்துள்ள விண் ணப்பதாரர்கள் ஆரம்ப தெரிவுக்கு உட்படுத்தப்படு வார்கள். அவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்ட விண்ணப்ப தாரிகள் இராணுவத் தளபதியால் விதிக்கப்படு கின்றவாறு பரீட்சைகளுக்குத் தோற்றுதல் வேண்டும். பாதுகாப்பு அமைச்சினால் நியமிக்கப்படுகின்ற தெரிவுக் குழுவின் முன்னால், தெரிவு செய்யப்பட்ட விண்ணப்ப தாரிகள் நேர்முகப் பரீட்சைக்கு உட்படுத்தப்பட்டு இறுதியாக தெரிவுசெய்யப்படுவார்கள்.

20. நேர்முகப் பரீட்சைக்குத் தெரிவுசெய்யப்படுகின்ற விண்ணப்பதாரிகளுக்கு நேர்முகப் பரீட்சை நடை பெறுகின்ற இடம், நேரம் மற்றும் திகதி என்பன மின்னஞ்சல் முகவரி ஊடாக அறிவிக்கப்படும். நேர்முகப் பரீட்சை இலங்கை இராணுவ தலைமையகம், பாதுகாப்பு தலைமையக கட்டடத்தொகுதி, அக்குரேகொட வீதி, பத்தரமுல்ல எனும் இடத்தில் நடாத்தப்படும். விண்ணப்ப தாரிகளின் பயணச் செலவுகள் அல்லது பிற செலவுகள் எதுவும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசினால் மீள செலுத்தப்படமாட்டாது.

21. விண்ணப்பதாரி ஒருவரைப் பரிந்துரைக்க முயற்சி செய்யும் எவரும் நட்சான்றிதழொன்றை வழங்குவதன் மூலம் அவ்வாறு செய்யலாம். விண்ணப்பதாரி யொருவரின் தேர்வை எந்த வகையிலும் தூண்டுவது அல்லது செல்வாக்குச் செலுத்த முயற்சிப்பது விண்ணப் பதாரியை தகுதி இழக்கச் செய்யும்.

22. ஆட்சேர்ப்புக்குத் தகைமை பெறாத விண்ணப்ப தாரர்களுக்கு அதுபற்றி அறிவிக்கப்பட மாட்டாது. அத்தகைய விண்ணப்பதாரர்களினால் முன்வைக்கப் படுகின்ற விசாரணைகள் ஏற்றுக்கொள்ளப்படவும் மாட்டாது.

**குறிப்பு:** இந்த வர்த்தமானி அறிவித்தல் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் வெளியிடப்பட்டுள்ளது. சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிமூல வாசகங்களுக்கு இடையில் ஏதேனும் முரண்பாடு காணப்படின், சிங்கள மொழிமூல வாசகம் மேலோங்கி நிற்கும்.

பீ. கே. ஜீ. எம். எல். ரொட்ரிகோ,
ஆர்எஸ்பீ சீடீஎப்-என்டியூ பீஎஸ்சீ ஐஜி
லெப்டினன்ட் ஜெனரல்,
இராணுவத் தளபதி.

இலங்கைத் தரைப்படைத் தலைமையகம்
பாதுகாப்பு தலைமையக கட்டிடத் தொகுதி
அக்குரேகொட வீதி
பத்தரமுல்லை.
2026, மார்ச்சு 25.

07-491/2

---

## திருத்தம்

## விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களத்தில் ஆரம்ப தரம் தொழில்நுட்பமல்லாத சேவை வகுதியின் விளையாட்டுத் தள உதவியாளர் பதவக்காக ஆட்சேர்ப்புச் செய்தல் - 2026

2026, பெப்புருவரி மாதம் 27 ஆந் திகதிய 2,478 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களத்தின் ஆரம்ப தரம் தொழில்நுட்பமல்லாத சேவை வகுதியின் விளையாட்டுத் தள உதவியாளர் பதிக்காக ஆட்சேர்ப்புச் செய்தல் - 2026 இன் 5 அ) இல் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையின் புள்ளிகள் வழங்கப்படுதல் தொடர்பான அட்டவணையில் புள்ளிகளின் அளவுகள் நிறுவன அச்சீட்டுப் பிழை காரணமாக பொதுச் சேவை ஆணைக்குழுவினால அனுமதிக்கப்பட்ட புள்ளிகள் வழங்கப்படும் பெறுமானத்தினை விட வேறுபட்டிருப்பதனால் கீழே தரப்பட்டுள்ளவாறு திருத்தஞ் செய்யப்பட்டுள்ளது.

05. **ஆட்சேர்ப்பு செய்யப்படும் முறை :**

(அ)

| *புள்ளிகள் வழங்கப்படும் தலைப்புகள்* | *ஆகக்கூடிய புள்ளிகளின் அளவு* | *தெரிவு செய்யப் படுவதற்கு கவனத்திற் கொள்ளப்படும் குறைந்த புள்ளிகளின் அளவு* |
|---|---|---|
| 1. கல்வித் தகைமைகள் மற்றும் ஏனைய தகைமைகள் | 30 | 40% |
| 2. அனுபவம் | 35 | |
| 3. தொழிற்றகைமை | 30 | |
| 4. நேர்முகப் பரீட்சையின் போது காட்டப்படும் திறமைகள் | 05 | |
| மொத்தம் | 100 | |

எஸ். அச்சுதன்,
பணிப்பாளர் நாயகம்,
விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களம்.

07-564

---

## இலங்கை நீதிபதிகள் நிறுவகம்

இலங்கை நீதிபதிகள் நிறுவகத்தில் வெற்றிடமாகவுள்ள பின்வரும் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் இலங்கைப் பிரசைகளிடமிருந்து கோரப்படுகின்றன.

1. **முகாமைத்துவ உதவியாளர்** - தொழில்நுட்பம் சார்ந்தது (மென்பொருள் மற்றும் வன்பொருள் தொழில் நுட்பவியலாளர்) : வெற்றிடம் 01

**குறைந்தபட்ச தகைமைகள் :**

**வெளிவாரி விண்ணப்பதாரிகள் :**

**கல்வித் தகைமை :**

ஒவ்வொரு பதவியின் விடயத்திற்கு அமைவாக, மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்ப/ தொழிற்பயிற்சி நிருவகமொன்றினால் வழங்கப்பட்ட தேசிய தொழில் தகைமை ஐந்தாம் மட்டத்திற்கு (NVQ - 05) குறையாத மட்டத்தில் வன்பொருள் மற்றும் மென்பொருள் பற்றிய தேர்ச்சிச் சான்றிதழைப் பெற்றிருத்தல்.

**பதவிக்குரிய ஏனைய விசேட தகைமைகள் :**

தேசிய தொழில் தகைமை ஐந்தாம் மட்டத்திற்கு (NVQ - 05) குறையாத மட்டத்திலான சான்றிதழைப் பெற்ற பின்னர், தொடர்புடைய துறையில் 02 வருட அனுபவம்.

**உள்வாரி விண்ணப்பதாரிகள்:**

மேலே குறிப்பிடப்பட்டுள்ள வெளிவாரி விண்ணப்ப தாரிகளுக்கான தகுதிகள் ஏற்புடையதாகும்.

**சம்பள அளவுத்திட்டம்:**

2025.03.25 ஆம் திகதிய முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை இலக்கம் 01/2025 இன் படி பதவிக்குரிய மாதாந்த சம்பள அளவுத்திட்டம்:

ரூபா 50,540.00 - 10 x 540 - 7 x 630 – 4 x 1,080 - 20 x 1,280– 90,270.00 (MA 2-2 - 2025) இச்சம்பளம் 2027.01.01 ஆம் திகதி முதலே உரித்தாகும். இச்சுற்றறிக்கையின் அட்டவணை II இன் ஏற்பாடுகளின்படி, நியமனம் நடைமுறைப்படுத்தப்படும் திகதியிலிருந்து சம்பளம் வழங்கப்படும்.

**வயதெல்லை:**

விண்ணப்பதாரர்கள் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப் படும் முடிவுத் திகதியன்று 18 வயதுக்கு குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். (உள்வாரி விண்ணப்பதாரர்களுக்கு அதிகபட்ச வயது எல்லை ஏற்புடையதாக மாட்டாது.)

02. **முகாமைத்துவ உதவியாளர்** (தொழில்நுட்பம் சாராதது)

தகைமைகள் (கட்டாய பொதுத் தகைமைகள்)

**வெளிவாரி விண்ணப்பதாரர்கள்:**

**கல்வித் தகைமை:**

சிங்களம் அல்லது தமிழ் மொழி, ஆங்கில மொழி மற்றும் கணிதம் உட்பட நான்கு (04) பாடங்களில் திறமைச் சித்திகளுடன் (Credit passes) ஒரே அமர்வில் ஆறு (06) பாடங்களில் கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்.

மற்றும்

கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர்தர) பரீட்சையில் குறைந்தபட்சம் மூன்று (03) பாடங்களில் (பொதுச் சாதாரண பரீட்சை தவிர்ந்து) சித்தியடைந்திருத்தல்.

**உள்வாரி விண்ணப்பதாரிகள்:**

(அ) ஆரம்ப தரம் – திறன்சாராத, அரை திறன் மற்றும் திறன்சார் சேவை வகைகளைச் சேர்ந்த, கீழே குறிப்பிடப்பட்டுள்ள ‘ஆ’ தகுதியைக் கொண்டுள்ள ஊழியர்கள் இதற்கு விண்ணப்பிக்கலாம்.

(ஆ) கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர) பரீட்சையில்:

I. சிங்களம் / தமிழ்
II. கணிதம்
III. ஆங்கில மொழி

ஆகிய பாடங்கள் உட்பட நான்கு (04) பாடங்களில் திறமைச் சித்திகளுடன் (Credit passes) ஒரே அமர்வில் ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.

(கணினி சொல் செயலாக்கம் / தட்டச்சு தொடர்பான மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட கற்கைநெறி ஒன்றை பூர்த்தி செய்திருத்தல் அல்லது அதற்கு சமமான திறமைகள் பொருத்தமான சந்தர்ப்பங்களில் தகுதிகளாக சேர்க்கப்படலாம்)

(இ) சேவையில் நிரந்தர நியமனம் பெற்றிருப்பதுடன், அந்நியமனங்களில் உறுதிப்படுத்தப்பட்டும் இருத்தல் வேண்டும்.

(ஈ) குறிக்கப்பட்ட திகதிக்கு உடன் முந்தியதாக, நிரந்தர நியமனம் ஒன்றில் குறைந்தபட்சம் ஐந்து (05) வருடங்கள் தொடர்ச்சியான திருப்திகரமான சேவைக்காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

**சம்பள அளவுத்திட்டம்:**

2025.03.25 ஆம் திகதியிடப்பட்ட முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை இலக்கம் 01/2025 இன் படி, பதவிக்குரிய மாதாந்த சம்பள அளவுத்திட்டம்: ரூபா 46,220.00 - 10 x 540 - 7 x 630 – 12 x 1,080 - 12 x 1,280– 84,350.00 (MA 1-2 - 2025)

இச்சம்பளம் 2027.01.01 ஆம் திகதியிலிருந்தே உரித்தாகும். இச்சுற்றறிக்கையின் அட்டவணை II இன் ஏற்பாடுகளுக்கமைய நியமனம் நடைமுறைப் படுத்தப்படும் திகதியிலிருந்து சம்பளம் வழங்கப்படும்.

**வயதெல்லை:**

விண்ணப்பதாரிகள் விண்ணப்பங்களை ஏற்றுக் கொள்ளும் இறுதித் திகதியன்று 18 வயதுக்குக் குறை யாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். (உள்வாரி விண்ணப்பதாரர்களுக்கு அதிக பட்ச வயதெல்லை ஏற்புடையதாக மாட்டாது.)

**ஒவ்வொரு விண்ணப்பதாரரும்:**

I. இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.

II. பதவிக்குரிய கடமைகளைச் செவ்வனே ஆற்று வதற்கு உடலியள் ரீதியாகவும் உளரீதியாகவும் தகுதியுடையவராக இருத்தல் வேண்டும்.

III. நற்பண்புகளைக் கொண்ட நபராக இருத்தல் வேண்டும்.

**ஏனைய கொடுப்பனவுகள்:**

வாழ்க்கைச் செலவுப் படி மற்றும் அரசினால் அங்கீ கரிக்கப்பட்ட ஏனைய கொடுப்பனவுகள் வழங்கப்படும்.

**ஆட்சேர்ப்பு முறைமை:**

மேற்குறிப்பிடப்பட்ட அடிப்படைத் தகைமைகளைப் பூர்த்தி செய்த விண்ணப்பதாரிகளிலிருந்து, கட்டமைக் கப்பட்ட நேர்முகப்பரீட்சை மற்றும் / அல்லது எழுத்து மூலப் போட்டிப் பரீட்சையில் பெறப்படும் புள்ளிகளின் முன்னுரிமை அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்யப்படும்.

**சேவை நிபந்தனைகள்:**

இப்பதவிகள் நிரந்தரமானவை. 03 வருட தகுதிகாண் காலத்திற்கு உட்பட்டவையாகும். ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியம்: ஊழியர் தனது சம்பளத்திலிருந்து 8% தொகையையும், தொழில் தருநர் 12% தொகையையும் ஊழியர் சேமலாப நிதியத்திற்குப் பங்களிப்புச் செய்வர். ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்காக தொழில்தருநரால் 3% தொகை செலுத்தப்படும்.

**விண்ணப்பிக்கும் முறைமை:**

இலங்கை நீதிபதிகள் நிறுவகத்தின் தர judgesinstitute.lk என்ற இணையத்தளத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்தை (சான்றிதழ்களின் சான்றுப்படுத் தப்பட்ட பிரதிகளுடன்) சரியாகப் பூர்த்தி செய்து, 2026.08.21 ஆந் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ இலங்கை நீதிபதிகள் நிறுவகத்திற்குக் கிடைக்கும் வகையில் பின்வரும் முகவரிக்கு

பதிவுத் தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும். விண்ணப்பப்படிவம் அடங்கிய உறையின் மேல் இடது மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயர் குறிப்பிடப்படல் வேண்டும். விண்ணப்பங்களை பதிவுத் தபாலில் அனுப்பும் திகதியை அல்லாது, நிறுவகத்திற்குக் கிடைக்கும் திகதியையே செல்லுபடியாகும் திகதியாகக் கருதும் உரிமை இலங்கை நீதிபதிகள் நிறுவகத்திற்கு உண்டு. பதிவுத் தபாலில் அனுப்புவதற்கு மேலதிகமாக, https://judgesinstitute.lk/ இணையத்தளத்தில் விண்ணப்பிக்கும் பதவிக்குரிய இணைப்பின் (Link) ஊடாக உள்ள கூகுள் படிவத்தையும் (Google Form) பூர்த்தி செய்து சமர்ப்பித்தல் வேண்டும்.

அரசாங்கத் திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியதிச்சட்ட சபைகளில் தற்போது பணியாற்றும் விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பங்களைச் சம்பந்தப்பட்ட திணைக்களத் தலைவர்கள் ஊடாக அனுப்புவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். சரியாகப் பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பங்களும், விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்குப் பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும். மேலும், தபாலில் தொலைந்துபோனதாக முன்வைக்கப்படும் முறையீடுகள் எதுவும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

பணிப்பாளர்,
இலங்கை நீதிபதிகள் நிறுவகம்.

இல. 80 (5 ஆம் மற்றும் 6 ஆம் மாடி),
அதிகரண மாவத்தை,
கொழும்பு 12.

மாதிரி விண்ணப்பப்படிவம்

விண்ணப்பித்த பதவி : ....................................................

தனிப்பட்ட தகவல்கள்

• முழுப் பெயர்:

• முதலெழுத்துக்களுடன் கூடிய பெயர்:

• தனிப்பட்ட முகவரி:

• தேசிய ஆளடையாள அட்டை இலக்கம்:

• பிறந்த திகதி:

• வயது (விண்ணப்பம் முடியும் திகதியின்படி) :

வருடங்கள்: .... மாதங்கள் :...... நாட்கள்:.............

• தொடர்பு இல.:

• மின்னஞ்சல் முகவரி:

• பாலினம்:

கல்வித் தகைமைகள்:

க.பொ.த. (சாதாரண தரம்) பரீட்சை

| | *விடயம்* | *பெற்ற சித்தி* |
|---|---|---|
| 01 | | |
| 02 | | |
| 03 | | |
| 04 | | |
| 05 | | |
| 06 | | |
| 07 | | |
| 08 | | |
| 09 | | |

க.பொ.த. (உயர் தரம்) பரீட்சை

| | *விடயம்* | *பெற்ற சித்தி* |
|---|---|---|
| 01 | | |
| 02 | | |
| 03 | | |
| 04 | | |

ஏனைய கல்வித் தகைமைகள் (பட்டப்படிப்பு/டிப்ளோமா அல்லது ஏனைய உயர் தகைமைகள்) :

01.......................................................................................................................................

02.......................................................................................................................................

03.......................................................................................................................................

04.......................................................................................................................................

05.......................................................................................................................................

தொழில்முறைத் தகுதிகள் :

01.......................................................................................................................................

02.......................................................................................................................................

03.......................................................................................................................................

04.......................................................................................................................................

05.......................................................................................................................................

பணி அனுபவம் :

01.......................................................................................................................................

02.......................................................................................................................................

03.......................................................................................................................................

04.......................................................................................................................................

05.......................................................................................................................................

தேவையான அனைத்து தகைமைகளையும் நீங்கள் பூர்த்தி செய்துள்ளீர்களா என்பதைக் குறிப்பிடவும் (ஆம்/இல்லை): ................................

உறவினர் அல்லாத இரண்டு நடுவர்கள்

| | |
|---|---|
| 1. பெயர் : | 2. பெயர்: |
| பதவி: | பதவி: |
| தொடர்பிலக்கம்: | தொடர்பிலக்கம்: |

**விண்ணப்பதாரரின் உறுதிமொழி**

இந்த விண்ணப்பத்தில் நான் வழங்கிய தகவல்கள் உண்மையானவை மற்றும் சரியானவை என்று நான் உறுதியளிக்கிறேன்.

திகதி: ……………… விண்ணப்பதாரரின் கையொப்பம்: ................................

**திணைக்களத் தலைவரின் சான்றிதழ்**

விண்ணப்பதாரரான திரு./திருமதி/செல்வி ………………, தற்போது ……………… ஆகப் பணியாற்றி வருகிறார் என்றும், அவர் இந்த அமைச்சு/திணைக்களத்தின் நிரந்தர/தற்காலிக/அமைய ஊழியர் என்றும் இதன்மூலம் உங்களுக்குத் தெரிவிக்கிறேன். இந்தப் பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டால், அவர் பணியிலிருந்து விடுவிக்கப்படலாம் அல்லது விடுவிக்கப்படமாட்டாது.

பெயர்:.....................................................................................................................................

பதவி:.......................................................................................................................................

முகவரி:...................................................................................................................................

திகதி:.....................................................................................................................................

07-545

**இலங்கைப் பாராளுமன்றம்**

பாராளுமன்றச் செயலாளர் நாயகத்தின் பணியாட்டொகுதியில் வெற்றிடமாக உள்ள "பாதுகாப்பு உத்தியோகத்தர்" பதவிக்கு நல்ல தேகாரோக்கியமும் சிறந்த நல்லொழுக்கமும் கொண்ட இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

இதன் கீழ்த் தரப்பட்டுள்ள மாதிரிப் படிவத்திற்கு அமைவாக தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்களை, கல்வி / தொழில்சார் தகைமைகள் மற்றும் அனுபவம் பற்றிய சான்றிதழ்களின் பிரதிகளுடன் 2026.08.17 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக் கூடிய வகையில் "பாராளுமன்றச் செயலாளர் நாயகம், இலங்கைப் பாராளுமன்றம், ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே" எனும் முகவரிக்கு <u>பதிவுத் தபாலில் மாத்திரம்</u> அனுப்பி வைத்தல் வேண்டும். விண்ணப்பப்படிவத்தைத் தாங்கிவரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியைக் குறிப்பிட வேண்டும். (இந்த அறிவித்தல் தொடர்பான விபரங்களை www.parliament.lk என்ற இணையத்தளத்திலிருந்தும் பெற்றுக் கொள்ளலாம்).

**பாதுகாப்பு உத்தியோகத்தர் பதவி (வெற்றிடங்களின் எண்ணிக்கை - 03)**

1. **சம்பள அளவுத்திட்டம்:**

2025.03.25 ஆந் திகதிய, 04/2025 ஆம் இலக்க முகாமைத்துவச் சேவைகள் சுற்றறிக்கையின் I ஆம் அட்டவணைக்கு இணங்க, இந்தப் பதவிக்குரிய மாதாந்தச் சம்பள அளவுத்திட்டம் ரூபா 47,240.00 - 9x540 - 10 x 590 - 3 x 680 - ரூபா 60,040.00 ஆகும் (சகல மேலதிக கொடுப்பனவுகளும் அடங்கலாக இந்தச் சம்பள அளவுத்திட்டத்திற்குரிய ஆகக்குறைந்த ஆரம்ப முழுமொத்த மாதாந்தச் சம்பளம் அண்ணளவாக ரூ. 87,000.00 ஆகும்).

2. **கல்வித் தகைமைகள் மற்றும் அனுபவம்:**

கல்விப் பொதுத் தராதர (சாதாரண தரப்) பரீட்சையில் தமிழ் அல்லது சிங்கள மொழியில் திறமைச் சித்தியும், கணிதம் மற்றும் ஆங்கிலம் ஆகிய பாடங்களில் சாதாரணச் சித்தியும் அடங்கலாக இரு தடவைகளுக்கு மேற்படாத அமர்வுகளில் (06) பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

அத்துடன்

10 வருடங்களுக்குக் குறையாததும் கௌரவத்திற்குப் பாத்திரமானதுமான சேவையுடன் இராணுவ சார்ஜன் அல்லது அதற்குக் குறையாத தரத்திலான ஒரு பதவியை வகிக்கும் இலங்கை ஆயுதம் தாங்கிய படை (நிரந்தர) உறுப்பினர் ஒருவராக அல்லது 10 வருடங்களுக்குக் குறையாததும் கௌரவத்திற்குப் பாத்திரமானதுமான சேவையுடன் சார்ஜன் அல்லது அதற்குக் குறையாத தரத்திலான ஒரு பதவியை வகிக்கும் இலங்கை பொலிஸ் சேவையின் உறுப்பினர் ஒருவராக இருத்தல்.

அல்லது

விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்று, பாராளுமன்றச் செயலாளர் நாயகத்தின் பணியாட்டொகுதியில் 'ஏ' அல்லது 'பீ' சம்பள வகுதிகளின் கீழ்வரும் பதவியொன்றில் 10 வருட திருப்திகரமான சேவைக்காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல்.

3. **வயதெல்லை:**

விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்று 30 வயதுக்குக் குறையாமலும் மற்றும் 50 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். (பாராளுமன்றச் செயலாளர் நாயகத்தின் பணியாட்டொகுதி அலுவலர்களுக்கு இந்த உச்ச வயதெல்லை ஏற்புடையதாகாது.)

4. **ஆட்சேர்ப்பு முறை :**

எழுத்துமூலப் பரீட்சை மற்றும் நேர்முகப் பரீட்சை ஆகியவற்றின் மூலம் ஆட்சேர்ப்புச் செய்யப்படும்.

(அ) எழுத்துமூலப் பரீட்சை

மொழி அறிவும் பொது அறிவும் பரீட்சிக்கப்படும். எழுத்துமூலப் பரீட்சையில் பெறக்கூடிய அதிகபட்சப் புள்ளிகள் நூறு (100) ஆகும்.

(ஆ) நேர்முகப் பரீட்சை

எழுத்துமூலப் பரீட்சையில் சித்தியடையும் விண்ணப்பதாரர்கள் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவார்கள் என்பதோடு, நேர்முகப் பரீட்சையில் பின்வரும் அளவுகோல்களின்படி புள்ளிகள் வழங்கப்படும். அதில் பெறக்கூடிய அதிகபட்சப் புள்ளிகள் நூறு (100) ஆகும்.

| | *விடயப் பரப்பு* |
|---|---|
| 01 | மேலதிக கல்வி மற்றும் தொழில்சார் தகைமைகள் |
| 02 | விடய அறிவு |
| 03 | அனுபவம் |
| 04 | ஆளுமை மற்றும் நேர்முக பரீட்சையில் வெளிப்படுத்தும் திறமைகள் |

5. **சேவைக்கான நியதிகளும் நிபந்தனைகளும்:**

(i) இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதியத்தைக் கொண்டதுமாகும். தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரர்களுக்கு முதலில் மூன்று (03) வருட கால தகுதிகாண் அடிப்படையில் நியமனம் வழங்கப்படும் என்பதுடன், அரசாங்க அல்லது மாகாண அரசாங்க சேவையின் பதவி ஒன்றில் நிரந்தரமாக்கப்பட்டுள்ள விண்ணப்பதாரர் ஒருவர் தேர்ந்தெடுக்கப்பட்டால், அவர் ஒரு(01) வருட கால பதில் கடமை அடிப்படையில் நியமிக்கப்படுவார்.

(ii) நியமனம் செய்யப்படும் எண்ணிக்கை மற்றும் நியமனங்கள் நடைமுறைக்கு வரும் திகதி பாராளுமன்றச் செயலாளர் நாயகத்தால் தீர்மானிக்கப்படும். ஏதேனும் வெற்றிடத்தை அல்லது அனைத்து வெற்றிடங்களையும் நிரப்பாதிருக்கும் அதிகாரம் பாராளுமன்றச் செயலாளர் நாயகத்திற்கு உண்டு.

(iii) தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரர்கள் பாராளுமன்றச் செயலாளர் நாயகத்தின் பணியாட்டொகுதிக்கு ஏற்புடைய நிதிப் பிரமாணக் குறிப்புகளுக்கும் திணைக்கள ஒழுங்குவிதிகளுக்கும் இணங்கியொழுக வேண்டும்.

(iv) தேர்ந்தெடுக்கப்படும் பரீட்சார்த்திகள் அரசாங்கம் குறித்துரைக்கும் ஒரு விகிதத்தில் தத்தமது சம்பளத்திலிருந்து விதவைகள், அநாதைகள்/தபுதாரர்கள் பற்றிய ஓய்வூதிய நிதியத்திற்குப் பங்களிப்புத் தொகையைச் செலுத்த வேண்டும்.

(v) தேர்ந்தெடுக்கப்படும் பரீட்சார்த்திகள் மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்தப்படுவார்கள்.

(vi) தேர்ந்தெடுக்கப்படும் பரீட்சார்த்திகள் நியமிக்கப்படுவதற்கு முன்னர் அவர்கள் பற்றிய பாதுகாப்பு விடுவிப்பு அறிக்கைகள் பெற்றுக் கொள்ளப்படும்.

6. விண்ணப்பதாரர்கள் தமது விண்ணப்பங்களுடன் பின்வரும் சான்றிதழ்களின் பிரதிகளை (மூலப்பிரதிகள் அல்ல) இணைத்து அனுப்ப வேண்டும். தேவைப்படுத்தப்படும்போது மட்டும் சான்றிதழ்களின் மூலப் பிரதிகளைச் சமர்ப்பித்தல் வேண்டும்:

(அ) பிறப்புச் சான்றிதழ் ;

(ஆ) கல்வித் தகைமைகளை உறுதிப்படுத்தும் சான்றிதழ்கள் ;

(இ) தொழில்சார் தகைமைகளை உறுதிப்படுத்தும் சான்றிதழ்கள்;

(ஈ) அனுபவத்தை உறுதிப்படுத்தும் சான்றிதழ்கள்.

7. ஆயுதம் தாங்கிய படைகள் மற்றும் இலங்கை பொலிஸ் சேவையில் பணிபுரியும் விண்ணப்பதாரர்கள் தமது விண்ணப்பப்படிவங்களை உரிய ஆயுதம் தாங்கிய படைகளின் தளபதி / பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதி ஊடாக அனுப்பி வைத்தல் வேண்டும்.

8. பதவியைப் பெற ஏதாவது ஒரு விதத்தில் செல்வாக்கைப் பிரயோகிப்பது தகுதியீனத்திற்கு வழிவகுக்கும்.

9. விண்ணப்பத்தில் வெளிப்படுத்தப்பட்டுள்ள ஏதேனும் தகவல் விண்ணப்பதாரர் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு முன்னர் பிழையானது எனக் கண்டறியப்பட்டால், அப்போது அவர் தகைமையற்றவர் எனக் குறிப்பிடப்படுவதற்கும், நியமனத்தின் பின்னர் அவ்வாறு கண்டறியப்பட்டால் பதவியிலிருந்து நீக்கப்படுவதற்கும் அது காரணமாக அமையும்.

10. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியின் பின்னர் கிடைக்கின்ற அல்லது மேற்குறித்த சான்றிதழ்களின் பிரதிகள் இன்றி அனுப்பப்படுகின்ற அல்லது திணைக்கள/ நிறுவன தலைவர்கள் ஊடாக அனுப்பி வைக்கப்படாத விண்ணப்பங்களும் (ஏற்கனவே அரசாங்க/ மாகாண அரசாங்க சேவையில் உள்ளவராயின்) அல்லது மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு இணங்க தயாரிக்கப்படாத விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும். விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்குப் பின்னர் கிடைக்கின்றதும் திணைக்கள/ நிறுவன தலைவர்களின் ஊடாக அனுப்பி வைக்கப்படுகின்றதுமான விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.

11. தமிழ், சிங்கள அல்லது ஆங்கில மொழி மூலம் பிரசுரிக்கப்படுகின்ற இந்த அறிவித்தலின் உரைகளுக்கிடையில் ஏதேனும் பொருத்தப்பாடின்மை அல்லது ஒவ்வாமை ஏற்பட்டுள்ளதாக புலப்படும் பட்சத்தில், அவ்வாறான ஒரு சந்தர்ப்பத்தில் சிங்கள மொழிமூல அறிவித்தலுக்கு அமைய செயலாற்றப்படும்.

ஹன்ச அபேரத்ன,
பாராளுமன்ற செயலாளர் நாயகத்திற்குப்
பதிலாக.

இலங்கைப் பாராளுமன்றம்,
ஸ்ரீ ஜயவர்த்தனபுர கோட்டே,
2026, யூலை 28.

**இலங்கைப் பாராளுமன்றம்**

மாதிரி விண்ணப்பப்படிவம்

...................... பதவி

01. (அ) முதலெழுத்துகளுடன் பெயர் (தமிழில்):

..........................................................................................

..........................................................................................

(ஆ) முதலெழுத்துகளால் குறிக்கப்படும் பெயர்கள் (தமிழில்) :

..........................................................................................

..........................................................................................

(இ) முழுப் பெயர் (ஆங்கிலப் பேரெழுத்துக்களில்): (Mr/Mrs /Miss)

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

02. தேசிய ஆளடையாள அட்டை இலக்கம்:

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | |

03. (அ) i) தனிப்பட்ட முகவரி:

..........................................................................................

..........................................................................................

ii) தொலைபேசி இலக்கம்:

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

iii) WhatsApp இலக்கம் :

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

iv) மின்னஞ்சல் (e-mail) முகவரி:........................................................

(ஆ) i) அலுவலக முகவரி:

..........................................................................................

..........................................................................................

ii) தொலைபேசி இலக்கம்:

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

(இ) அனுமதி அட்டை அனுப்பிவைக்கப்பட வேண்டிய முகவரி :

தனிப்பட்ட ☐ அலுவலக ☐

04. (அ) பிறந்த திகதி: ஆண்டு : .....................மாதம்: ......................திகதி: ...............................

(பிறப்புச் சான்றிதழின் பிரதி இணைக்கப்படுதல் வேண்டும்)

(ஆ) விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்று வயது:

வருடங்கள் : ............ மாதங்கள்: ............நாட்கள்:.........

05. சிவில் அந்தஸ்த்து : (திருமணமானவர் / திருமணமாகாதவர்)

06. பால் : (ஆண்/பெண்)

07. இலங்கைப் பிரசையா: (ஆம்/இல்லை)

08. கல்வித் தகைமைகள் : (சான்றிதழ்களின் பிரதிகள் இணைக்கப்படுதல் வேண்டும்.)

| *பரீட்சை* | *பாடம்* | *பெற்ற சித்தி* | *ஆண்டு* |
|---|---|---|---|
| க.பொ.த. (சா/த) | தமிழ்/ சிங்களம் | | |
| | கணிதம் | | |
| | ஆங்கிலம் | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

09. ஏனைய தகைமைகள் : ( சான்றிதழ்களின் பிரதிகள் இணைக்கப்படுதல் வேண்டும்)
..................................................................................................................................
..................................................................................................................................
..................................................................................................................................

10. அனுபவம்: (சான்றிதழ்களின் பிரதிகள் இணைக்கப்படுதல் வேண்டும்)

| *நிறுவனம்/திணைக்களம்* | *பதவி* | *சேவைக்காலம்* |
|---|---|---|
| | | |
| | | |
| | | |

11. தற்போதைய தொழில் பற்றிய விபரங்கள் :

(அ) நிறுவனத்தின் பெயரும் முகவரியும் : ......................................................................

(ஆ) முதல் நியமனத் திகதி :..........................................................................................

(இ) தற்போது வகிக்கும் பதவி: ....................................................................................

(ஈ) மாதாந்த அடிப்படைச் சம்பளம்:..............................................................................

(உ) கொடுப்பனவுகள்:...................................................................................................

(ஊ) முழுமொத்தச் சம்பளம்:.........................................................................................

12. நீங்கள் ஏதேனும் குற்றச்செயலுக்காக நீதிமன்றத்தில் குற்றவாளியாக இனங் காணப்பட்டுள்ளீர்களா? (ஆம் / இல்லை) ஆமெனில், அது பற்றிய விபரங்களைக் குறிப்பிடுக:

...........................................................................................................................................

நான், இந்த விண்ணப்பப்படிவத்தில் தெரிவித்துள்ள விவரங்கள் யாவும் உண்மையானவை என்றும் சரியானவை என்றும் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன். இதில் தரப்பட்டுள்ள ஏதேனும் விபரம் தவறானது அல்லது பொய்யானதென, நான் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு முன்னர் கண்டறியப்பட்டால், இந்தப் பதவிக்கு தகுதியற்றவனாவேன் என்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட பின்னர் கண்டறியப்பட்டால், எதுவித நட்டஈடுகளுமின்றி சேவையிலிருந்து நீக்கப்படுவேன் என்றும் நன்கறிவேன்.

திகதி: ........................................ ..........................................................................
விண்ணப்பதாரரின் கையொப்பம்

**நிறுவன/ திணைக்களத் தலைவரின் சான்றிதழ்**

(ஆயுதம் தாங்கிய படைகள் மற்றும் இலங்கை பொலிஸ் சேவையில் உள்ள விண்ணப்பதாரர்களுக்கு மாத்திரம்.)

பாராளுமன்றச் செயலாளர் நாயகம் அவர்களுக்கு,

இலங்கை இராணுவம் / விமானப்படை / கடற்படை / பொலிஸ் சேவையில் ............................................................................ ...........................................................................................பதவியை வகிக்கின்ற திரு/திருமதி/செல்வி ..................................... ................................................... என்பவரின் விண்ணப்பத்தைச் சிபாரிசு செய்து சமர்ப்பிக்கின்றேன். இவர் உரிய பதவியில் நிரந்தரமாக்கப்பட்டுள்ளார் / நிரந்தரமாக்கப்படவில்லை, இவரின் வேலை மற்றும் நடத்தை என்பன திருப்திகரமானது. இவருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகள் ஏதுமில்லை, இவருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகள் எதனையும் மேற்கொள்ளும் அபிப்பிராயமில்லை என உறுதிசெய்கின்றேன். இவர் இப்பதவிக்கு தெரிவு செய்யப்படுவாராயின், இவரை சேவையிலிருந்து விடுவிக்க முடியும் / முடியாது. (தயவுசெய்து தேவையற்ற சொற்களைக் கீறி விடவும்.)

திகதி: ............................... .........................................................................................
நிறுவன/திணைக்களத் தலைவரின் கையொப்பம்
(உத்தியோகபூர்வ முத்திரை)

07-565

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சு

### கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சின் முகாமைத்துவ உதவியாளர் (தொழில்நுட்பம் சாரா) தொகுதி - 02 சேவை வகுதியைச் சார்ந்த தொழில்நுட்ப பீட உதவியாளர் (உயிர் முறைமைகள் தொழில்நுட்பவியல்) தரம் III இற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை - 2025 (2026)

01. அப/25/1691/802/004 – X மற்றும் 2025.09.23 ஆம் திகதியுடைய தீர்மானத்திற்கு இணங்க, தொழில் நுட்ப பீட உதவியாளர் (உயிர் முறைமைகள் தொழில் நுட்பவியல்) தரம் III பதவிகளுக்காக ஆட்சேர்ப்புச் செய்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை யானது, பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் 2026, நவெம்பர் மாதத்தில் நடாத்தப்படும் என இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

விண்ணப்பப்படிவமானது இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் www.doenets.lk இணையத்தளத்தில் "Our Services" இன் கீழ் உள்ள "Online Applications – Recruitment Exams/ E.B. Exams" ஊடாக பிரசுரிக்கப் பட்டுள்ளதுடன், விண்ணப்பப்படிவங்களை நிகழ்நிலை (Online) முறையில் மாத்திரமே சமர்ப்பிக்க முடியும். நிகழ்நிலை விண்ணப்பப் படிவங்களை ஏற்றுக்கொள்ளும் பணிகள் 2026, ஓகத்து மாதம் 03 ஆம் திகதி மு.ப. 09.00 மணிக்கு ஆரம்பமாவதுடன், 2026, ஓகத்து மாதம் 31 ஆம் திகதி பி.ப. 09.00 மணியுடன் நிறைவடையும்.

உத்தியோகத்தர்கள் தங்களது விண்ணப்பப்படிவத்தின் பிரதியொன்றை தங்களின் தனிப்பட்ட கோவையில் உள்ளடக்குவதற்காக நிறுவனத் தலைவர்களிடம் ஒப்படைக்க வேண்டும் என்பதுடன், நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படும் சந்தர்ப்பத்தில் நிறுவனத் தலைவரினால் உறுதிப்படுத்தப்பட்ட விண்ணப்பப் படிவத்தின் பிரதி மற்றும் சேவைக் காலத்தை உறுதிப் படுத்தும் கடிதம் என்பவற்றைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

02. பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் நடாத்தப்படும் எழுத்து மூலமான பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையில், திறமையின் படி தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரர்கள், தகைமை மதிப்பீட்டு நேர்முகப் பரீட்சையின் பின்னர் தொழில்நுட்ப பீட உதவியாளர் (உயிர் முறைமைகள் தொழில்நுட்பவியல்) தரம் III பதவிகளுக்காக நியமிப்பதற்குத் தெரிவு செய்யப் படுவர்.

03. நியமிக்கப்படும் எண்ணிக்கை மற்றும் நியமனங்கள் நடைமுறைப்படுத்தப்படும் திகதி என்பன அமைச்சின் செயலாளரினால் தீர்மானிக்கப்படும்.

(அ) அரச சேவையின் நியமனங்களைக் கட்டுப்படுத்தும் பொதுவான நிபந்தனைகளுக்கும், கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சின் முகாமைத்துவ உதவியாளர் (தொழில்நுட்பம் சாரா) தொகுதி - 02 சேவை வகுதிக்குரிய ஆட்சேர்ப்பு நடைமுறைக்கு அமைவாகவும், 2022.12.14 ஆந் திகதியிட்ட அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ள அரச சேவை ஆணைக்குழுவின் நடைமுறை ஒழுங்கு விதிகளுக்கு உட்பட்டும் தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரர் ஒருவர் தொழில்நுட்ப பீட உதவியாளர் (உயிர் முறைமைகள் தொழில்நுட்பவியல்) தரம் III பதவிக்கு நியமிக்கப்படுவார்.

(ஆ) நியமனத்திற்காகத் தெரிவு செய்யப்படும் பட்சத்தில், முதலாம் நியமனம் கிடைக்கப் பெற்ற கடமைச் சேவை நிலையத்தில் குறைந்தபட்சம் மூன்று (03) வருடங்கள் கட்டாயமாகச் சேவையாற்ற வேண்டும். எவ்வாறாயினும், அமைச்சின் செயலாளரினால் தீர்மானிக்கப்படும் ஏதேனும் விசேட காரணங்களின் அடிப்படையில், அக் காலப்பகுதி நிறைவடைவதற்கு முன்னர் எவரேனும் ஒரு உத்தியோகத்தரை இடம் மாற்றம் செய்ய வேண்டியேற்படின், அதற்கான அதிகாரம் அமைச்சின் செயலாளருக்கு உள்ளது.

(இ) இந்நியமனமானது ஒரு வருட கால தகுதிகாண் காலத்திற்கு உட்பட்டதாகும். முகாமைத்துவ உதவியாளர் (தொழில்நுட்பம் சாரா) தொகுதி - 02 சேவை வகுதிக்குரிய ஆட்சேர்ப்பு நடைமுறையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு, ஆட்சேர்ப்புச் செய்யப் பட்டு 03 வருடங்களுக்குள் முதலாவது வினைத் திறன்காண் தடைதாண்டல் பரீட்சையில் சித்தி யடைதல் வேண்டும்.

(ஈ) நியமனத்திற்காகத் தெரிவு செய்யப்படும் பட்சத்தில், தகைமைகளைப் பூர்த்தி செய்த மொழி மூலத்திற்கு அமைவாக, 2020.10.16 ஆந் திகதியிட்ட 18/2020 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கை மற்றும் அதனுடன் தொடர்புடைய ஏனைய சுற்றறிக்கைகளின் விதிகளுக்கு ஏற்ப, உரியவாறு அரச கரும மொழித் தேர்ச்சியைப் பூர்த்தி செய்தல் வேண்டும்.

04. 2025.03.25 ஆம் திகதியிட்ட 10/2025 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் MN 01-2025 எனும் சம்பளக் குறியீடு இப்பதவிக்குரியது என்பதுடன், அதற்குரிய சம்பள அளவுத் திட்டம் ரூ. 45,230.00 - 10x540 - 11x630 - 10x890 - 10x1,190 - ரூ. 78,360.00 ஆகும். இச்சம்பளம் தங்களுக்கு 2027.01.01 ஆந் திகதி முதல் உரித்தாகும். நியமனம் நடைமுறைக்கு வரும் திகதியிலிருந்து இச்சுற்றறிக்கையின் விதிகளுக்கு அமைவாக தங்களுக்குச் சம்பளம் வழங்கப்படும்

05. இப்பதவியானது நிரந்தரமான மற்றும் ஓய்வூதிய உரித்துடையதாகும். (ஓய்வூதிய முறைமை தொடர்பாக அரசாங்கத்தினால் எதிர்காலத்தில் எடுக்கப்படும் கொள்கை ரீதியான தீர்மானங்களுக்கு உட்பட்டதாகும்.)

06. **பதவிக்குரிய கடமைப் பொறுப்புகள்:**

தொழில்நுட்ப பீட உதவியாளர் (உயிர் முறைமைகள் தொழில்நுட்பவியல்)

1. பாடசாலைகளின் தொழில்நுட்பப் பீடத்தின் உயிர் முறைமைகள் தொழில்நுட்பவியல் ஆய்வுகூடங்கள் தொடர்பான பொறுப்பு மற்றும் அது தொடர்பான முழுமையான பொறுப்பு.
2. உயிர் முறைமைகள் தொழில்நுட்பவியல் உபகரணங்களின் கையிருப்புகளைப் பேணுதல், பற்றாக்குறைகளை இனங்காணல், தேவையான அளவுகளைக் கொள்வனவு செய்வதற்கு ஆதரவளித்தல் மற்றும் பொருட்களை விடுவித்தல்.
3. திருத்தியமைக்கக்கூடிய நிலையிலுள்ள உபகரணங்களை திருத்தியமைத்தல், இரசாயனப் பொருட்கள், நுகர் பொருட்கள், உபகரணங்கள், களஞ்சிய அலுமாரிகள் போன்றவற்றுக்கு ஏற்படக் கூடிய சேதங்களைத் தடுத்தல், அவற்றை திருடர்களிடமிருந்து பாதுகாப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்தல் மற்றும் அவ்வாறு சேதங்கள் ஏற்படுவதற்கான சாத்தியக்கூறுகளைக் குறைப்பதற்குத் தேவையான நடவடிக்கை எடுத்தல்.
4. இரசாயனப் பொருட்கள், நுகர் பொருட்கள், உபகரணங்கள், களஞ்சிய அலுமாரிகள் உட்பட ஆய்வுகூடத்திலுள்ள அனைத்துப் பொருட்கள் தொடர்பிலும் முழுமையான பொறுப்பு வகித்தல் மற்றும் அது தொடர்பான ஆவணங்களை முறையாகப் பேணி வருதல்.
5. தேவையான பரிசோதனைகளை மேற்கொள்வதற்காக ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் ஆதரவளித்தல்.
6. உபகரணங்கள் மற்றும் பொருட்களின் பாதுகாப்பு குறித்து மிகுந்த அவதானத்துடன் இருந்து, தேவையான பொருட்களை வழங்குதல்.
7. தொழில்நுட்பப்பீடத்தின்கல்விச்செயற்பாடுகளைத் தொடர்ச்சியாக முன்னெடுத்துச் செல்லக்கூடிய வகையில் பணிகளை ஒழுங்குசெய்தல்.
8. இரசாயனப் பொருட்களைச் சரியான முறையில் அடுக்கி வைத்தல் மற்றும் களஞ்சியப்படுத்துவதன் மூலம் மாணவர்களுக்கு ஏற்படக்கூடிய பாதிப்புகளிலிருந்து அவர்களைப் பாதுகாத்தல்.
9. தனது விடயப் பரப்பிற்குரிய விடயங்கள் தொடர்பாகத் தனது மேற்பார்வை அதிகாரிகளுடன் சிறந்த தொடர்பைப் பேணல் மற்றும் அவர்களினால் ஒதுக்கப்படும் ஏனைய கடமைகளை நிறைவேற்றுதல்.

07. **தகைமைகள்:**

கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சின் ஆரம்பச் சேவை வகுதியைச் சார்ந்த பதவிகளை வகிப்போர், மட்டுப்படுத்தப்பட்ட அடிப்படையில் தொழில்நுட்ப பீட உதவியாளர் (உயிர் முறைமைகள் தொழில்நுட்பவியல்) பதவிக்கு விண்ணப்பிப்பதற்காக,

(அ) **கல்வித் தகைமைகள்:**

தொழில்நுட்ப பீட உதவியாளர் (உயிர் முறைமைகள் தொழில்நுட்பவியல்)

கல்விப் பொதுத் தராதரப்பத்திர (சாதாரண தர)ப் பரீட்சையில் தாய்மொழி, கணிதம் மற்றும் விஞ்ஞானம் ஆகிய பாடங்கள் உட்பட மேலும் ஒரு பாடத்திற்குச் திறமைச் சித்தியுடன் ஒரே அமர்வில் ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

(ஆ) **அனுபவம் :**

குறித்த திகதியில் கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சின் கீழ் உள்ள தேசிய பாடசாலைகள், தேசிய கல்வியியல் கல்லூரிகள், ஆசிரியர் கலாசாலைகள், ஆசிரியர் மத்திய நிலையங்கள் உட்பட பொதுக் கல்வித் துறைக்கு உரித்தான நிறுவனங்களில் ஆரம்பச் சேவை வகுதிக்குரிய நிரந்தரப் பதவியொன்றில் குறைந்தபட்சம் 05 வருட கால முனைப்புடன் கூடிய மற்றும் திருப்திகரமான சேவைக்காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

(ஆ) **ஏனைய தகைமைகள்:**

I. கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சின் கீழ் ஆரம்ப சேவை வகுதியில் நிரந்தர நியமனமொன்றைக் கொண்டிருத்தல் வேண்டும் என்பதுடன், அந்நியமனங்களில் நிரந்தரமாக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

II. ஏதேனும் பதவியொன்றில் நிரந்தரமாக நியமிக்கப்படுவதற்கு முன்னர் பணியாற்றிய தற்காலிக/ அமைய/ ஒப்பந்த அடிப்படையிலான சேவைக்காலப் பகுதிகள் மற்றும் ஏதேனும் பதவியொன்றில் நிரந்தரமாக நியமிக்கப்படுவதற்கான நிபந்தனையாகப் பூர்த்தி செய்துள்ள பயிற்சிக் காலங்கள் என்பன கணக்கில் கொள்ளப்படமாட்டாது.

III. தகைமைகளைப் பூர்த்தி செய்ய வேண்டிய திகதிக்கு முந்தைய 05 வருட காலப்பகுதியில் திருப்திகரமான சேவைக்காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

IV. அரசாங்க சேவை ஆணைக்குழுவின் 01/2020 ஆம் இலக்கச் சுற்றறிக்கையின் விதிகளுக்கு அமைவாக ஒழுக்காற்று ரீதியிலான தண்டனைகள் எவற்றையும் பெறாதவராக இருத்தல் வேண்டும்.

V. குறித்த திகதிக்குரிய வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சையைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

VI. ஒவ்வொரு விண்ணப்பதாரரும் இலங்கையின் எந்தவொரு பிரதேசத்திலும் சேவையாற்றுவதற்கும், பதவியின் கடமைகளை நிறைவேற்றுவதற்கும் போதுமான உடல் மற்றும் உளரீதியான தகுதியைக் கொண்டிருத்தல் வேண்டும்.

அதிகபட்ச வயது எல்லை பொருந்தாது.

08. **பரீட்சை நடைமுறை**

இப்பரீட்சையானது சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிமூலங்களில் நடாத்தப்படும். விண்ணப்பதாரர் ஒருவர் தனக்குரிய ஏதேனும் ஒரு மொழி மூலத்தைத் தெரிவு செய்தல் வேண்டும் என்பதுடன், பரீட்சைக்குரிய அனைத்து வினாத்தாள்களுக்கும் அதே மொழி மூலத்திலேயே விடையளிக்க வேண்டும். விண்ணப்பித்த மொழி மூலத்தை பின்னர் மாற்றுவதற்கு அனுமதிக்கப்படமாட்டாது. இப்பரீட்சையானது இரண்டு வினாத்தாள்களைக் கொண்டதாகும்.

09. **மதிப்பீட்டுச் செயன்முறை**

| | புள்ளிகள் | |
|---|---|---|
| பொது அறிவு (எழுத்துப் பரீட்சை) | 100 | (காலம் 01 மணித்தியாலம்) |
| உளச் சார்பு (எழுத்துப் பரீட்சை) | 100 | (காலம் 01 மணித்தியாலம்) |
| தகைமை மதிப்பீட்டு நேர்முகப் பரீட்சை | 50 | |

I. **பொது அறிவு (காலம் 01 மணித்தியாலம், 100 புள்ளிகள் )**

மேலே 06 இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு, பதவிக்குரிய கடமைகளை நிறைவேற்றுவதற்குத் தேவையான பொது அறிவு.

II. **உளச் சார்பு (காலம் 01 மணித்தியாலம் 100 புள்ளிகள் )**

விண்ணப்பதாரர்களின் எண் கணிதத் திறன், தர்க்கரீதியான சிந்தனை மற்றும் பொது நுண்ணறிவு ஆகியவற்றை மதிப்பிடும் வகையில் தயாரிக்கப்பட்ட ஒரு பல்தேர்வு வினாத்தாளாகும்.

III. **தகைமை மதிப்பீட்டு நேர்முகப் பரீட்சை (50 புள்ளிகள் )**

கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சின் செயலாளரினால் நியமிக்கப்படும் நேர்முகப் பரீட்சை சபையினரால், இங்கு 10 ஆம் பந்தியின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள பிரதான துறைகளின் கீழ் புள்ளிகள் வழங்கப்படும். புள்ளிகள் வழங்குவதற்காகக் கருத்திற் கொள்ளப்படும் தகைமைகள் யாவும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ பூர்த்தி செய்யப்பட்டிருத்தல் வேண்டும். இதன் போது வேண்டுமென்றே போலியான விபரங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளமை கண்டறியப்படின், அரசாங்க சேவை ஆணைக்குழுவின் அறிவுறுத்தல்களுக்கு உட்பட்டு விண்ணப்பதாரர்களுக்கும் அவ் விண்ணப்பப்படிவங்களை உறுதிப்படுத்திய திணைக்களத் தலைவர்களுக்கும் எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

இப் போட்டிப் பரீட்சையின் மூலம் நியமனங்களைப் பெறுவதற்குத் தகைமை பெறுவதற்காக, பொது அறிவு மற்றும் உளச்சார்பு பரீட்சை ஆகிய ஒவ்வொரு பாடத்திற்கும் குறைந்தது 40 புள்ளிகள் வீதம் பெற்றுச் சித்தியடைதல் வேண்டும். எழுத்துப் பரீட்சையின் திறமை வரிசைக்கு ஏற்ப, நிரப்பப்பட வேண்டியுள்ள வெற்றிடங்களின் எண்ணிக்கையின் அடிப்படையில், வெற்றிடங்களின் எண்ணிக்கையைப் போன்று இருமடங்கானவர்கள் தகைமை மதிப்பீட்டு நேர்முகப் பரீட்சைக்காக அழைக்கப்படுவர். (எழுத்துப் பரீட்சையின் புள்ளிகளோ அல்லது திறமை வரிசையோ தகைமை மதிப்பீட்டு நேர்முகப் பரீட்சைச் சபையினருக்கு வழங்கப்படமாட்டாது). அதற்கமைய, நேர்முகப் பரீட்சைச் சபையினரால் அங்கீகரிக்கப்பட்ட புள்ளிகள் வழங்கல் திட்டத்திற்கமைய ஏற்ப புள்ளிகள் வழங்கப்படும் என்பதுடன், அடிப்படைத் தகைமைகளும் சரிபார்க்கப்படும். எழுத்துப் பரீட்சையில் பெற்றுக்கொண்ட புள்ளிகள் மற்றும் தகைமை மதிப்பீட்டு நேர்முகப் பரீட்சையில் பெற்றுக்கொண்ட புள்ளிகள் என்பவற்றின் கூட்டுத்தொகையின் அடிப்படையில் ஒவ்வொரு விண்ணப்பதாரரினதும் திறமை நிலை தீர்மானிக்கப்படும்.

10. முகாமைத்துவ உதவியாளர் (தொழில்நுட்பம் சாரா) தொகுதி - 02 சேவை வகுதிக்குரிய ஆட்சேர்ப்பு நடைமுறைக்கு அமைவாக, தொழில்நுட்ப பீட உதவியாளர் (உயிர் முறைமைகள் தொழில்நுட்பவியல்) பதவிக்கு மட்டுப்படுத்தப்பட்ட அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்வதற்கான தகைமை மதிப்பீட்டு நேர்முகப் பரீட்சை - புள்ளிகள் வழங்கும் நடைமுறை - 2025

| *புள்ளி வழங்கப்படும் பிரதான துறைகள்* | *புள்ளிகள் வழங்கப்படும் விதம்* | *ஆகக் கூடிய புள்ளிகள்* | |
|---|---|---|---|
| 01 . மேலதிக கல்வித் தகைமைகள்<br>i க.பொ.த (சாதாரண தரம்) | • விசேட திறமைச் சித்தி- ஒரு பாடத்திற்கு 02 புள்ளிகள் வீதம்<br>• அதி திறமைச் சித்தி- ஒரு பாடத்திற்கு 01 புள்ளி வீதம்<br>• திறமைச் சித்தி- ஒரு பாடத்திற்கு 0.5 புள்ளி வீதம் (கணிதம், தாய்மொழி, ஆங்கிலம் மற்றும் மற்றுமொரு பாடத்திற்கு திறமைச் சித்தி பெற்றிருக்க வேண்டிய கட்டாயத் தகைமைக்கு மேலதிகமாக ) | 10 | 15 |
| ii . க.பொ.த (உயர் தரம்) | • விசேட திறமைச் சித்தி- ஒரு பாடத்திற்கு 02 புள்ளிகள் வீதம்<br>• அதி திறமைச் சித்தி- ஒரு பாடத்திற்கு 01 புள்ளிகள் வீதம்<br>• திறமைச் சித்தி- ஒரு பாடத்திற்கு 0.5 புள்ளிகள் வீதம் | 5 | |
| iii . பட்டம் | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றிலிருந்து பட்டத்தைப் பெற்றிருத்தல் | 15 | |
| 02. சேவை அனுபவம் | 05 வருடங்களுக்குப் பின்னர் மேலதிகமாக உள்ள ஒவ்வொரு வருடத்திற்கும் 02 புள்ளிகள் வீதம். | 15 | 15 |
| 03. கணினித் திறன்<br>•<br>அரசாங்கப் பதிவு இலக்கம் சான்றிதழில் குறிப்பிடப்பட்டிருக்காவிடின், அது அரசாங்கத்தில் பதிவுசெய்யப்பட்ட நிறுவனம் என்பதற்கான எழுத்துபூர்வமான ஆவணத்தை உரிய நிறுவனத்தில் பெற்றுச் சமர்ப்பித்தல் வேண்டும். | அரசாங்கத்தில் பதிவுசெய்யப்பட்ட நிறுவனம் ஒன்றினால் வழங்கப்பட்ட கணினி தொடர்பான டிப்ளோமா அல்லது அதற்கு மேற்பட்ட சான்றிதழ். | 3 | 5 |
| | அரசாங்கத்தில் பதிவுசெய்யப்பட்ட நிறுவனம் ஒன்றில் கணினி தொடர்பான சான்றிதழ் பாடநெறியை தொடர்ந்திருத்தல். | 2 | |
| 04. தாய்மொழி மற்றும் இரண்டாம் மொழி தவிர்ந்த வேறு மொழியொன்றிலான தேர்ச்சி (சான்றிதழ்கள் மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டும்) | ஆங்கிலம் அல்லது வேறு ஏதேனும் ஒரு மொழி தொடர்பாகக் குறைந்தபட்சம் டிப்ளோமா ஒன்றைப் பூர்த்தி செய்திருத்தல். | 5 | 5 |
| | க.பொ.த (உயர் தர) பாடமொன்றாக ஆங்கிலம் அல்லது வேறு ஏதேனும் ஒரு மொழியை தொடர்ந்திருத்தல் (01 இன் கீழ் இதற்குப் புள்ளிகள் வழங்கப்பட்டிருப்பின், இவ் விடயத்திற்காகக் கருத்திற் கொள்ளப்படமாட்டாது). | 2 | |

| *புள்ளி வழங்கப்படும் பிரதான துறைகள்* | *புள்ளிகள் வழங்கப்படும் விதம்* | *ஆகக் கூடிய புள்ளிகள்* | |
|---|---|---|---|
| 05. நிறுவனத்தின் அபிவிருத்திக்காக வழங்கப்பட்ட பங்களிப்பு | பாராட்டுக் கடிதங்கள் - ஒரு கடிதத்திற்கு 2.5 புள்ளிகள் வீதம்.<br>• தான் கடமையாற்றும் நிறுவனத் தலைவரினால் வழங்கப்பட்டிருத்தல் வேண்டும்.. | 5 | 5 |
| | ஒரு கௌரவிப்புக் கடிதத்திற்கு – ஒரு புள்ளி வீதம்<br>• தான் கடமையாற்றும் நிறுவனத் தலைவரினால் வழங்கப்பட்டிருத்தல் வேண்டும் | 5 | |
| 06. நேர்முகப் பரீட்சையில் வெளிப்படுத்தும் திறமை | ஆளுமை | 3 | 5 |
| | தொடர்பாடல் திறன்கள் | 2 | |
| | மொழி கையாளுகை | 1 | |

(அனைத்துத் தகைமைகளும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ பூர்த்தி செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.)

குறிப்பு 1

சமர்ப்பிக்கப்படும் சான்றிதழை வழங்கிய நிறுவனத்தின் அரசாங்கப் பதிவு இலக்கம் அச்சான்றிதழில் குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும். அவ்வாறு குறிப்பிடப்பட்டிருக்காவிடின், அது அரசாங்கத்தில் பதிவுசெய்யப்பட்டது என்பதற்கான பதிவு இலக்கத்துடனான எழுத்துபூர்வமான உறுதிப்படுத்தலைச் சம்பந்தப்பட்ட நிறுவனத்திடமிருந்து பெற்றுச் சமர்ப்பிப்பது விண்ணப்பதாரரின் கடமையாகும்.

11. **போலியான விபரங்களைச் சமர்ப்பிப்பதற்கான தண்டனைகள் :**

I. விண்ணப்பப்படிவங்களை நிரப்பும் போது மிகவும் அவதானத்துடன் சரியான விபரங்கள் வழங்கப்பட வேண்டும். இப்பரீட்சைக்குரிய விதிகளுக்கமைய எவரேனும் ஒரு விண்ணப்பதாரர் இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்குத் தகைமையற்றவர் எனக் கண்டறியப்படின், பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடைபெறும் போதோ அல்லது அதற்குப் பின்னரோ எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அவரது விண்ணப்பதாரர் தகுதி இரத்துச் செய்யப்படலாம்.

II. விண்ணப்பதாரர் ஒருவரால் வழங்கப்பட்ட விபரங்கள் பின்னர் ஒரு காலத்தில் தவறானவை எனக் கண்டறியப்படின் அல்லது அவரால் வேண்டுமென்றே ஏதேனும் ஒரு விடயம் மறைக்கப்பட்டுள்ளமை வெளிப்படின், அவருக்கு மேலும் நியமனம் வழங்குவது குறித்துக் பரிசீலிக்கப்படமாட்டாது என்பதுடன், இப்பரீட்சையின் காரணமாக வழங்கப்பட்டிருந்த நியமனத்தை இரத்துச் செய்வதற்கும் அல்லது அரசாங்க சேவையிலிருந்து நீக்குவதற்கும் அவர் உள்ளாக்கப்படுவார்.

12. **பரீட்சை நிபந்தனைகள்**

நிகழ்நிலை (Online) பரீட்சை விண்ணப்பப்படிவம் ஆங்கில மொழியில் மாத்திரமே பூர்த்தி செய்யப்பட வேண்டும். விண்ணப்பதாரரினால் நிகழ்நிலை மூலமாக சமர்ப்பிக்கப்பட்ட மென்பிரதி செல்லுபடியாகும் விண்ணப்பமாக திணைக்களத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்டதா / நிராகரிக்கப்பட்டதா என்பது, முறைமைக்குள் பிரவேசிப்பதற்குப் பயன்படுத்தப்பட்ட கையடக்கத் தொலைபேசி இலக்கத்திற்கு குறுஞ்செய்தி (SMS) மூலமாக அல்லது மின்னஞ்சல் (Email) முகவரிக்கு அறிவிக்கப்படும். நிகழ்நிலை விண்ணப்பப்படிவத்தைப் பூர்த்தி செய்ய முன்னர், பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற்காகத் தயாரிக்கப்பட்டுள்ள அறிவுறுத்தல் பத்திரிகையை (Instruction) பதிவிறக்கம் செய்துகொள்ளவும். விண்ணப்பப்படிவத்தை நிரப்பும் போது அந்த அறிவுறுத்தல்களை சரியாகப் பின்பற்றவும். விண்ணப்பப்படிவத்தின் அச்சுப் பிரதியைப் பெற்றுக்கொண்டதன் பின்னர் அதில் மேற்கொள்ளப்படும் எந்தவொரு திருத்தமும் செல்லுபடியாகும் திருத்தமாகக் கருதப்படமாட்டாது. முழுமையாக பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பங்கள் எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும்.

13. பரீட்சைக் கட்டணம் ரூபா 600.00 ஆகும். பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தும்போது நிகழ்நிலை முறைமையின் மூலம் வழங்கப்படும் பின்வரும் கட்டணச் செலுத்துகை வழிமுறைகளின் கீழ் மாத்திரமே செலுத்தப்பட வேண்டும்.

(அ) ஏதேனும் வங்கிக் கடன் அட்டை மூலம் (Any Bank Credit Card)

(ஆ) இணையவழிக் கொடுக்கல் வாங்கல் வசதியைக் கொண்ட ஏதேனும் வங்கிப் பற்று அட்டை மூலம் (Any Bank Debit Card With the Facility of Internet Transactions)

(இ) இலங்கை வங்கியின் இணையவங்கி முறைமை / Flex செயலி மூலம் (Online Banking Method/ Flex App of Bank of Ceylon )

(ஈ) இலங்கை வங்கியின் ஏதேனும் ஒரு கிளை மூலம் ( Any Branch of the Bank of Ceylon)

குறிப்பு :-

மேற்குறிப்பிட்ட வழிமுறைகளின் மூலம் கொடுப்பனவுகளை மேற்கொள்ளும் விதம் பற்றிய அறிவுறுத்தல்கள், இணையத்தளத்தில் இப்பரீட்சைக்குரிய தொழில்நுட்ப அறிவுறுத்தல்களின் கீழ் பிரசுரிக்கப்பட்டுள்ளன.

14. கொடுப்பனவுகள் பெற்றுக் கொள்ளப்பட்டமை குறித்து குறுஞ்செய்தி (SMS) மூலமாக அல்லது மின்னஞ்சல் செய்தி மூலமாக அறிவிக்கப்படும். பரீட்சைக் கட்டணத்திற்கான முழுத் தொகையும் செலுத்தப்பட வேண்டும் என்பதுடன், பரீட்சைக் கட்டணத்தை குறைவாகவோ அல்லது கூடுதலாகவோ செலுத்தியுள்ள விண்ணப்பதாரர்களின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். மேலே குறிப்பிடப்பட்டுள்ள கட்டணம் செலுத்தும் வழிமுறைகளின் ஊடாக பரீட்சைக் கட்டணங்களைச் செலுத்தும் போது ஏற்படும் தவறுகள் தொடர்பாக இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் பொறுப்பேற்கமாட்டாது.

15. பரீட்சைக்காகச் செலுத்தப்பட்ட பணம் எக்காரணம் கொண்டும் மீளச் செலுத்தப்படமாட்டாது அல்லது வேறு பரீட்சை ஒன்றிற்காக மாற்றப்படமாட்டாது.

16. விண்ணப்பப்படிவங்களைச் சமர்ப்பிப்பதை இறுதித் திகதி வரை தாமதப்படுத்துவதனால் ஏற்படும் எந்தவொரு பாதகமான சூழ்நிலைகளையும் விண்ணப்பதாரரே பொறுப்பேற்க வேண்டும்.

17. வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைக் கொண்டவர்கள் மாத்திரமே விண்ணப்பித்துள்ளனர் என்ற ஊகிப்பின் அடிப்படையில், விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ உரிய பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தி, சரியாகப் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களைச் சமர்ப்பித்துள்ள விண்ணப்பதாரர்களுக்கு மாத்திரம் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் பரீட்சை அனுமதிப் பத்திரங்கள் இணையவழியாக மாத்திரமே விநியோகிக்கப்படும். பரீட்சை அனுமதிப் பத்திரங்கள் விநியோகிக்கப்பட்டவுடன் இலங்கை பரீட்சைத் திணைக்களத்தினால் அது குறித்து இணையத்தள அறிவித்தல் மூலமாக அல்லது விண்ணப்பதாரர்களுக்குக் குறுஞ்செய்தி மூலமாக அறிவிக்கப்படும். தனது அனுமதிப் பத்திரம் கிடைக்கப் பெறாத விண்ணப்பதாரர் எவராவது இருப்பின், அறிவித்தலில் குறிப்பிட்டுள்ளவாறு அது குறித்து இலங்கை பரீட்சைத் திணைக்களத்தின் நிறுவனப் பரீட்சை ஒழுங்கமைப்பு கிளையிடம் வினவ வேண்டும். அவ்வாறு வினவும் போது, விண்ணப்பதாரர் தான் விண்ணப்பித்த பரீட்சையின் பெயர், விண்ணப்பதாரரின் முழுப் பெயர், தேசிய அடையாள அட்டை இலக்கம் மற்றும் முகவரி ஆகியவற்றைச் சரியாகக் குறிப்பிட்டுத் தயாரித்த கோரிக்கை கடிதமொன்றை, இணையத்தள அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வினவுவது மிகவும் பயனுள்ளதாக அமையும். அவ்வாறு வினவும் போது, பரீட்சைத் திணைக்களத்தினால் கோரப்படும் ஏதேனும் ஒரு விபரத்தை உறுதிப்படுத்துவதற்காக, பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவத்தின் நிழற்பிரதி மற்றும் பரீட்சைக் கட்டணம் செலுத்தியதற்கான பற்றுச் சீட்டின் நிழற்பிரதி ஆகியவற்றைத் தம்வசம் வைத்திருப்பது பிரயோசனம் மிக்கதாக இருக்கும். அனுமதிப் பத்திரத்தைப் பரிசோதித்துப் பார்த்து, திருத்தங்கள் ஏதேனும் இருப்பின் நேர காலத்துடன் பரீட்சைத் திணைக்களத்தைத் தொடர்புகொண்டு, விண்ணப்பப் படிவத்திற்கு அமைவாக உரிய திருத்தங்களை மேற்கொண்டு கொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்திலோ அல்லது நேர்முகப் பரீட் சையின் போதோ திருத்தங்களுக்காக முன்வைக்கப் படும் கோரிக்கைகள் கருத்திற்கொள்ளப்படமாட்டாது.

18. பரீட்சைக்கான அனுமதிப் பத்திரத்தில் உள்ள விண்ணப்பதாரரின் கையொப்பம், நிறுவனத் தலைவர் அல்லது அவரினால் அதிகாரமளிக்கப்பட்ட அதிகாரி ஒருவரினால் உறுதிப்படுத்த வேண்டும்.

19. பரீட்சைப் பெறுபேறுகள் தொடர்பாகப் பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் தீர்மானமே இறுதியான தீர்மானமாகும்.

20. அமைச்சின் செயலாளரினால் பெறுபேறுகளை வெளியிடுவதற்குப் பொருத்தமான திகதியொன்று அறிவிக்கப்பட்டதன் பின்னர், எழுத்துப் பரீட்சையில் ஒவ்வொரு பாடத்திற்கும் பெற்றுக்கொண்ட புள்ளிகள் / மொத்தப் புள்ளிகள் குறிப்பிடப்பட்ட பெறுபேற்று ஆவணத்தை, பரீட்சைக்குத் தோற்றிய அனைத்து விண்ணப்பதாரர்களுக்கும் தபால் மூலம் அனுப்புவதற்கு அல்லது www.results.exams.gov.lk என்ற இணையத்தளத்தின் ஊடாகப் பெறுபேறுகளை வெளியிடுவதற்கு இலங்கைப் பரீட்சைத் திணைக் களத்தினால் நடவடிக்கை எடுக்கப்படும்.

21. **பரீட்சைக்கு அனுமதித்தல் :**

(அ) பரீட்சைக்குத் தோற்றும் விண்ணப்பதாரர்கள் தங்களது கையொப்பம் உறுதிப்படுத்தப்பட்ட அனுமதிப் பத்திரத்தை, தாங்கள் தோற்றும் முதலாவது பரீட்சை தினத்தன்று அப் பரீட்சை மண்டபத்தின் பரீட்சை நிலையப் பிரதான மேற் பார்வையாளரிடம் சமர்ப்பித்தல் வேண்டும். அத்தகைய அனுமதிப் பத்திரத்தைச் சமர்ப்பிக்காத விண்ணப்பதாரர் எவருக்கும் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது.

(ஆ) விண்ணப்பதாரர் ஒருவர் தனக்கு ஒதுக்கப்பட்டுள்ள பரீட்சை மண்டபத்திலேயே பரீட்சைக்குத் தோற்ற வேண்டும். ஒவ்வொரு விண்ணப்பதாரரும் பின்பற்ற வேண்டிய விதிமுறைகள் இவ்வர்த்த மானப் பத்திரிகையின் ஆரம்பத்தில் பிரசுரிக்கப் பட்டுள்ளன.

குறிப்பு: விண்ணப்பதாரர் ஒருவருக்குப் பரீட்சை அனுமதிப்பத்திரம் விநியோகிக்கப்பட்டமையானது, அவர் இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கான தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ளார் என்பதற்கானதொரு அங்கீகாரமாகக் கருதப்படமாட்டாது.

22. **விண்ணப்பதாரர்களின் அடையாளம்:**

பரீட்சார்த்திகள் பரீட்சை மண்டபத்தினுள் தாங்கள் தோற்றும் ஒவ்வொரு பாடத்தின் போதும் பரீட்சை மண்டப பிரதான மேற்பார்வையாளர் திருப்தியடையும் வகையில் தங்களது அடையாளத்தை உறுதிப்படுத்தல் வேண்டும். அதற்காகப் பின்வரும் ஆவணங்களில் ஏதேனும் ஒன்று ஏற்றுக்கொள்ளப்படும்:

I. தேசிய அடையாள அட்டை

II. செல்லுபடியாகும் வெளிநாட்டு கடவுச்சீட்டு

III. செல்லுபடியாகும் இலங்கை சாரதி அனுமதிப் பத்திரம்

விண்ணப்பதாரர்களின் அடையாளத்தை உறுதிப் படுத்திக் கொள்ளக் கூடிய வகையில் முகத்தை மூடாமலும், இலத்திரனியல் தொடர்பாடல் சாதனங்களை அணிந்திருக்கவில்லை என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளக் கூடிய வகையில் இரு காதுகளையும் மூடாமலும் பரீட்சை மண்டபத்தினுள் நுழைய வேண்டும். அவ்வாறு தங்களது அடையாளத்தை உறுதிப்படுத்துவதற்கு மறுக்கும் விண்ணப்பதாரர்கள் பரீட்சை மண்டபத்தினுள் அனுமதிக்கப்படமாட்டார்கள். மேலும், பரீட்சை மண்டபத்தினுள் நுழைந்த தருணம் முதல் பரீட்சை முடிந்து அதிலிருந்து வெளியேறும் வரை முகத்தையும் இரு காதுகளையும் மூடாமல் இருத்தல் வேண்டும்.

23. சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூலங்களில் வெளியிடப்படும் இந்த அறிவித்தலின் மொழி வசனங்களிடையே ஏதேனும் பொருத்தப்பாடின்மை அல்லது முரண்பாடுகள் காணப்படின், அத்தகைய சந்தர்ப்பங்களில் சிங்கள மொழி மூலமான அறிவித்தலுக்கு அமைவாக நடவடிக்கை எடுக்கப்படும்.

நாலக களுவெவ,
செயலாளர்.

கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சு,
“இசுருபாய",
பத்தரமுல்லை,
2026, யூலை 21.

07-499/1

---

**கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சு**

## கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சின் முகாமைத்துவ உதவியாளர் (தொழில்நுட்பம் சாரா) தொகுதி - 02 சேவை வகுதியைச் சார்ந்த தொழில்நுட்ப பீட உதவியாளர் (பொறியியல் தொழில்நுட்பம்) தரம் III இற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை - 2025(2026)

01. அப/25/1691/802/004 – X மற்றும் 2025.09.23 ஆம் திகதியுடைய தீர்மானத்திற்கு இணங்க, தொழில்நுட்ப பீட உதவியாளர் (பொறியியல் தொழில்நுட்பம்) தரம் III பதவிகளுக்காக ஆட்சேர்ப்புச் செய்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சையானது, பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் 2026, நவெம்பர் மாதத்தில் நடாத்தப்படும் என இத்தால் அறிவிக்கப் படுகின்றது.

விண்ணப்பப்படிவமானது இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் www.doenets.lk இணையத்தளத்தில் "Our Services" இன் கீழ் உள்ள "Online Applications – Recruitment Exams/ E.B. Exams” ஊடாக பிரசுரிக்கப்பட்டுள்ளதுடன், விண்ணப்பப்படிவங்களை நிகழ்நிலை (Online) முறையில் மாத்திரமே சமர்ப்பிக்க முடியும். நிகழ்நிலை விண்ணப்பப்படிவங்களை ஏற்றுக்கொள்ளும் பணிகள் 2026, ஓகத்து மாதம் 03 ஆம் திகதி மு.ப. 09.00 மணிக்கு ஆரம்பமாவதுடன், 2026, ஓகத்து மாதம் 31 ஆம் திகதி பி.ப. 09.00 மணியுடன் நிறைவடையும்.

உத்தியோகத்தர்கள் தங்களது விண்ணப்பப் படிவத்தின் பிரதியொன்றை தங்களின் தனிப்பட்ட கோவையில் உள்ளடக்குவதற்காக நிறுவனத் தலைவர்களிடம் ஒப்படைக்க வேண்டும் என்பதுடன், நேர்முகப்

பரீட்சைக்கு அழைக்கப்படும் சந்தர்ப்பத்தில் நிறுவனத் தலைவரினால் உறுதிப்படுத்தப்பட்ட விண்ணப்பப் படிவத்தின் பிரதி மற்றும் சேவைக் காலத்தை உறுதிப்படுத்தும் கடிதம் என்பவற்றைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

02. பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் நடாத்தப்படும் எழுத்து மூலமான பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையில், திறமையின் படி தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரர்கள், தகைமை மதிப்பீட்டு நேர்முகப் பரீட்சையின் பின்னர் தொழில்நுட்ப பீட உதவியாளர் (பொறியியல் தொழில்நுட்பம்) தரம் III பதவிகளுக்காக நியமிப்பதற்குத் தெரிவு செய்யப்படுவர்.

03. நியமிக்கப்படும் எண்ணிக்கை மற்றும் நியமனங்கள் நடைமுறைப்படுத்தப்படும் திகதி என்பன அமைச்சின் செயலாளரினால் தீர்மானிக்கப்படும்.

(அ) அரசாங்க சேவையின் நியமனங்களைக் கட்டுப்படுத்தும் பொதுவான நிபந்தனைகளுக்கும், கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சின் முகாமைத்துவ உதவியாளர் (தொழில்நுட்பம் சாரா) தொகுதி - 02 சேவை வகுதிக்குரிய ஆட்சேர்ப்பு நடைமுறைக்கு அமைவாகவும், 2022.12.14 ஆந் திகதியிட்ட அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக் கப்பட்டுள்ள அரசாங்க சேவை ஆணைக் குழுவின் நடைமுறை ஒழுங்கு விதிகளுக்கு உட் பட்டும் தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரர் ஒருவர் தொழில்நுட்ப பீட உதவியாளர் (பொறியியல் தொழில்நுட்பம்) தரம் III பதவிக்கு நியமிக்கப்படுவார்.

(ஆ) நியமனத்திற்காகத் தெரிவு செய்யப்படும் பட்சத்தில், முதலாம் நியமனம் கிடைக்கப் பெற்ற கடமைச் சேவை நிலையத்தில் குறைந்தபட்சம் மூன்று (03) வருடங்கள் கட்டாயமாகச் சேவையாற்ற வேண்டும். எவ்வாறாயினும், அமைச்சின் செயலாளரினால் தீர்மானிக்கப்படும் ஏதேனும் விசேட காரணங்களின் அடிப்படையில், அக் காலப்பகுதி நிறைவடைவதற்கு முன்னர் எவரேனும் ஒரு உத்தியோகத்தரை இடமாற்றம் செய்ய வேண்டியேற்படின், அதற்கான அதிகாரம் அமைச்சின் செயலாளருக்கு உள்ளது.

(இ) இந்நியமனமானது ஒரு வருட கால தகுதிகாண் காலத்திற்கு உட்பட்டதாகும். முகாமைத்துவ உதவியாளர் (தொழில்நுட்பம் சாரா) தொகுதி - 02 சேவை வகுதிக்குரிய ஆட்சேர்ப்பு நடைமுறையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு, ஆட்சேர்ப்புச் செய்யப் பட்டு 03 வருடங்களுக்குள் முதலாவது வினைத் திறன்காண் தடைதாண்டல் பரீட்சையில் சித்தி யடைதல் வேண்டும்.

(ஈ) நியமனத்திற்காகத் தெரிவு செய்யப்படும் பட்சத்தில், தகைமைகளைப் பூர்த்தி செய்த மொழி மூலத்திற்கு அமைவாக, 2020.10.16 ஆந் திகதியிட்ட 18/2020 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கை மற்றும் அதனுடன் தொடர்புடைய ஏனைய சுற்றறிக்கைகளின் விதிகளுக்கு ஏற்ப, உரியவாறு அரச கரும மொழித் தேர்ச்சியைப் பூர்த்தி செய்தல் வேண்டும்.

04. 2025.03.25 ஆம் திகதியிட்ட 10/2025 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் MN 01-2025 எனும் சம்பளக் குறியீடு இப்பதவிக்குரியது என்பதுடன், அதற்குரிய சம்பள அளவுத் திட்டம் ரூ. 45,230.00 - 10x540 - 11x630 - 10x890 - 10x1,190 - ரூபா 78,360.00 ஆகும். இச்சம்பளம் தங்களுக்கு 2027.01.01 ஆந் திகதி முதல் உரித்தாகும். நியமனம் நடைமுறைக்கு வரும் திகதி யிலிருந்து இச்சுற்றறிக்கையின் விதிகளுக்கு அமைவாக தங்களுக்குச் சம்பளம் வழங்கப்படும்.

05. இப்பதவியானது நிரந்தரமான மற்றும் ஓய்வூதிய உரித்துடையதாகும். (ஓய்வூதிய முறைமை தொடர்பாக அரசாங்கத்தினால் எதிர்காலத்தில் எடுக்கப்படும் கொள்கை ரீதியான தீர்மானங்களுக்கு உட்பட்டதாகும்.)

06. **பதவிக்குரிய கடமைப் பொறுப்புகள்:**

தொழில்நுட்ப பீட உதவியாளர் (பொறியியல் தொழில் நுட்பம்)

1. பாடசாலைகளின் தொழில்நுட்பப் பீடத்தின் பொறியியல் தொழில்நுட்பத்திற்குரிய மூன்று வகையான (சிவில் தொழில்நுட்பம், மின் தொழில்நுட்பம் மற்றும் இயந்திரவியல் தொழில் நுட்பம்) ஆய்வுகூடங்களுள் உரிய ஆய்வு கூடத்திற்குரிய உபகரணங்கள் தொடர்பான முழுமையான பொறுப்பு
2. பொறியியல் தொழில்நுட்பவியல் (சிவில் தொழில்நுட்பம், மின் தொழில்நுட்பம் மற்றும் இயந்திரவியல் தொழில்நுட்பம்) பாடத்திற்குரிய இருப்புப் பதிவேட்டினையும் நுகர்வுப் பொருட்கள் ஏட்டினையும் சம்பந்தப்பட்ட பாடத்தைக் கற்பிக்கும் ஆசிரியர்களின் மேற்பார்வையின் கீழ் முறையாகப் பேணிச் செல்லல்.
3. பற்றாக்குறைகளைக் கண்டறிவதற்கும் தேவை யான அளவுகளுக்கான கொள்வனவுக் கட்டளை களை வழங்குவதற்கும் பாடத்தைக் கற்பிக்கும் ஆசிரியருக்கு உதவுதல்.
4. கல்வி அமைச்சினால் வெளியிடப்பட்டுள்ள தொழில் நுட்ப பீட வழிகாட்டல் கையேடு பற்றிய புரிதலைக் கொண்டிருத்தல், அதற்கமையச் செயற்படுதல் மற்றும் எதிர்காலத்தில் வெளியிடப்படும் சுற்றறிக் கைகள் மற்றும் ஒழுங்கு விதிகளுக்கமையச் செயற் படுதல்.

5. தேவையான சந்தர்ப்பங்களில் உரிய செயற் பாடுகளுக்காக நுகர்வுப் பொருட்கள், பாட உபகரணங்கள், வேலை மேசைகள் மற்றும் செய்முறைச் செயற்பாடுகள் நடத்தப்படும் இடங்களை மாணவர்களுக்காகத் தயார்படுத்திக் கொடுத்தலும் அதற்குத் தேவையான ஒத்துழைப்பை வழங்குதலும்.

6. பழுதுபார்க்க வேண்டிய மட்டத்திலுள்ள உபகரணங் களை இனங்கண்டு, அவற்றுக்குரிய பராமரிப்பு மற்றும் பழுதுபார்த்தல் பணிகளை மேற்கொள்ளல்.

7. செயற்பாடுகள் நிறைவடைந்த பின்னர், சம்பந்தப் பட்ட பாட உபகரணங்களைப் பராமரிப்பு நடவடிக் கைகளுக்கு உட்படுத்தி, அவற்றை மீண்டும் களஞ்சியப்படுத்தல்.

8. தொழில்நுட்பப் பீடத்தின் பிரதான மின்சுற்று மற்றும் செய்முறைச் செயற்பாடுகள் நடைபெறும் வேளையிலும், செயற்பாடுகள் நிறைவடைந்த பின்னரும் பாதுகாப்பு வழிமுறைகளைப் பின் பற்றுதல்.

9. தொழிற்சாலை ஒன்றினுள் பேணப்பட வேண்டிய பாதுகாப்பு வழிமுறைகள் பற்றிய புரிதலைக் கொண்டிருத்தல் மற்றும் அதற்கமையச் செயற் படுதல்.

10. தனது சேவைக்குரிய விடயப் பரப்பு சார்ந்த விடயங்கள் தொடர்பில் தனது மேற்பார்வை அதிகாரிகளுடன் சிறந்த தொடர்பைப் பேணிச் செல்லலும், பதவிக்குரியதாக ஒதுக்கப்படும் ஏனைய கடமைகளை நிறைவேற்றுதலும்.

07. **தகைமைகள்:**

கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சின் ஆரம்பச் சேவை வகுதிக்குரிய பதவிகளை வகிப்போர், மட்டுப்படுத்தப்பட்ட அடிப்படையில் தொழில்நுட்ப பீட உதவியாளர் (பொறியியல் தொழில்நுட்பம்) பதவிக்கு விண்ணப்பிப்பதற்காக

(அ) **கல்வித் தகைமைகள்:**

**தொழில்நுட்ப பீட உதவியாளர் (பொறியியல் தொழில்நுட்பம்)**

கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர) ப் பரீட்சையில் தாய்மொழி, கணிதம் மற்றும் விஞ்ஞானம் ஆகிய பாடங்கள் உட்பட மேலும் ஒரு பாடத்திற்குச் திறமைச் சித்தியுடன் ஒரே அமர்வில் ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

(ஆ) **அனுபவம்:**

குறித்த திகதியில் கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சின் கீழ் உள்ள தேசிய பாடசாலைகள், தேசிய கல்வியியல் கல்லூரிகள், ஆசிரியர் கலாசாலைகள், ஆசிரியர் மத்திய நிலையங்கள் உட்பட பொதுக் கல்வித் துறைக்கு உரித்தான நிறுவனங்களில் ஆரம்பச் சேவை வகுதிக்குரிய நிரந்தரப் பதவியொன்றில் குறைந்தபட்சம் 05 வருட கால முனைப்புடன் கூடிய மற்றும் திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

(ஆ) **ஏனைய தகைமைகள்:**

I. கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சின் கீழ் ஆரம்பச் சேவை வகுதியில் நிரந்தர நியமனமொன்றைக் கொண்டிருத்தல் வேண்டும் என்பதுடன், அந்நியமனங்களில் நிரந்தரமாக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

II. ஏதேனும் பதவியொன்றில் நிரந்தரமாக நியமிக்கப்படுவதற்கு முன்னர் பணியாற்றிய தற்காலிக/ அமைய/ ஒப்பந்த அடிப்படை யிலான சேவைக்காலப் பகுதிகள் மற்றும் ஏதேனும் பதவியொன்றில் நிரந்தரமாக நியமிக் கப்படுவதற்கான நிபந்தனையாகப் பூர்த்தி செய்துள்ள பயிற்சிக் காலங்கள் என்பன கணக்கில் கொள்ளப்படமாட்டாது.

III. தகைமைகளைப் பூர்த்தி செய்ய வேண்டிய திகதிக்கு முந்தைய 05 வருட காலப்பகுதியில் திருப்திகரமான சேவைக்காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

IV. அரசாங்க சேவை ஆணைக்குழுவின் 01/2020 ஆம் இலக்கச் சுற்றறிக்கையின் விதிகளுக்கு அமைவாக ஒழுக்காற்று ரீதியிலான தண்டனைகள் எவற்றையும் பெறாதவராக இருத்தல் வேண்டும்.

V. குறித்த திகதிக்குரிய வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சையைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

VI. ஒவ்வொரு விண்ணப்பதாரரும் இலங்கையின் எந்தவொரு பிரதேசத்திலும் சேவையாற்று வதற்கும், பதவியின் கடமைகளை நிறை வேற்றுவதற்கும் போதுமான உடல் மற்றும் உளரீதியான தகுதியைக் கொண்டிருத்தல் வேண்டும்.

VII. அதிகபட்ச வயது எல்லை பொருந்தாது.

08. **பரீட்சை நடைமுறை**

இப்பரீட்சையானது சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழி மூலங்களில் நடாத்தப்படும். விண்ணப்பதாரர் ஒருவர் தனக்குரிய ஏதேனும் ஒரு மொழி மூலத்தைத் தெரிவு செய்தல் வேண்டும் என்பதுடன், பரீட்சைக்குரிய அனைத்து வினாத்தாள்களுக்கும் அதே மொழி மூலத்திலேயே விடையளிக்க வேண்டும். விண்ணப்பித்த மொழி மூலத்தை பின்னர் மாற்றுவதற்கு அனுமதிக்கப்படமாட்டாது. இப்பரீட்சையானது இரண்டு வினாத்தாள்களைக் கொண்டதாகும்.

09. **மதிப்பீட்டுச் செயன்முறை**

| | புள்ளிகள் | |
|---|---|---|
| பொது அறிவு (எழுத்துப் பரீட்சை) | 100 | (காலம் 01 மணித்தியாலம்) |
| உளச் சார்பு (எழுத்துப் பரீட்சை) | 100 | (காலம் 01 மணித்தியாலம்) |
| தகைமை மதிப்பீட்டு நேர்முகப் பரீட்சை | 50 | |

I. பொது அறிவு (காலம் 01 மணித்தியாலம், 100 புள்ளிகள் )

மேலே 06 இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு, பதவிக்குரிய கடமைகளை நிறைவேற்றுவதற்குத் தேவையான பொது அறிவு

II. உளச் சார்பு (காலம் 01 மணித்தியாலம் 100 புள்ளிகள் )

விண்ணப்பதாரர்களின் எண் கணிதத் திறன், தர்க்கரீதியான சிந்தனை மற்றும் பொது நுண்ணறிவு ஆகியவற்றை மதிப்பிடும் வகையில் தயாரிக்கப்பட்ட ஒரு பல்தேர்வு வினாத்தாளாகும்.

III. தகைமை மதிப்பீட்டு நேர்முகப் பரீட்சை (50 புள்ளிகள் )

கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சின் செயலாளரினால் நியமிக்கப்படும் நேர்முகப் பரீட்சை சபையினரால், இங்கு 10 ஆம் பந்தியின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள பிரதான துறைகளின் கீழ் புள்ளிகள் வழங்கப்படும். புள்ளிகள் வழங்குவதற்காகக் கருத்திற் கொள்ளப்படும் தகைமைகள் யாவும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ பூர்த்தி செய்யப்பட்டிருத்தல் வேண்டும். இதன் போது வேண்டுமென்றே போலியான விபரங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளமை கண்டறியப்படின், அரசாங்க சேவை ஆணைக்குழுவின் அறிவுறுத்தல்களுக்கு உட்பட்டு விண்ணப்பதாரர்களுக்கும் அவ் விண்ணப்பப் படிவங்களை உறுதிப்படுத்திய திணைக்களத் தலைவர்களுக்கும் எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

இப் போட்டிப் பரீட்சையின் மூலம் நியமனங்களைப் பெறுவதற்குத் தகைமை பெறுவதற்காக, பொது அறிவு மற்றும் உளச்சார்பு பரீட்சை ஆகிய ஒவ்வொரு பாடத்திற்கும் குறைந்தது 40 புள்ளிகள் வீதம் பெற்றுச் சித்தியடைதல் வேண்டும். எழுத்துப் பரீட்சையின் திறமை வரிசைக்கு ஏற்ப, நிரப்பப்பட வேண்டியுள்ள வெற்றிடங்களின் எண்ணிக்கையின் அடிப்படையில், வெற்றிடங்களின் எண்ணிக்கையைப் போன்று இருமடங்கானவர்கள் தகைமை மதிப்பீட்டு நேர்முகப் பரீட்சைக்காக அழைக்கப்படுவர். (எழுத்துப் பரீட்சையின் புள்ளிகளோ அல்லது திறமை வரிசையோ தகைமை மதிப்பீட்டு நேர்முகப் பரீட்சைச் சபையினருக்கு வழங்கப்படமாட்டாது). அதற்கமைய, நேர்முகப் பரீட்சைச் சபையினரால் அங்கீகரிக்கப்பட்ட புள்ளிகள் வழங்கல் திட்டத்திற்கமைய புள்ளிகள் வழங்கப்படும் என்பதுடன், அடிப்படைத் தகைமைகளும் சரிபார்க்கப்படும். எழுத்துப் பரீட்சையில் பெற்றுக்கொண்ட புள்ளிகள் மற்றும் தகைமை மதிப்பீட்டு நேர்முகப் பரீட்சையில் பெற்றுக்கொண்ட புள்ளிகள் என்பவற்றின் கூட்டுத்தொகையின் அடிப்படையில் ஒவ்வொரு விண்ணப்பதாரரினதும் திறமை நிலை தீர்மானிக்கப்படும்.

**10. முகாமைத்துவ உதவியாளர் (தொழில்நுட்பம் சாரா) தொகுதி - 02 சேவை வகுதிக்குரிய ஆட்சேர்ப்பு நடைமுறைக்கு அமைவாக, தொழில்நுட்ப பீட உதவியாளர் (பொறியியல் தொழில்நுட்பம்) பதவிக்கு மட்டுப்படுத்தப்பட்ட அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்வதற்கான தகைமை மதிப்பீட்டு நேர்முகப் பரீட்சை - புள்ளிகள் வழங்கும் நடைமுறை - 2025**

| *புள்ளி வழங்கப்படும் பிரதான துறைகள்* | *புள்ளிகள் வழங்கப்படும் விதம்* | *ஆகக் கூடிய புள்ளிகள்* | |
|---|---|---|---|
| 01 . மேலதிக கல்வித் தகைமைகள்<br>i க.பொ.த (சாதாரண தரம்) | • விசேட திறமைச் சித்தி- ஒரு பாடத்திற்கு 02 புள்ளிகள் வீதம்<br>• அதி திறமைச் சித்தி- ஒரு பாடத்திற்கு 01 புள்ளிகள் வீதம்<br>• திறமைச் சித்தி- ஒரு பாடத்திற்கு 0.5 புள்ளிகள் வீதம் (கணிதம், தாய்மொழி, ஆங்கிலம் மற்றும் மற்றுமொரு பாடத்திற்கு திறமைச் சித்தி பெற்றிருக்க வேண்டிய கட்டாயத் தகைமைக்கு மேலதிகமாக ) | 10 | 15 |
| ii . க.பொ.த (உயர் தரம்) | • விசேட திறமைச் சித்தி- ஒரு பாடத்திற்கு 02 புள்ளிகள் வீதம்<br>• அதி திறமைச் சித்தி- ஒரு பாடத்திற்கு 01 புள்ளிகள் வீதம்<br>• திறமைச் சித்தி- ஒரு பாடத்திற்கு 0.5 புள்ளிகள் வீதம் | 5 | |
| iii . பட்டம் | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றிலிருந்து பட்டத்தைப் பெற்றிருத்தல் | 15 | |
| 02. சேவை அனுபவம் | 05 வருடங்களுக்குப் பின்னர் மேலதிகமாக உள்ள ஒவ்வொரு வருடத்திற்கும் 02 புள்ளிகள் வீதம். | 15 | 15 |
| 03. கணினித் திறன்<br>•<br>அரசாங்கப் பதிவு இலக்கம் சான்றிதழில் குறிப்பிடப்பட்டிருக்காவிடின், அது அரசாங்கத்தில் பதிவுசெய்யப்பட்ட நிறுவனம் என்பதற்கான எழுத்துபூர்வமான ஆவணத்தை உரிய நிறுவனத்தில் பெற்றுச் சமர்ப்பித்தல் வேண்டும். | அரசாங்கத்தில் பதிவுசெய்யப்பட்ட நிறுவனம் ஒன்றினால் வழங்கப்பட்ட கணினி தொடர்பான டிப்ளோமா அல்லது அதற்கு மேற்பட்ட சான்றிதழ். | 3 | 5 |
| | அரசாங்கத்தில் பதிவுசெய்யப்பட்ட நிறுவனம் ஒன்றில் கணினி தொடர்பான சான்றிதழ் பாடநெறியை தொடர்ந்திருத்தல். | 2 | |
| 04. தாய்மொழி மற்றும் இரண்டாம் மொழி தவிர்ந்த வேறு மொழியொன்றிலான தேர்ச்சி (சான்றிதழ்கள் மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டும்) | ஆங்கிலம் அல்லது வேறு ஏதேனும் ஒரு மொழி தொடர்பாகக் குறைந்தபட்சம் டிப்ளோமா ஒன்றைப் பூர்த்தி செய்திருத்தல். | 5 | 5 |
| | க.பொ.த. (உயர் தர) பாடமொன்றாக ஆங்கிலம் அல்லது வேறு ஏதேனும் ஒரு மொழியை தொடர்ந்திருத்தல் (01 இன் கீழ் இதற்குப் புள்ளிகள் வழங்கப்பட்டிருப்பின், இவ் விடயத்திற்காகக் கருத்திற் கொள்ளப்படமாட்டாது). | 2 | |
| 05. நிறுவனத்தின் அபிவிருத்திக்காக வழங்கப்பட்ட பங்களிப்பு | பாராட்டுக் கடிதங்கள் - ஒரு கடிதத்திற்கு 2.5 புள்ளிகள் வீதம்.<br>• தான் கடமையாற்றும் நிறுவனத் தலைவரினால் வழங்கப்பட்டிருத்தல் வேண்டும் | 5 | 5 |
| | ஒரு கௌரவிப்புக் கடிதத்திற்கு – ஒரு புள்ளி வீதம்<br>• தான் கடமையாற்றும் நிறுவனத் தலைவரினால் வழங்கப்பட்டிருத்தல் வேண்டும் | 5 | |
| 06. நேர்முகப் பரீட்சையில் வெளிப்படுத்தும் திறமை | ஆளுமை | 3 | 5 |
| | தொடர்பாடல் திறன்கள் | 2 | |
| | மொழி கையாளுகை | 1 | |

(அனைத்துத் தகைமைகளும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ பூர்த்தி செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.)

குறிப்பு 1

சமர்ப்பிக்கப்படும் சான்றிதழை வழங்கிய நிறுவனத்தின் அரசாங்கப் பதிவு இலக்கம் அச் சான்றிதழில் குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும். அவ்வாறு குறிப்பிடப்பட்டிருக்காவிடின், அது அரசாங்கத்தில் பதிவுசெய்யப்பட்டது என்பதற்கான பதிவு இலக்கத்துடனான எழுத்துபூர்வமான உறுதிப்படுத்தலைச் சம்பந் தப்பட்ட நிறுவனத்திடமிருந்து பெற்றுச் சமர்ப்பிப்பது விண்ணப்பதாரரின் கடமை யாகும்.

11. **போலியான விபரங்களைச் சமர்ப்பிப்பதற்கான தண்டனைகள் -**

I. விண்ணப்பப் படிவங்களை நிரப்பும் போது மிகவும் அவதானத்துடன் சரியான விபரங்கள் வழங்கப்பட வேண்டும். இப்பரீட்சைக்குரிய விதிகளுக்கமைய எவரேனும் ஒரு விண்ணப்பதாரர் இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்குத் தகைமையற்றவர் எனக் கண்டறியப்படின், பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடைபெறும் போதோ அல்லது அதற்குப் பின்னரோ எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அவரது விண்ணப்பதாரர் தகுதி இரத்துச் செய்யப்படலாம்.

II. விண்ணப்பதாரர் ஒருவரால் வழங்கப்பட்ட விபரங்கள் பின்னர் ஒரு காலத்தில் தவறானவை எனக் கண்டறியப்படின் அல்லது அவரால் வேண்டுமென்றே ஏதேனும் ஒரு விடயம் மறைக் கப்பட்டுள்ளமை வெளிப்படின், அவருக்கு மேலும் நியமனம் வழங்குவது குறித்து பரிசீலிக்கப்படமாட்டாது என்பதுடன், இப் பரீட்சையின் காரணமாக வழங்கப்பட்டிருந்த நியமனத்தை இரத்துச் செய்வதற்கும் அல்லது அரசாங்க சேவையிலிருந்து நீக்குவதற்கும் அவர் உள்ளாக்கப்படுவார்

12. **பரீட்சை நிபந்தனைகள்**

நிகழ்நிலை (Online) பரீட்சை விண்ணப்பப்படிவம் ஆங்கில மொழியில் மாத்திரமே பூர்த்தி செய்யப்பட வேண்டும். விண்ணப்பதாரரினால் நிகழ்நிலை மூலமாக சமர்ப்பிக்கப்பட்ட மென்பிரதி செல்லுபடியாகும் விண்ணப்பமாக திணைக்களத்தினால் ஏற்றுக் கொள்ளப்பட்டதா / நிராகரிக்கப்பட்டதா என்பது, முறைமைக்குள் பிரவேசிப்பதற்குப் பயன்படுத்தப்பட்ட கையடக்கத் தொலைபேசி இலக்கத்திற்கு குறுஞ்செய்தி (SMS) மூலமாக அல்லது மின்னஞ்சல் (Email) முகவரிக்கு அறிவிக்கப்படும். நிகழ்நிலை விண்ணப்பப் படிவத்தைப் பூர்த்தி செய்ய முன்னர், பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற்காகத் தயாரிக்கப்பட்டுள்ள அறி வுறுத்தல் பத்திரிகையை (Instruction) பதிவிறக்கம் செய்து கொள்ளவும். விண்ணப்பப்படிவத்தை நிரப்பும் போது அந்த அறிவுறுத்தல்களை சரியாகப் பின்பற்றவும். விண்ணப்பப்படிவத்தின் அச்சுப் பிரதியைப் பெற்றுக்கொண்டதன் பின்னர் அதில் மேற் கொள்ளப்படும் எந்தவொரு திருத்தமும் செல்லு படியாகும் திருத்தமாகக் கருதப்படமாட்டாது. முழுமை யாக பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பங்கள் எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும்

13. பரீட்சைக் கட்டணம் ரூ. 600.00 ஆகும். பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தும்போது நிகழ்நிலை முறைமையின் மூலம் வழங்கப்படும் பின்வரும் கட்டணச் செலுத்துகை வழிமுறைகளின் கீழ் மாத்திரமே செலுத்தப்பட வேண்டும்.

(அ) ஏதேனும் வங்கிக் கடன் அட்டை மூலம் (Any Bank Credit Card)

(ஆ) இணையவழிக் கொடுக்கல் வாங்கல் வசதியைக் கொண்ட ஏதேனும் வங்கிப் பற்று அட்டை மூலம் (Any Bank Debit Card With the Facility of Internet Transactions)

(இ) இலங்கை வங்கியின் இணையவங்கி முறைமை / Flex செயலி மூலம் (Online Banking Method/ Flex App of Bank of Ceylon )

(ஈ) இலங்கை வங்கியின் ஏதேனும் ஒரு கிளை மூலம் (Any Branch of the Bank of Ceylon)

குறிப்பு:-

மேற்குறிப்பிட்ட வழிமுறைகளின் மூலம் கொடுப் பனவுகளை மேற்கொள்ளும் விதம் பற்றிய அறிவுறுத்தல்கள், இணையத்தளத்தில் இப்பரீட் சைக்குரிய தொழில்நுட்ப அறிவுறுத்தல்களின் கீழ் பிரசுரிக்கப்பட்டுள்ளன.

14. கொடுப்பனவுகள் பெற்றுக் கொள்ளப்பட்டமை குறித்து குறுஞ்செய்தி (SMS) மூலமாக அல்லது மின்னஞ்சல் செய்தி மூலமாக அறிவிக்கப்படும். பரீட்சைக் கட்டணத்திற்கான முழுத் தொகையும் செலுத்தப்பட வேண்டும் என்பதுடன், பரீட்சைக் கட்டணத்தை குறைவாகவோ அல்லது கூடுதலாகவோ செலுத்தியுள்ள விண்ணப்பதாரர்களின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். மேலே குறிப்பிடப்பட்டுள்ள கட்டணம் செலுத்தும் வழிமுறைகளின் ஊடாக பரீட்சைக் கட்டணங்களைச் செலுத்தும் போது ஏற்படும் தவறுகள்

தொடர்பாக இலங்கை பரீட்சைத் திணைக்களம் பொறுப்பேற்கமாட்டாது.

15. பரீட்சைக்காகச் செலுத்தப்பட்ட பணம் எக்காரணம் கொண்டும் மீளச் செலுத்தப்படமாட்டாது அல்லது வேறு பரீட்சை ஒன்றிற்காக மாற்றப்படமாட்டாது.

16. விண்ணப்பப் படிவங்களைச் சமர்ப்பிப்பதை இறுதித் திகதி வரை தாமதப்படுத்துவதனால் ஏற்படும் எந்தவொரு பாதகமான சூழ்நிலைகளையும் விண்ணப்பதாரரே பொறுப்பேற்க வேண்டும்.

17. வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைக் கொண்டவர்கள் மாத்திரமே விண்ணப்பித்துள்ளனர் என்ற ஊகிப்பின் அடிப்படையில், விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ உரிய பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தி, சரியாகப் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களைச் சமர்ப்பித்துள்ள விண்ணப்பதாரர்களுக்கு மாத்திரம் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் பரீட்சை அனுமதிப் பத்திரங்கள் இணையவழியாக மாத்திரமே விநியோகிக்கப்படும். பரீட்சை அனுமதிப் பத்திரங்கள் விநியோகிக்கப்பட்டவுடன் இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் அது குறித்து இணையத்தள அறிவித்தல் மூலமாக அல்லது விண்ணப்பதாரர்களுக்குக் குறுஞ்செய்தி மூலமாக அறிவிக்கப்படும். தனது அனுமதிப் பத்திரம் கிடைக்கப் பெறாத விண்ணப்பதாரர் எவராவது இருப்பின், அறிவித்தலில் குறிப்பிட்டுள்ளவாறு அது குறித்து இலங்கை பரீட்சைத் திணைக்களத்தின் நிறுவனப் பரீட்சை ஒழுங்கமைப்பு கிளையிடம் வினவ வேண்டும். அவ்வாறு வினவும் போது, விண்ணப்பதாரர் தான் விண்ணப்பித்த பரீட்சையின் பெயர், விண்ணப்பதாரரின் முழுப் பெயர், தேசிய ஆளடையாள அட்டை இலக்கம் மற்றும் முகவரி ஆகியவற்றைச் சரியாகக் குறிப்பிட்டுத் தயாரித்த கோரிக்கை கடிதமொன்றை, இணையத்தள அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வினவுவது மிகவும் பயனுள்ளதாக அமையும். அவ்வாறு வினவும் போது, பரீட்சைத் திணைக்களத்தினால் கோரப்படும் ஏதேனும் ஒரு விபரத்தை உறுதிப்படுத்துவதற்காக, பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவத்தின் நிழற்படப்பிரதி மற்றும் பரீட்சைக் கட்டணம் செலுத்தியதற்கான பற்றுச் சீட்டின் நிழற்படப்பிரதி ஆகியவற்றைத் தம்வசம் வைத்திருப்பது பிரயோசனம் மிக்கதாக இருக்கும். அனுமதிப் பத்திரத்தைப் பரிசோதித்துப் பார்த்து, திருத்தங்கள் ஏதேனும் இருப்பின் நேர காலத்துடன் பரீட்சைத் திணைக்களத்தைத் தொடர்புகொண்டு, விண்ணப்பப்படிவத்திற்கு அமைவாக உரிய திருத்தங்களை மேற்கொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்திலோ அல்லது நேர்முகப் பரீட்சையின் போதோ திருத்தங்களுக்காக முன்வைக்கப்படும் கோரிக்கைகள் கருத்திற்கொள்ளப்படமாட்டாது.

18. பரீட்சைக்கான அனுமதிப் பத்திரத்தில் உள்ள விண்ணப்பதாரரின் கையொப்பம், நிறுவனத் தலைவர் அல்லது அவரினால் அதிகாரமளிக்கப்பட்ட அதிகாரி ஒருவரினால் உறுதிப்படுத்த வேண்டும்.

19. நியமன அதிகாரியினால் பெறுபேறுகளை வெளியிடுவதற்குப் பொருத்தமான திகதியொன்று அறிவிக்கப்பட்டதன் பின்னர், எழுத்துப் பரீட்சையில் ஒவ்வொரு பாடத்திற்கும் பெற்றுக் கொண்ட புள்ளிகள் / மொத்தப் புள்ளிகள் குறிப்பிடப்பட்ட பெறுபேற்று ஆவணத்தை, பரீட்சைக்குத் தோற்றிய அனைத்து விண்ணப்பதாரர்களுக்கும் தபால் மூலம் அனுப்புவதற்கு அல்லது www.results.exams.gov.lk என்ற இணையத்தளத்தின் ஊடாகப் பெறுபேறுகளை வெளியிடுவதற்கு இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் நடவடிக்கை எடுக்கப்படும். பரீட்சைப் பெறுபேறுகள் தொடர்பாகப் பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் தீர்மானமே இறுதியான தீர்மானமாகும்.

20. **பரீட்சைக்கு அனுமதித்தல்**

(அ) பரீட்சைக்குத் தோற்றும் விண்ணப்பதாரர்கள் தங்களது கையொப்பம் உறுதிப்படுத்தப்பட்ட அனுமதிப் பத்திரத்தை, தாங்கள் தோற்றும் முதலாவது பரீட்சை தினத்தன்று அப் பரீட்சை மண்டபத்தின் பரீட்சை நிலையப் பிரதான மேற்பார்வையாளரிடம் சமர்ப்பித்தல் வேண்டும். அத்தகைய அனுமதிப் பத்திரத்தைச் சமர்ப்பிக்காத விண்ணப்பதாரர் எவருக்கும் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது.

(ஆ) விண்ணப்பதாரர் ஒருவர் தனக்கு ஒதுக்கப்பட்டுள்ள பரீட்சை மண்டபத்திலேயே பரீட்சைக்குத் தோற்ற வேண்டும். ஒவ்வொரு விண்ணப்பதாரரும் பின்பற்ற வேண்டிய விதிமுறைகள் இவ்வர்த்தமானப் பத்திரிகையின் ஆரம்பத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ளன.

குறிப்பு: விண்ணப்பதாரர் ஒருவருக்குப் பரீட்சை அனுமதிப் பத்திரம் விநியோகிக்கப்பட்டமையானது, அவர் இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கான தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ளார் என்பதற்கானதொரு அங்கீகாரமாகக் கருதப்படமாட்டாது.

21. **விண்ணப்பதாரர்களின் ஆளடையாளம்:**

பரீட்சார்த்திகள் பரீட்சை மண்டபத்தினுள் தாங்கள் தோற்றும் ஒவ்வொரு பாடத்தின் போதும் பரீட்சை மண்டப பிரதான மேற்பார்வையாளர் திருப்தியடையும்

வகையில் தங்களது ஆளடையாளத்தை உறுதிப்படுத்தல் வேண்டும். அதற்காகப் பின்வரும் ஆவணங்களில் ஏதேனும் ஒன்று ஏற்றுக்கொள்ளப்படும்.

I. தேசிய ஆளடையாள அட்டை

II. செல்லுபடியாகும் வெளிநாட்டு கடவுச்சீட்டு

III. செல்லுபடியாகும் இலங்கை சாரதி அனுமதிப் பத்திரம்

விண்ணப்பதாரர்களின் அடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்ளக் கூடிய வகையில் முகத்தை மூடாமலும், இலத்திரனியல் தொடர்பாடல் சாதனங்களை அணிந்திருக்கவில்லை என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளக் கூடிய வகையில் இரு காதுகளையும் மூடாமலும் பரீட்சை மண்டபத்தினுள் நுழைய வேண்டும். அவ்வாறு தங்களது ஆளடையாளத்தை உறுதிப்படுத்துவதற்கு மறுக்கும் விண்ணப்பதாரர்கள் பரீட்சை மண்டபத்தினுள் அனுமதிக்கப்படமாட்டார்கள். மேலும், பரீட்சை மண்டபத்தினுள் நுழைந்த தருணம் முதல் பரீட்சை முடிந்து அதிலிருந்து வெளியேறும் வரை முகத்தையும் இரு காதுகளையும் மூடாமல் இருத்தல் வேண்டும்.

22. சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூலங்களில் வெளியிடப்படும் இந்த அறிவித்தலின் மொழி வசனங்களிடையே ஏதேனும் பொருத்தப்பாடின்மை அல்லது முரண்பாடுகள் காணப்படின், அத்தகைய சந்தர்ப்பங்களில் சிங்கள மொழி மூலமான அறிவித்தலுக்கு அமைவாக நடவடிக்கை எடுக்கப்படும்.

நாலக களுவெவ,
செயலாளர்.

கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சு,
"இசுருபாய",
பத்தரமுல்ல,
2026, யூலை 21.

07-499/2

---

## மோட்டார் வாகன போக்குவரத்துத் திணைக்களம்

## உதவி சாரதி ஆலோசகர்களைப் பதிவு செய்வதற்கான எழுத்து மூலப் பரீட்சை - 2026

இலக்கம் 1939/4 மற்றும் 2015.11.02 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானியின் II ஆம் பகுதியின் பிரகாரம் மோட்டார் வாகன போக்குவரத்துத் திணைக்களத்தில் உதவி சாரதி ஆலோசகர்களாகப் பதிவு செய்வதற்கான எழுத்து மூலப் பரீட்சைக்காகப் பின்வரும் தகைமைகளையுடைய இலங்கைப் பிரசைகளிடமிருந்து 2026.08.21 ஆம் திகதி வரை விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இப்பரீட்சைகள் 2026 ஆம் ஆண்டு செப்தெம்பர் மாதம் கொழும்பில் நடத்தப்படும்.

01. **தகைமைகள் :**

விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியில் அனைத்து விண்ணப்பதாரர்களும் கீழே குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

i. விண்ணப்பதாரி இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.

ii. வயது 23 வயதிற்குக் குறையாமலும் 65 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். (அதற்கமைய 2003.08.21 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் மற்றும் 1961.08.21 ஆம் திகதி அல்லது அதற்குப் பின்னரான பிறந்த திகதியை உடையவர்கள் மாத்திரம் இதற்காக விண்ணப்பிக்கத் தகுதியுடையவர்கள் ஆவர்.)

iii. எட்டாம் தரத்திற்குத் தகுதி பெறும் பரீட்சை அல்லது அதற்குச் சமனான பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

iv. சாரதி பயிற்சிப் பாடசாலையொன்றில் பணியாளராகக் குறைந்தது 03 வருடகால அனுபவத்தைப் பெற்றிருத்தல் வேண்டும். ஊழியர் சேமலாப நிதி (EPF) இலக்கமும், ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதிய (ETF) இலக்கமும் உள்ளடங்கிய ஆவணச் சான்றுகளை சமர்ப்பித்தல் வேண்டும்.

v. விண்ணப்பிக்கப்படும் உதவி ஆலோசகர் வகுப்பிற்கு உரித்தாகும். வாகன வகுப்புகளுக்காக கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறு உள்ளடங்கும். விண்ணப்பதாரர்கள் குறைந்தபட்சம் 05 ஆண்டுகளுக்கு முன்னர் பெற்றுக்கொண்ட செல்லுபடியாகும் சாரதி அனுமதிப்பத்திரத்தைக் கொண்டுள்ளவராக இருத்தல் வேண்டும்.

* மோட்டார் கார் வாகனம்/ இரட்டைப் பயன்பாட்டு வாகனம் (B), மோட்டார் ட்றைசிக்கிள்/ மோட்டார் ட்றைசிக்கிள் வேன் (B1) மற்றும் மோட்டார் சைக்கிள் (A) ஆகிய வாகன வகுப்புகளுக்குரிய செல்லுபடியான சாரதி அனுமதிப்பத்திரம் அல்லது

* மோட்டார் கார் வாகனம்/ இரட்டைப் பயன்பாட்டு வாகனம் (B) ஆகிய வாகன வகுப்புகளுக்குரிய செல்லுபடியான சாரதி அனுமதிப்பத்திரம் அல்லது

* மோட்டார் ட்றைசிக்கிள்/ மோட்டார் ட்றைசிக்கிள் வேன் (B1) மற்றும் மோட்டார் சைக்கிள் (A) ஆகிய வாகன வகுப்புகளுக்குரிய செல்லுபடியான சாரதி அனுமதிப்பத்திரம் அல்லது

* சாரதி அனுமதிப்பத்திர வகுப்புகளுக்காகச் செல்லுபடியான அனுமதிப்பத்திரமொன்றைக் கொண்டுள்ள விண்ணப்பதாரர் ஒருவருக்கு உதவி சாரதி ஆலோசகருக்கான அனுமதிப்பத்திரத்தைப் பெற்றுக்கொள்வதற்காக விண்ணப்பிப்பதற்கான இயலுமை காணப்படுகின்றது.

vi. தாம் குறித்த வாகன வகுப்புகளை ஓட்டுவதற்கும் மற்றும் வாகனங்களை ஓட்டுவதற்குப் பயிற்சி வழங்குவதற்கும் உடல்நல ரீதியாக தகுதியுடையவர் என்பதனை தேசிய போக்குவரத்து மருத்துவ நிறுவனம் அல்லது ஆணையாளர் நாயகத்தினால் அதிகாரமளிக்கப்பட்ட வேறு ஏதேனும் வைத்திய உத்தியோகத்தரினால் வழங்கப்படும் மருத்துவச் சான்றிதழ் மூலம் உறுதிப்படுத்துதல் வேண்டும்.

vii. அரசாங்கம் அல்லது பகுதி அரசாங்கம் சார்ந்த நிறுவனமொன்றிலோ அல்லது அவ்வாறான வேறு ஒரு நிறுவனமொன்றிலோ பயிற்சி வழங்கும் பணியில் ஈடுபட்டிருக்கும் நபராக இருக்கவேண்டுமே தவிர அவர் அத்தகைய நிறுவனங்களில் சேவையாற்றுபவராக இருத்தலாகாது.

02. **பரீட்சை முறை :**

i. இப்பரீட்சை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழி மூலங்களில் நடத்தப்படும்.

ii. அனைத்து வினாத்தாள்களுக்கும் ஒரே ஒரு மொழியில் மாத்திரமே விடையளித்தல் வேண்டும். ஆரம்பத்தில் விண்ணப்பித்த மொழி மூலத்தைப் பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது.

03. **பரீட்சைக்குரிய பாடங்கள் மற்றும் எழுத்துப் பரீட்சை :**

இப்பரீட்சை மோட்டார் வாகன போக்குவரத்து முகாமைத்துவம் தொடர்பான இரண்டு பகுதிகளைக் கொண்டமைந்த வினாத்தாள்களை உள்ளடக்கியதாகும்.

| *வினாத்தாள்* | | *காலம்* | *மொத்த மதிப்பெண்* | *சித்தி பெறுவதற்கான புள்ளிகள்* |
|---|---|---|---|---|
| 1. | மோட்டார் வாகன போக்குவரத்து முகாமைத்துவம் I | 02 மணித்தியாலம் | 100 | 40 |
| 2. | மோட்டார் வாகன போக்குவரத்து முகாமைத்துவம் II | 02 மணித்தியாலம் | 100 | 40 |

04. **பாடப் பரப்புகள் :**

இந்த இரண்டு வினாத்தாள்களிலும் மோட்டார் வாகனச் சட்டம், வீதிச் சட்ட வழிகாட்டிக் கோவை, கற்பித்தல் மற்றும் ஆலோசனை வழங்கும் முறைமைகள், பாதுகாப்பாக வாகனத்தை ஓட்டும் முறை, ஒழுக்க நெறிமுறைகள், முதலுதவி, இயந்திரவியல் மற்றும் தொழில்நுட்ப அறிவு மற்றும் வீதிப் பாதுகாப்பு ஆகியன தொடர்பான வினாக்கள் உள்ளடங்கும்.

05. **தெரிவு நடைமுறை:**

ஒவ்வொரு பாடத்திற்கும் குறைந்தபட்சம் 40 புள்ளிகள் வீதம் மொத்த எழுத்துப் பரீட்சையில் 40% அல்லது அதற்கு மேற்பட்ட புள்ளிகளைப் பெற்ற பரீட்சார்த்திகள் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டு அவர்களது சான்றிதழ்கள் மற்றும் தகைமைகள் பரிசீலிக்கப்படும். நேர்முகப் பரீட்சையின் மூலம் தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரர்கள் சாரதிகளுக்குப் பயிற்சியளிப்பதற்கான ஆலோசனைகளை வழங்குதல் மற்றும் பயிற்சியளித்தல் தொடர்பான செயன்முறைப் பரீட்சைக்கு உட்படுத்தப்படுவர். இந்தப் பரீட்சையில் தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரர்கள் சாரதி ஆலோசகர்

பாடநெறியில் பங்குபற்றுதல் வேண்டும் என்பதுடன், அப்பாடநெறியை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்ததன் பின்னர், அவர்களுக்கு சாரதி ஆலோசகருக்கான அனுமதிப்பத்திரம் வழங்கப்படும்.

ஆலோசகர் பாடநெறிக்காக நிர்ணயிக்கப்படும் கட்டணத்தை விண்ணப்பதாரர்களே செலுத்துதல் வேண்டும்.

06. **பெறுபேறுகளை வெளியிடுதல்:**

பரீட்சைக்குத் தோற்றிய அனைத்து விண்ணப்பதாரர் களுக்கும் பெறுபேறுகள் தபால் மூலம் அல்லது இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனத்தின் www.slida.lk இணையத்தளத்தில் வெளியிடுவதன் மூலம் அறிவிக்கப் படும்.

07. **விண்ணப்பிக்கும் முறை :**

(அ) இந்த அறிவித்தலுடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கு அமைவாக விண்ணப்பப் படிவம் இருத்தல் வேண்டும் என்பதுடன் அது கடதாசியின் இரு பக்கத்தினையும் பயன்படுத்தி 8.27" x 11.69" (A4) அளவிலான காகிதத்தில் தயாரிக்கப்பட்டு விண்ணப்பதாரியினாலேயே பூர்த்தி செய்யப்படுதல் வேண்டும். விண்ணப்பப் படிவத்தைத் தயாரிக்கும் போது அதன் தலைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சையின் பெயர் சிங்கள மொழி விண்ணப்பப் படிவங்களில் சிங்களத்துக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும், தமிழ் மொழி விண்ணப்பப் படிவங்களில் தமிழுக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் குறிப்பிடுதல் வேண்டும். மேலும் மாதிரி விண்ணப்பப்படிவத்தின் தலைப்பு இலக்கம் 01 முதல் 07 வரையிலான பகுதிகள் முதல் பக்கத்திலும் மீதமுள்ள பகுதிகள் இரண்டாவது பக்கத்திலும் அமையும் வகையில் விண்ணப்பப் படிவம் தயாரிக்கப்படுதல் வேண்டும்.

(ஆ) விண்ணப்பப் படிவம் விண்ணப்பதாரர் பரீட்சைக்குத் தோற்ற விரும்பும் மொழியிலேயே அமைந்திருத்தல் வேண்டும்.

(இ) பரீட்சைக்காகப் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவத்தினை பதிவுத் தபால் மூலம் 2026.08.21 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கும் வகையில் "மோட்டார் வாகன போக்குவரத்து ஆணையாளர் நாயகம், தாபனப் பிரிவு, மோட்டார் வாகன போக்குவரத்துத் திணைக்களம், எல்விட்டிகல மாவத்தை, கொழும்பு 05" எனும் முகவரிக்கு அனுப்புதல் வேண்டும். விண்ணப்பப் படிவம் இடப்பட்டுள்ள கடித உறையின் இடது மேல் மூலையில் தெளிவாக "உதவி சாரதி ஆலோசகர்களை ஆட்சேர்ப்புச் செய்வதற்கான எழுத்து மூலப் பரீட்சை - 2026" என எழுதப்படுதல் வேண்டும். குறிப்பிடப்பட்ட திகதிக்குப் பின்னர் கிடைக்கும் எந்தவொரு விண்ணப்பப் படிவமும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

(ஈ) பரீட்சைக் கட்டணம் ரூ. 3,000.00 ஆகும். அக் கட்டணம் மோட்டார் வாகன போக்குவரத்து ஆணையாளர் நாயகத்தின் வருமானத் தலைப்பு இலக்கம் 20-03-02-14 இன் கீழ் அரசாங்க வருமானத்திற்கு வரவு வைக்கப்படும் வகையில் நாட்டில் அமைந்துள்ள எந்தவொரு தபால் அலுவலகம் /மாவட்ட/ பிரதேச செயலகங்களில் பணமாகச் செலுத்தப்பட்டு விண்ணப்பதாரரின் பெயரில் பெற்றுக்கொள்ளப்பட்ட பற்றுச் சீட்டினை அதன் ஒரு விளிம்பின் மூலம் கழன்று போகாத வகையில் விண்ணப்பப் படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள இடத்தில் ஒட்டுதல் வேண்டும். பரீட்சைக் கட்டண மாக காசுக் கட்டளை அல்லது முத்திரைகள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது என்பதுடன் பரீட்சைக் காகச் செலுத்தப்பட்ட கட்டணம் எந்தவொரு காரணத்திற்காகவும் மீள வழங்குதல் அல்லது வேறு எந்தப் பரீட்சைக்கும் மாற்றுதல் மேற் கொள்ளப்படமாட்டாது. பற்றுச்சீட்டின் நகல் பிரதியினை விண்ணப்பதாரர்கள் தம்வசம் வைத் திருப்பது பயனுள்ளதாக இருக்கும்.

(உ) விண்ணப்பப்படிவத்தில் விண்ணப்பதாரரின் கையொப்பத்தினை அரசாங்கப் பாடசாலை அதிபர், சமாதான நீதவான், சத்தியப்பிரமாண ஆணையாளர், சட்டத்தரணி, பிரசித்திபெற்ற நொத்தாரிசு, முப்படைகளின் அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர், பொலிஸ் சேவையில் வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்டு பதவி வகிக்கும் உத்தியோகத்தர் அல்லது அரசாங்கத்தின் நிரந்தர பதவி வகிக்கும் கிராம அலுவலர் அல்லது பதவிநிலை உத்தியோகத்தர் ஆகிய நபர்களில் ஒருவரால் உறுதிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

(ஊ) எந்த வகையிலேனும் முழுமையாக பூர்த்தி செய்யப் படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். தபால் மூலம் அனுப்பும் போது விண்ணப்பப்படிவம் தொலைந்து போதல் அல்லது காலதாமதமாகக் கிடைத்தல் தொடர்பான எந்தவொரு முறைப் பாடுகளும் கவனத்திற் கொள்ளப்படமாட்டாது. விண்ணப்பங்கள் கிடைத்தமை குறித்து அறிவிக்கப் படமாட்டாது.

(எ) விண்ணப்பங்களை அனுப்பிய விண்ணப்பதாரர் களுக்கு இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனத்தின் பணிப்பாளரினால் அனுமதி அட்டைகள் வழங்கப்படும். பரீட்சை நடைபெறும் திகதிக்கு குறைந்தது ஐந்து நாட்களுக்கு முன்னர் தமது அனுமதி அட்டை கிடைக்காத விண் ணப்பதாரர் ஒருவராயின் அது தொடர்பாக இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனத்தின் பணிப்பாளரைத் தொடர்புகொண்டு விசாரித்தல் வேண்டும். அவ்வாறு விசாரிக்கும் போது தான்

விண்ணப்பித்த பரீட்சையின் பெயர், விண்ணப்ப தாரரின் முழுப் பெயர், தேசிய ஆளடையாள அட்டை இலக்கம் மற்றும் முகவரி ஆகியவற்றை சரியாகக் குறிப்பிடுதல் வேண்டும். அவ்வாறு விசாரிக்கும் போது, இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனம் கோருகின்ற எந்தவொரு தகவல்களையும் உறுதிப் படுத்துவதற்காக விண்ணப்பதாரர் தன்னிடம் வைத்துள்ள விண்ணப்பப்படிவத்தின் நகல், பரீட்சைக் கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டின் நகல் மற்றும் விண்ணப்பப்படிவத்தைப் பதிவுத் தபால் மூலம் அனுப்பியமைக்கான பதிவுத் தபால் பற்றுச்சீட்டு ஆகியவற்றைத் தயாராக வைத்திருப்பது பயனுள்ளதாக இருக்கும். விசாரணைகளுக்காக இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனத்தின் 0115980200 எனும் தொலைபேசி இலக்கத்தைப் பயன்படுத்தவும்.

08. **பரீட்சார்த்தியின் ஆளடையாளம்:**

பரீட்சார்த்திகள் பரீட்சை மண்டபத்திற்குள் தாம் தோற்றும் ஒவ்வொரு பாடத்திற்குமான பரீட்சை தொடர்பாக மண்டப பொறுப்பாளர் திருப்தியுறும் வகையில் தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்துதல் வேண்டும். இதற்காகப் பின்வரும் ஆவணங்களில் ஓர் ஆவணம் மாத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும்.

I. தேசிய ஆளடையாள அட்டை ;
II. செல்லுபடியாகும் கடவுச்சீட்டு ;
III. செல்லுபடியாகும் சாரதி அனுமதிப்பத்திரம்.

அதேபோல் பரீட்சார்த்திகளின் அடையாளத்தை உறுதிப்படுத்தக்கூடிய வகையில் முகத்தையும் இரு காதுகளையும் மறைக்காமல் பரீட்சை மண்டபத்திற்குள் பிரவேசித்தல் வேண்டும். அவ்வாறு தமது அடையாளத்தை உறுதிப்படுத்துவதற்கு உடன்படாத பரீட்சார்த்திகள் பரீட்சை மண்டபத்திற்குள் அனுமதிக்கப்படமாட்டார்கள். மேலும், பரீட்சை மண்டபத்திற்குள் உட்பிரவேசித்த நேரம் தொடக்கம் பரீட்சை முடிந்து வெளியேறும் வரை முகம் மற்றும் காதுகளை மறைக்காதிருத்தல் வேண்டும்.

09. **பொய்யான தகவல்களை வழங்குதல் :**

பரீட்சார்த்தியொருவருக்குத் தகைமைகள் இல்லையெனத் தெரியவரும் பட்சத்தில், பரீட்சைக்கு முன்பதாக அல்லது பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது அல்லது பரீட்சையின் பின்னரோ அல்லது வேறு எச்சந்தர்ப்பத்திலேனும் அவரது பரீட்சைக்குரிய அனுமதி இரத்துச் செய்யப்படக்கூடும். பரீட்சார்த்தியினால் தெரிந்து கொண்டே பொய்யான தகவல்கள் வழங்கப்பட்டுள்ளதாக அல்லது ஏதேனுமொரு முக்கிய விடயமொன்று வேண்டுமென்றே மறைக்கப்பட்டுள்ளதாகத் தெரியவரும் பட்சத்தில், அவருக்கு சாரதி ஆலோசகருக்கான அனுமதிப்பத்திரம் வழங்காமல் இருப்பதற்கு இடமுண்டு. இந்த விதிமுறைகளில் குறிப்பிடப்படாத விடயங்கள் தொடர்பான தீர்மானங்கள் மோட்டார் வாகன போக்குவரத்து ஆணையாளர் நாயகம் அவர்களால் எடுக்கப்படும்.

10. சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளிலும் இந்த அறிவித்தல் வெளியிடப்பட் டிருப்பினும், அவற்றிற்கிடையே ஏதாவது வேறுபாடுகள் காணப்படுமாயின், சிங்கள மொழி மூலமான அறிவித்தலே வலுவுடையதாகும்.

கே.பி.என்.டீ.என். தேவப்பிரிய,
மோட்டார் வாகன போக்குவரத்து
ஆணையாளர் நாயகம் (ப.க.).

மோட்டார் வாகன போக்குவரத்துத் திணைக்களம்,
எல்விட்டிகல மாவத்தை,
கொழும்பு 05,
2026.07.24.

மாதிரி விண்ணப்பப்படிவம்

Specimen Application From

**மோட்டார் வாகன போக்குவரத்துத் திணைக்களம்**

Department of Moter Traffic

**உதவி சாரதி ஆலோசகர்களைப் பதிவு செய்வதற்கான எழுத்து மூலப் பரீட்சை - 2026**

Written Examination for Registration of Assistant Driving instructors – 2026

பரீட்சைக்குத் தோற்றும் மொழிமூலம்
(குறித்த இலக்கத்தைக் கட்டடத்திற்குள் எழுதவும்) ☐

சிங்களம் - 1
தமிழ் - 2
ஆங்கிலம் - 3

01. (அ) முழுப் பெயர் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) :.........................

(உதா:- HERATH MUDIYANSELAGE SAMAN KUMARA GUNAWARDHANA)

(ஆ) இறுதியில் வரும் பெயர் முதலிலும் ஏனைய பெயர்களின் முதலெழுத்துக்களை இட்டு பெயர்(ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்): ………..................................................................................................

(உதா : GUNAWARDHANA,H.M.S.K)

(ஆ) முழுப் பெயர் (சிங்களத்தில்/தமிழில்):.........................................................................................

02. (அ ) விண்ணப்பதாரியின் நிரந்தர முகவரி (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) :

.........................................................................................................................................

(ஆ) நிரந்தர முகவரி (சிங்களத்தில்/தமிழில்) : ..........................................................................................

(இ) சாரதி பாடசாலையின் பெயர் மற்றும் முகவரி (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) :

.........................................................................................................................................

03. தேசிய அடையாள அட்டை இலக்கம் :

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | |

04. பால் : ☐ ஆண் - 0 (குறித்த இலக்கத்தைக் கட்டத்திற்குள் இடவும்)
பெண் - 1

05. தொலைபேசி:

கையடக்க

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

நிலையான

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

06 விண்ணப்பதாரியின் வயது மற்றும் பிறந்த திகதி

(அ) வயது: ............... (ஆ)பிறந்த திகதி : .............................

07. கல்வித் தகைமைகள்: ...............................................

08. அனுபவம்: .........................

(உறுதிப்படுத்துகின்ற ஆவணங்களை இணைக்கவும்)

09. (அ) பரீட்சைக் கட்டணம் ரூ. 3,000.00 என்பதுடன் அந்தத் தொகையினைச் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டினை இங்கு ஒட்டவும். பற்றுச்சீட்டின் நகல் பிரதியொன்றை தம்வசம் வைத்திருப்பது பயனுள்ளதாகும்.

| |
|---|
| |

மேலே குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் அனைத்தும் எனது அறிவிற்கு அமைவாக எல்லா வகையிலும் உண்மையானதும் சரியானதும் என நான் உறுதிப்படுத்துகின்றேன். மேலும் பரீட்சை நடாத்துதல் மற்றும் பெறுபேறுகளை வெளியிடுதல் தொடர்பாக மோட்டார் வாகன போக்குவரத்து ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு நான் கட்டுப்படுவேன் என்றும் இதன்மூலம் அறிவிக்கின்றேன்.

................ ..............................
திகதி விண்ணப்பதாரியின் கையொப்பம்

**கையொப்பத்தினை உறுதிப்படுத்துதல் :**

எனக்கு தனிப்பட்ட முறையில் அறிமுகமுடைய திரு./திருமதி/செல்வி ...................................................... அவர்கள் .......................................... ஆம் திகதி எனது முன்னிலையில் இவ்விண்ணப்பத்தில் கையொப்பமிட்டார் என்பதையும் நிர்ணயிக்கப்பட்ட பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தி பற்றுச்சீட்டினை விண்ணப்பத்தில் ஒட்டியுள்ளார் என்பதையும் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

..........................................
உறுதிப்படுத்துபவரின் கையொப்பம்

பெயர்:...............................
பதவி:............................... (உத்தியோகபூர்வ முத்திரையினால் உறுதிப்படுத்தவும்)
முகவரி...............................
திகதி:.................................

07-563/1

---

## மோட்டார் வாகன போக்குவரத்துத் திணைக்களம்

## சாரதி ஆலோசகர்களைப் பதிவு செய்வதற்கான எழுத்து மூலப் பரீட்சை - 2026

இலக்கம் 1939/4 மற்றும் 2015.11.02 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானியின் II ஆம் பகுதியின் பிரகாரம் மோட்டார் வாகன போக்குவரத்துத் திணைக்களத்தில் சாரதி ஆலோசகர்களாகப் பதிவு செய்வதற்கான எழுத்து மூலப் பரீட்சைக்காகப் பின்வரும் தகைமைகளையுடைய இலங்கைப் பிரசைகளிடமிருந்து 2026.08.21 ஆம் திகதி வரை விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இப்பரீட்சைகள், 2026 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் கொழும்பில் நடத்தப்படும்.

01. **தகைமைகள்** :

விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி திகதியில் அனைத்து விண்ணப்பதாரர்களும் கீழே குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

i. விண்ணப்பதாரி இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.

ii. வயது 23 வயதிற்குக் குறையாமலும் 65 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். (அதற்கமைய 2003.08.21 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் மற்றும் 1961.08.21 ஆம் திகதி அல்லது அதற்குப் பின்னரான பிறந்த திகதியை உடையவர்கள் மாத்திரம் இதற்காக விண்ணப்பிக்கத் தகுதியுடைய வர்கள் ஆவர்.)

iii. கல்விப் பொதுத் தராதர (சாதாரண தரம்) பரீட்சையில் கணிதம் மற்றும் சிங்களம் அல்லது தமிழ் மொழி ஆகிய பாடங்களை உள்ளடக்கிய ஆறு பாடங்களில் இரண்டு திறமைச் சித்திகளுடன் இரண்டு தடவைகளுக்கு மேற்படாத வகையில் சித்தியடைந்திருத்தல் அல்லது அதற்குச் சமனான குறைந்தபட்ச தகைமையைப் பெற்றிருத்தல் வேண்டும்.

அல்லது

மூன்றாம் நிலை மற்றும் தொழிற் கல்வி ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட தேசிய தொழில் தகைமை மட்டம் III இற்குரித்தான (NVQ – Level 3) சான்றிதழைப் பெற்றிருத்தல் வேண்டும்.

அல்லது

விண்ணப்பிக்கும் திகதிக்கு முன்னர் ஐந்து ஆண்டு கால உதவி சாரதி ஆலோசகருக்குரிய அனுபவத்தைப் பெற்றிருத்தல் வேண்டும் ;

iv. (அ) விண்ணப்பிக்கப்படும் ஆலோசகர் வகுப்பிற்கு உரித்தாகும் வாகன வகுப்புகளுக்காக கீழே குறிப் பிடப்பட்டுள்ளவாறு உள்ளடங்கும் விண்ணப்ப தாரர்கள் குறைந்தபட்சம் 05 ஆண்டுகளுக்கு முன்னர் பெற்ற செல்லுபடியாகும் சாரதி அனுமதிப் பத்திரத்தைக் கொண்டுள்ளவராக இருத்தல் வேண்டும்.

- A வகுப்பு சாரதி ஆலோசகர் - கன ரக மோட்டார் லொறி (CE) / மோட்டார் கோச் (D) மற்றும் மோட்டார் சைக்கிள் (A) ஆகிய வாகன வகுப்புகளுக்குரிய செல்லுபடியான சாரதி அனுமதிப்பத்திரம்
- B வகுப்பு சாரதி ஆலோசகர் - மோட்டார் கோச் (D) மற்றும் மோட்டார் சைக்கிள் (A) ஆகிய வாகன வகுப்புகளுக்குரிய செல்லுபடியான சாரதி அனுமதிப்பத்திரம்
- C வகுப்பு சாரதி ஆலோசகர் - மோட்டார் கார் வாகனம்/இரட்டைப் பயன்பாட்டு வாகனம் (B), மோட்டார் ட்றைசிக்கிள்/ மோட்டார் ட்றைசிக்கிள் வேன் (B1) மற்றும் மோட்டார் சைக்கிள் (A) ஆகிய வாகன வகுப்புகளுக்குரிய செல்லுபடியான சாரதி அனுமதிப்பத்திரம் அல்லது

- மோட்டார் கார் வாகனம்/ இரட்டைப் பயன்பாட்டு வாகனம் (B) வாகன வகுப்புகளுக்குரிய செல்லுபடியாகும் சாரதி அனுமதிப்பத்திரம் அல்லது
- மோட்டார் ட்றைசிக்கிள்/ மோட்டார் ட்றைசிக்கிள் வேன் (B1) மற்றும் மோட்டார் சைக்கிள் (A) ஆகிய வாகன வகுப்புகளுக்குரிய செல்லுபடியான சாரதி அனுமதிப்பத்திரம் அல்லது
- மேற்குறிப்பிடப்பட்டவாறு அனுமதிப்பத்திரமொன்றைக் கொண்டுள்ள விண்ணப்பதாரர் ஒருவருக்கு C தர சாரதி ஆலோசகர் அனுமதிப்பத்திரத்தைப் பெற்றுக்கொள்வதற்காக விண்ணப்பிப்பிப்பதற்கான இயலுமை காணப்படுகிறது.

(ஆ) அனைத்து விண்ணப்பதாரர்களும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி திகதியன்று, 05 ஆண்டுகால அனுபவத்துடன் மேலே குறிப்பிடப்பட்டுள்ள ஏதேனும் ஒரு வாகன வகுப்பினைக் கொண்ட செல்லுபடியாகும் சாரதி அனுமதிப்பத்திரமொன்றைப் பெற்றிருத்தல் வேண்டும்.

v. குறித்த வாகன வகுப்புகளை ஓட்டுவதற்கும் மற்றும் வாகனங்களை ஓட்டுவதற்குப் பயிற்சி வழங்குவதற்கும் உடல்நல ரீதியாக தகுதியுடையவர் என்பதை தேசிய போக்குவரத்து மருத்துவ நிறுவனத்தினால் வழங்கப்படும் மருத்துவச் சான்றிதழ் மூலம் உறுதிப்படுத்துதல் வேண்டும்.

vi. அரசாங்க அல்லது பகுதி அரசாங்கம் சார்ந்த அல்லது அவ்வாறான பிறிதொரு நிறுவனமொன்றில் சேவையாற்றுபவருக்கு இதற்கு விண்ணப்பிக்க முடியாது என்பதுடன் அவ்வாறான நிறுவனமொன்றில் சாரதி பயிற்சி வழங்கும் பணியில் ஈடுபட்டிருக்கும் நபராக இருந்தால் குறித்த நிறுவனத தலைவர் ஊடாக விண்ணப்பத்தைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

02. **பரீட்சை முறை** :

i. இப்பரீட்சை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழி மூலங்களில் நடாத்தப்படும்.

ii. அனைத்து வினாத்தாள்களுக்கும் ஒரே ஒரு மொழியில் மாத்திரமே விடையளித்தல் வேண்டும். ஆரம்பத்தில் விண்ணப்பித்த மொழி மூலத்தைப் பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது.

03. **பரீட்சைக்குரிய பாடங்கள் மற்றும் எழுத்துப் பரீட்சை :**

இப்பரீட்சை மோட்டார் வாகன போக்குவரத்து முகாமைத்துவம் தொடர்பான இரண்டு பகுதிகளைக் கொண்டமைந்த வினாத்தாள்களை உள்ளடக்கியதாகும்.

| *வினாத்தாள்* | | *காலம்* | *மொத்த மதிப்பெண்* | *சித்தி பெறுவதற்கான புள்ளிகள்* |
|---|---|---|---|---|
| 1. | மோட்டார் வாகன போக்குவரத்து முகாமைத்துவம் I | 02 மணித்தியாலம் | 100 | 40 |
| 2. | மோட்டார் வாகன போக்குவரத்து முகாமைத்துவம் II | 02 மணித்தியாலம் | 100 | 40 |

04. **பாடப் பரப்புகள் :**

இந்த இரண்டு வினாத்தாள்களிலும் மோட்டார் வாகனச் சட்டம், வீதிச் சட்ட வழிகாட்டிக் கோவை, கற்பித்தல் மற்றும் ஆலோசனை வழங்கும் முறைமைகள், பாதுகாப்பாக வாகனத்தை ஓட்டும் முறை, ஒழுக்க நெறிமுறைகள், முதலுதவி, இயந்திரவியல் மற்றும் தொழில்நுட்ப அறிவு மற்றும் வீதிப் பாதுகாப்பு ஆகியன தொடர்பான வினாக்கள் உள்ளடங்கும்.

05. **விண்ணப்பிக்கும் முறை :**

(அ) இந்த அறிவித்தலுடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கு அமைவாக விண்ணப்பப் படிவம் இருத்தல் வேண்டும் என்பதுடன் அது கடதாசியின் இரு பக்கத்தினையும் பயன்படுத்தி 8.27" x11.69" (A4) அளவிலான காகிதத்தில் தயாரிக்கப்பட்டு விண்ணப்பதாரியினாலேயே பூர்த்தி செய்யப்படுதல் வேண்டும். விண்ணப்பப் படிவத்தைத் தயாரிக்கும் போது அதன் தலைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சையின் பெயர் சிங்கள மொழி விண்ணப்பப் படிவங்களில் சிங்களத்துக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும், தமிழ் மொழி விண்ணப்பப் படிவங்களில் தமிழுக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் குறிப்பிடுதல் வேண்டும். மேலும் மாதிரி விண்ணப்பப் படிவத்தின் தலைப்பு இலக்கம் 01 முதல் 07 வரையிலான பகுதிகள் முதல் பக்கத்திலும் மீதமுள்ள பகுதிகள் இரண்டாவது பக்கத்திலும் அமையும் வகையில் விண்ணப்பப் படிவம் தயாரிக்கப்படுதல் வேண்டும்.

(ஆ) விண்ணப்பப்படிவம் விண்ணப்பதாரர் பரீட்சைக்குத் தோற்ற விரும்பும் மொழியிலேயே அமைந்திருத்தல் வேண்டும்.

(இ) பரீட்சைக்காகப் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவத்தினை பதிவுத் தபால் மூலம் 2026.08.21 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கும் வகையில் "மோட்டார் வாகன போக்குவரத்து ஆணையாளர் நாயகம், தாபனப் பிரிவு, மோட்டார் வாகன போக்குவரத்துத் திணைக்களம், எல்விட்டிகல மாவத்தை, கொழும்பு 05" எனும் முகவரிக்கு அனுப்புதல் வேண்டும். விண்ணப்பப் படிவம் இடப்பட்டுள்ள கடித உறையின் இடது மேல் மூலையில் தெளிவாக "சாரதி ஆலோசகர்களை ஆட்சேர்ப்புச் செய்வதற்கான எழுத்து மூலப் பரீட்சை - 2026" என எழுதப்படுதல் வேண்டும். குறிப்பிடப்பட்ட திகதிக்குப் பின்னர் கிடைக்கும் எந்தவொரு விண்ணப்பப் படிவமும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

(ஈ) பரீட்சைக் கட்டணம் ரூ. 3000.00 ஆகும். அக் கட்டணம் மோட்டார் வாகன போக்குவரத்து ஆணையாளர் நாயகத்தின் வருமானத் தலைப்பு இலக்கம் 20-03-02-14 இன் கீழ் அரச வருமானத்திற்கு வரவு வைக்கப்படும் வகையில் நாட்டில் அமைந்துள்ள எந்தவொரு தபால் அலுவலகம்/ மாவட்ட/பிரதேச செயலாளர் அலுவலகங்களில் பணமாகச் செலுத்தப்பட்டு விண்ணப்பதாரரின் பெயரில் பெற்றுக் கொள்ளப்பட்ட பற்றுச்சீட்டினை அதன் ஒரு விளிம்பின் மூலம் கழன்று போகாத வகையில் விண்ணப்பப் படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள இடத்தில் ஒட்டுதல் வேண்டும். பரீட்சைக் கட்டணமாக காசுக் கட்டளை அல்லது முத்திரைகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது என்பதுடன் பரீட்சைக்காகச் செலுத்தப்பட்ட கட்டணம் எந்தவொரு காரணத்திற்காகவும் மீள வழங்குதல் அல்லது வேறு எந்தப் பரீட்சைக்கும் மாற்றுதல் மேற்கொள்ளப்படமாட்டாது. பற்றுச்சீட்டின் நகல் பிரதியினை விண்ணப்பதாரர்கள் தம்வசம் வைத்திருப்பது பயனுள்ளதாக இருக்கும்.

(உ) விண்ணப்பப்படிவத்தில் விண்ணப்பதாரரின் கையொப்பத்தினை அரசாங்கப் பாடசாலை அதிபர், சமாதான நீதவான், சத்தியப்பிரமாண ஆணையாளர், சட்டத்தரணி, பிரசித்திபெற்ற நொத்தாரிசு, முப்படைகளின் அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர், பொலிஸ் சேவையில் வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்டு பதவி வகிக்கும் உத்தியோகத்தர் அல்லது கிராம அலுவலர் அல்லது அரசாங்கத்தின் நிரந்தர பதவி வகிக்கும் கிராம அலுவலர் அல்லது பதவிநிலை உத்தியோகத்தர் ஆகிய நபர்களில் ஒருவரால் உறுதிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

(ஊ) எந்த வகையிலேனும் முழுமையாக பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். தபால் மூலம் அனுப்பும் போது விண்ணப்பப்படிவம் தொலைந்து போதல் அல்லது காலதாமதமாகக் கிடைத்தல் தொடர்பான எந்தவொரு முறைப்பாடுகளும் கவனத்திற்கொள்ளப்படமாட்டாது. விண்ணப்பங்கள் கிடைத்தமை குறித்து அறிவிக்கப் படமாட்டாது.

(எ) விண்ணப்பங்களை அனுப்பிய விண்ணப்பதாரர்களுக்கு இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனத்தின் பணிப்பாளரினால் அனுமதி அட்டைகள் வழங்கப்படும். பரீட்சை நடைபெறும் திகதிக்கு குறைந்தது ஐந்து நாட்களுக்கு முன்னர் தமது அனுமதி அட்டை கிடைக்காத விண்ணப்பதாரர் ஒருவராயின் அது தொடர்பாக இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனத்தின் பணிப்பாளரைத் தொடர்புகொண்டு விசாரித்தல் வேண்டும். அவ்வாறு விசாரிக்கும் போது தான் விண்ணப்பித்த பரீட்சையின் பெயர், விண்ணப்பதாரரின் முழுப் பெயர், தேசிய அடையாள அட்டை இலக்கம் மற்றும் முகவரி ஆகியவற்றை சரியாகக் குறிப்பிடுதல் வேண்டும். அவ்வாறு விசாரிக்கும் போது, இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனம் கோருகின்ற எந்தவொரு தகவல்களையும் உறுதிப்படுத்துவதற்காக விண்ணப்பதாரர் தன்னிடம் வைத்துள்ள விண்ணப்பப் படிவத்தின் நகல், பரீட்சைக் கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டின் நகல் மற்றும் விண்ணப்பப் படிவத்தைப் பதிவுத் தபால் மூலம் அனுப்பியமைக்கான பதிவுத் தபால் பற்றுச்சீட்டு ஆகியவற்றைத் தயாராக வைத்திருப்பது பயனுள்ளதாக இருக்கும். விசாரணைகளுக்காக இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனத்தின் 0115980200 எனும் தொலைபேசி இலக்கத்தைப் பயன்படுத்தவும்.

06. **பரீட்சார்த்தியின் ஆளடையாளம்:**

பரீட்சார்த்திகள் பரீட்சை மண்டபத்திற்குள் தாம் தோற்றும் ஒவ்வொரு பாடத்திற்குமான பரீட்சை தொடர்பாக மண்டப பொறுப்பாளர் திருப்தியுறும் வகையில் தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்துதல் வேண்டும். இதற்காகப் பின்வரும் ஆவணங்களில் ஓர் ஆவணம் மாத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும்.

I. தேசிய ஆளடையாள அட்டை ;
II. செல்லுபடியாகும் கடவுச்சீட்டு ;
III. செல்லுபடியாகும் சாரதி அனுமதிப்பத்திரம்.

அதேபோல் பரீட்சார்த்திகளின் அடையாளத்தை உறுதிப்படுத்தக்கூடிய வகையில் முகத்தையும் இரு காதுகளையும் மறைக்காமல் பரீட்சை மண்டபத்திற்குள் பிரவேசித்தல் வேண்டும். அவ்வாறு தமது அடையாளத்தை உறுதிப்படுத்துவதற்கு உடன்படாத பரீட்சார்த்திகள் பரீட்சை மண்டபத்திற்குள் அனுமதிக்கப் படமாட்டார்கள். மேலும், பரீட்சை மண்டபத்திற்குள் உட்பிரவேசித்த நேரம் தொடக்கம் பரீட்சை முடிந்து வெளியேறும் வரை முகம் மற்றும் காதுகளை மறைக்காதிருத்தல் வேண்டும்.

07. **பெறுபேறுகளை வெளியிடுதல்:**

பரீட்சைக்குத் தோற்றிய அனைத்து விண்ணப்பதாரர்களுக்கும் பெறுபேறுகள் தபால் மூலம் அல்லது இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனத்தின் www.slida.lk இணையத்தளத்தில் வெளியிடுவதன் மூலம் அறிவிக்கப்படும்.

08. **பொய்யான தகவல்களை வழங்குதல் :**

பரீட்சார்த்தியொருவருக்குத் தகைமைகள் இல்லையெனத் தெரியவரும் பட்சத்தில், பரீட்சைக்கு முன்பதாக அல்லது பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது அல்லது பரீட்சையின் பின்னரோ அல்லது வேறு எச்சந்தர்ப்பத்திலேனும் அவரது பரீட்சைக்குரிய அனுமதி இரத்துச் செய்யப்படக்கூடும். பரீட்சார்த்தியினால் தெரிந்து கொண்டே பொய்யான தகவல்கள் வழங்கப்பட்டுள்ளதாக அல்லது ஏதேனுமொரு முக்கிய விடயமொன்று வேண்டுமென்றே மறைக்கப்பட்டுள்ளதாகத் தெரியவரும் பட்சத்தில், அவருக்கு சாரதி ஆலோசகருக்கான அனுமதிப்பத்திரம் வழங்காமல் இருப்பதற்கு இடமுண்டு. இந்த விதிமுறைகளில் குறிப்பிடப்படாத விடயங்கள் தொடர்பாக மோட்டார் வாகன போக்குவரத்து ஆணையாளர் நாயகம் அவர்கள் எடுக்கும் தீர்மானமே இறுதித் தீர்மானமாகக் கொள்ளப்படும்.

09. **தெரிவு நடைமுறை:**

ஒவ்வொரு பாடத்திற்கும் குறைந்தபட்சம் 40 புள்ளிகள் வீதம் மொத்த எழுத்துப் பரீட்சையில் 40% அல்லது அதற்கு மேற்பட்ட புள்ளிகளைப் பெற்ற பரீட்சார்த்திகள் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டு அவர்களது சான்றிதழ்கள் மற்றும் தகைமைகள் பரிசீலிக்கப்படும்.நேர்முகப் பரீட்சையின் மூலம் தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரர்கள் சாரதிகளுக்குப் பயிற்சியளிப்பதற்கான ஆலோசனைகளை வழங்குதல் மற்றும் பயிற்சியளித்தல் தொடர்பான செயன்முறைப் பரீட்சைக்கு உட்படுத்தப்படுவர். இந்தப் பரீட்சையில் தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரர்கள் சாரதி ஆலோசகர் பாடநெறியில் பங்குபற்றுதல் வேண்டும் என்பதுடன், அப்பாடநெறியை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்ததன் பின்னர், அவர்களுக்கு சாரதி ஆலோசகருக்கான அனுமதிப்பத்திரம் வழங்கப்படும்.

ஆலோசகர் பாடநெறிக்காக நிர்ணயிக்கப்படும் கட்டணத்தை விண்ணப்பதாரர்களே செலுத்துதல் வேண்டும்.

10. சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளிலும் இந்த அறிவித்தல் வெளியிடப்பட்டிருப்பினும், அவற்றிற்கிடையே ஏதாவது வேறுபாடுகள் காணப்படுமாயின், சிங்கள மொழி மூலமான அறிவித்தலே வலுவுடையதாகும்.

கே.பி.என்.டீ.என். தேவப்பிரிய,
மோட்டார் வாகன போக்குவரத்து ஆணையாளர் நாயகம்(ப.க.).

மோட்டார் வாகன போக்குவரத்துத் திணைக்களம்,
எல்விட்டிகல மாவத்தை,
கொழும்பு 05,
2026.07.24.

மாதிரி விண்ணப்பப்படிவம்

Specimen Application From

**மோட்டார் வாகன போக்குவரத்துத் திணைக்களம்**

Department of Moter Traffic

**சாரதி ஆலோசகர்களைப் பதிவு செய்வதற்கான எழுத்து மூலப் பரீட்சை - 2026**

Written Examination for Registration of Driving instructors – 2026

பரீட்சைக்குத் தோற்றும் மொழிமூலம்
(குறித்த இலக்கத்தைக் கட்டத்திற்குள் எழுதவும்) ☐

சிங்களம் - 1
தமிழ் - 2
ஆங்கிலம் - 3

01. (அ) முழுப் பெயர் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) :..........................................................................................

(ஆ) இறுதியில் வரும் பெயர் முதலிலும் ஏனைய பெயர்களின் முதலெழுத்துக்களை இட்டு பெயர் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) : ……….............................................................................................................

(இ) முழுப் பெயர் (சிங்களத்தில்/தமிழில்):…..........................................................................................

02. (அ ) விண்ணப்பதாரியின் நிரந்தர முகவரி (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) :

.....................................................................................................................................................................

(ஆ) நிரந்தர முகவரி (சிங்களத்தில்/தமிழில்) : .......................................................................................................................

(இ) சாரதி பாடசாலையின் பெயர் மற்றும் முகவரி (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) :

.....................................................................................................................................................................

03. தேசிய ஆளடையாள அட்டை இலக்கம் : | | | | | | | | | | | | |

04. பால் : ☐ ஆண் - 0 (குறித்த இலக்கத்தைக் கட்டத்திற்குள் இடவும்)
பெண் - 1

05. தொலைபேசி:

கையடக்க | | | | | | | | | | |

நிலையான | | | | | | | | | | |

06 விண்ணப்பதாரியின் வயது மற்றும் பிறந்த திகதி

(அ) வயது................ (ஆ) பிறந்த திகதி .............................

07. கல்வித் தகைமைகள்:
க. பொ. த. (சா.த.)

| *தொ. இலக்கம்* | *பாடம்* | *சித்தி* | *வருடம்* |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

08. அனுபவம்: ..................................................................................................................................................

(உறுதிப்படுத்துகின்ற ஆவணங்களை இணைக்கவும்)

09. (அ) பரீட்சைக் கட்டணம் ரூ. 3,000.00 என்பதுடன் அந்தத் தொகையினைச் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டினை இங்கு ஒட்டவும். பற்றுச்சீட்டின் நகல் பிரதியொன்றை தம்வசம் வைத்திருப்பது பயனுள்ளதாகும்.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் அனைத்தும் எனது அறிவிற்கு அமைவாக எல்லா வகையிலும் உண்மையானதும் சரியானதும் என நான் உறுதிப்படுத்துகின்றேன். மேலும் பரீட்சை நடாத்துதல் மற்றும் பெறுபேறுகளை வெளியிடுதல்

தொடர்பாக மோட்டார் வாகன போக்குவரத்து ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு நான் கட்டுப்படுவேன் என்றும் இதன்மூலம் அறிவிக்கின்றேன்.

திகதி: ................ ..............................
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

**கையொப்பத்தினை உறுதிப்படுத்துதல் :**

எனக்கு தனிப்பட்ட முறையில் அறிமுகமுடைய திரு./திருமதி/செல்வி ...................................................... அவர்கள் .......................................... ஆம் திகதி எனது முன்னிலையில் இவ்விண்ணப்பத்தில் கையொப்பமிட்டார் என்பதையும் நிர்ணயிக்கப்பட்ட பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தி பற்றுச்சீட்டினை விண்ணப்பத்தில் ஒட்டியுள்ளார் என்பதையும் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

..........................................
உறுதிப்படுத்துபவரின் கையொப்பம்

பெயர்:...............................
பதவி:............................... (உத்தியோகபூர்வ முத்திரையினால் உறுதிப்படுத்தவும்)
முகவரி...............................
திகதி:..................................

07-563/2

---

## அரசாங்க சேவை ஆணைக்குழு

## நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு

### இலங்கை உள்நாட்டு இறைவரிச் சேவையின் III ஆம் தரத்திற்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை – 2026

இலங்கை உள்நாட்டு இறைவரிச் சேவையின் III ஆம் தரத்தில் பதவிகளில் நிலவும் 200 வெற்றிடங்களுக்காக திறந்த அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்வதற்காக நடாத்தப்படும் போட்டிப் பரீட்சைக்கு பின்வரும் தகைமைகளைக் கொண்ட இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் அழைக்கப்படுகின்றன:

1. இவ் அறிவித்தலில் "செயலாளர்" என்பது "நிதி, நிர்வாக விடயத்துக்குப் பொறுப்புள்ள அமைச்சின் செயலாளரைக்" குறிக்கும். "சேவை" என்ற சொல்லினால் குறிப்பிடப்படுவது, வேறு விதமாக விசேடமாகக் குறிப்பிடப்படாத சந்தர்ப்பங்களில், "இலங்கை உள்நாட்டு இறைவரிச் சேவையைக்" குறிக்கும்.

2. இப்பரீட்சையின் மூலம் இலங்கை உள்நாட்டு இறைவரிச் சேவையின் தரம் III இற்கான ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படும். இந்த ஆட்சேர்ப்பு, எழுத்துப் பரீட்சை மற்றும் சாதாரண நேர்முகப் பரீட்சை ஆகியவற்றின் பெறுபேறுகளின் அடிப்படையில் மேற்கொள்ளப்படும்.

   வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்படும் வெள்ளிக் கிழமையைத் தொடர்ந்து வரும் திங்கட்கிழமையிலிருந்து நிகழ்நிலை விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

   அதற்கான விண்ணப்பப்படிவம் இலங்கைப் பரீட்சை திணைக்களத்தின் www.doenets.lk எனும் இணையத்தளத்தின் "Our Services" என்பதன் கீழுள்ள "Online Applications – (Recruitment/ E.B. Exams)" என்பதனூடாக வெளியிடப்பட்டுள்ளது. விண்ணப்பங்கள் நிகழ்நிலை (Online) மூலமாக மட்டுமே சமர்பிக்கப்பட வேண்டும். நிகழ்நிலை மூலமான விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளுதல் 2026, ஒகத்து மாதம் 03 ஆம் திகதி மு.ப. 9.00 மணிக்கு ஆரம்பமாகி, 2026, ஒகத்து மாதம் 31 ஆந் திகதி பி. ப. 9.00 மணிக்கு நிறைவடையும்.

   விண்ணப்பங்களைச் சமர்ப்பிப்பதை இறுதித் திகதி வரை தாமதப்படுத்துவதால் ஏற்படக்கூடிய எந்தவொரு எதிர்மறை விளைவுகளுக்கும் விண்ணப்பதாரரே பொறுப்பேற்க வேண்டும்.

   இப்பரீட்சையானது பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் 2026, ஒற்றோபர் மாதத்தில் கொழும்பு மாவட்டத்தில் நடாத்தப்படும். இப்பரீட்சையை பிற்போடுவதற்கோ அல்லது இரத்துச் செய்வதற்கோ அல்லது அரசாங்க சேவை ஆணைக்குழுவின் அறிவுறுத்தல்களுக்கு உட்பட்டு, பரீட்சை ஆணையாளர் நாயகத்திற்கு அதிகாரம் உண்டு.

3. இந்தப் பதவிக்காக நியமிக்கப்படுபவர்களின் எண் ணிக்கையும், நியமனங்கள் நடைமுறைக்கு வரும் திகதி அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்படும்.

4. இப்போதைக்கு அரசாங்க / மாகாண அரசாங்க சேவையில் பணியாற்றும் அலுவலர்கள், விண்ணப் பத்தின் பிரதியொன்றைத் தமது தனிப்பட்ட பெயர்வழிக் கோப்பில் இணைத்துக் கொள்ளுமாறு தாபனத் தலைவரிடம் ஒப்படைக்க வேண்டும். மேலும், நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படும் சந்தர்ப்பத்தில், தாபனத் தலைவரினால் சான்றளிக்கப்பட்ட விண்ணப்பத்தின் பிரதி மற்றும் சேவை உறுதிப்படுத்தல் கடிதம் என்பவற்றைச் சமர்ப்பிக்க வேண்டும்.

5. **சேவை நிபந்தனைகள் :**

   5.1 அரசாங்க சேவையின் நியமனங்களைக் கட்டுப் படுத்தும் பொது நிபந்தனைகளுக்கும் இலங்கைச்

சனநாயக சோசலிசக் குடியரசின் 2013.04.05 ஆந் திகதிய 1804/50 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட இலங்கை உள்நாட்டு இறைவரிச் சேவையின் சேவைப் பிரமாணக் குறிப்பில் விதிக்கப்பட்டுள்ள விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கும், அப்பிரமாணக் குறிப்பில் செய்யப்பட்டுள்ள அல்லது இதனகத்துப் பின்னர் செய்யப்படவுள்ள திருத்தங்களுக்கும், தாபன விதிக்கோவையினதும் நிதி ஒழுங்குவிதிகளின் ஏற்பாடுகளினதும், 2310/29 ஆம் இலக்க 2022.12.14 ஆந் திகதிய அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் நடை முறை ஒழுங்குவிதிகளுக்கும் உட்பட்டு, தெரிவு செய்யப்படும் பரீட்சார்த்திகள் சேவையின் தரம் III இற்கு நியமிக்கப்படுவர்.

5.2 இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதிய உரிமையைக் கொண்டதுமாகும். மேலும் நீங்கள் விதவைகள் மற்றும் அநாதைகள் ஓய்வூதியத் திட்டம்/தபுதாரர் மற்றும் அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு பங்களிப்பு செய்ய வேண்டும். அரசாங்கத்தினால் காலத்திற்குக் காலம் நிர்ணயிக்கப்படும் முறைக்கேற்ப, நீங்கள் இந்நிதிக்கு பங்களிப்புத் தொகையைச் செலுத்த வேண்டும்.

5.3 இந்த நியமனம் மூன்று வருட தகுதிகாண் காலப்பகுதிக்கு உட்பட்டதாகும். இலங்கை உள்நாட்டு இறைவரிச் சேவையின் தரம் III இற்கு ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டு, மூன்று (03) வருட காலப்பகுதியினுள் சேவைப் பிரமாணக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு முதலாம் வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும்.

5.4 18/2020 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கைக்கும் அதன் இடைநேர் விளைவான சுற்றறிக்கைகளுக்கும் இணங்க, சேவையில் இணைந்து (03) வருட காலப்பகுதியினுள் உரிய அரச கரும மொழித் தேர்ச்சியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

6. **சம்பள அளவுத் திட்டம்** :

2025.03.25 ஆந் திகதிய 10/ 2025 ஆம் இலக்க அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கையின் 1 ஆம் அட்டவணையின் பிரகாரம், இப்பதவிக்கான மாதாந்த சம்பள அளவுத்திட்டம் ரூபா 82,150.00 - 10 x 2,400 - 8 x 2,940 - 17 x 3,900 – 195,970.00 (SL -1 – 2025) ஆகும். இச்சம்பளம், குறித்த சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு அமைவாக அதன் II ஆம் அட்டவணையின் பிரகாரம் வழங்கப்படும்.

7. **ஆட்சேர்ப்புக்கான தகைமைகள் :**

(அ) i. இலங்கைப் பிரசையாக இருத்தல்;

ii. சிறந்த நன்னடத்தையுடையவராக இருத்தல்;

iii. நாட்டின் எந்தவொரு பிரதேசத்திலும் சேவை செய்வதற்குத் தேவையான உடல் மற்றும் உள ஆரோக்கியத்தை எல்லா வகையிலும் கொண்டிருத்தல்;

iv. எந்தவொரு மதத்தைச் சார்ந்த போத கரும் இந்த பரீட்சைக்குத் தோற்று வதற்கு அனுமதிக்கப்படமாட்டார்;

v. எந்தவொரு நபரும் இத்திறந்த போட்டிப் பரீட்சைக்கு இரண்டு (2) தடவைகளுக்கு மேல் தோற்றுவதற்கு அனுமதிக்கப்படமாட்டார். (முன்னைய சேவை பிரமாணக் குறிப்பின் கீழ், விண்ணப்பதாரர்கள் இலங்கை உள்நாட்டு இறைவரிச் சேவையின் தரம் II/II இற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான பரீட்சைக்குத் தோற்றிய தடவைகள் கருத்தில் கொள்ளப்படமாட்டாது);

vi. ஆட்சேர்ப்பிற்குத் தேவையான அனைத்துத் தகைமைகளும், விண்ணப் பங்களை ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதியன்று அனைத்து வகையிலும் பூர்த்தி செய்யப்பட்டிருக்க வேண்டும்.

(ஆ) **கல்வித் தகைமைகள்** :

(i) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட வெளிநாட்டு அல்லது அரசாங்க பல் கலைக்கழகமொன்றில் வழங்கப்படும் முதலாம் அல்லது இரண்டாம் வகுப்புச் சித்தியுடனான பட்டமொன்றைப் பெற்றிருத்தல்.

அல்லது

(ஆ) இலங்கைப் பாராளுமன்றச் சட்ட மொன்றின் மூலம் நிறுவப்பட்ட பல் கலைக்கழகமொன்றினால் வழங்கப் படும் முதலாம் அல்லது இரண் டாம் வகுப்புச் சித்தியுடனான பட்ட மொன்றைப் பெற்றிருத்தல்.

அல்லது

(இ) 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகச் சட்டத் தின் 25 A ஆம் பிரிவின் கீழ் அங்கீ கரிக்கப்பட்ட முதலாம் அல்லது இரண்டாம் வகுப்புச் சித்தியுடனான பட்டமொன்றினைப் பெற்றிருத்தல்.

(கற்கைக் காலம் குறைந்தது மூன்று (03) வருடங்களாக இருத்தல் வேண்டும்)

அல்லது

(ii) உயர் நீதிமன்றச் சட்டத்தரணியொருவராக இருத்தல்

அல்லது

(iii) பட்டயக் கணக்காளரொருவராக இருத்தல்.

**குறிப்பு.-** மேலே (ஆ) இல் குறிப்பிடப்பட்டுள்ள I, II, III ஆகிய தகைமைகள் அமுல் படுத்தப்படும் திகதி, விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி யாகவோ அல்லது அதற்கு முன்னரான ஒரு திகதியாகவோ இருத்தல் வேண்டும்.

(இ) **வயது :**

விண்ணப்பங்கள் கோரப்படும் இறுதித் திகதியில் இருபத்திரண்டு (22) வயதுக்கு குறையாதவராகவும் இருபத்தெட்டு (28) வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். (அதற்கிணங்க, வயது தொடர்பான தகைமையை பூர்த்தி செய்வதற்கு, விண்ணப்பதாரியின் பிறந்த திகதி 2004.08.31 ஆந் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னராகவோ மற்றும் 1998.08.31 ஆந் திகதியன்றோ அல்லது அதற்குப் பின்னரோ இருத்தல் வேண்டும்.)

அரசாங்க சேவையில் அல்லது மாகாண அரசாங்க சேவையில் உள்ளவர்களுக்கு அதிகபட்ச வயதெல்லை முப்பத்தைந்து (35) வருடங்களாகும். (அரசாங்க சேவையில் ஈடுபட்டுள்ள விண்ணப்பதாரிகள் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் 01/ 2020 சுற்றறிக்கைக்கு அமைய, ஒழுக்காற்று தண்டனைகளுக்கு உட்பட்டவர்களாக இருத்தல் கூடாது.)

8. **ஆட்சேர்ப்பு முறை :**

8.1 **எழுத்துப் பரீட்சை** :

பின்வரும் பாடங்களைக் கொண்ட மூன்று (03) வினாத்தாள்களை உள்ளடக்கிய எழுத்துப் பரீட்சையொன்று நடாத்தப்படும். பாடங்கள் மற்றும் ஒவ்வொரு பாடத்திலும் சித்தியடைவதற்காகப் பெறவேண்டிய ஆகக்குறைந்த புள்ளிகள் கீழே தரப்பட்டுள்ளன :

| *பாடம்* | *புள்ளிகள்* | *சித்தியடைவதற்கு பெறவேண்டிய ஆகக்குறைந்த புள்ளிகள்* |
|---|---|---|
| 01. கிரகித்தல் | 100 | 40 |
| 02. நுண்ணறிவு | 100 | 40 |
| 03. பொது அறிவு | 100 | 40 |

8.1.1 **எழுத்துப் பரீட்சைக்கான பாடத்திட்டம் :**

**பாட இலக்கம் 01 - கிரகித்தல் :**

பரீட்சார்த்தியின் விடயங்களைப் புரிந்து கொள்ளும் இயலுமை, தொடர்பாடல் திறன், சாராம்சப்படுத்தல், விவரித்தல் மற்றும் ஆக்கத்திறன் ஆகிய திறன்களை அள விடுவதற்காக வடிவமைக்கப்பட்ட புறவியல் வினாக்களைக் கொண்ட வினாத்தாளாகும்.

(காலம் : 1 1/2 மணித்தியாலம் - 100 புள்ளிகள்)

**பாட இலக்கம் 02 - நுண்ணறிவுப் பரீட்சை :**

பரீட்சார்த்தியின் தர்க்க ரீதியாகச் சிந்திக்கும் ஆற்றல், மாற்றீடு, பொருள்கோடல், தொடர்பு காணல், மொழிபெயர்த்தல், பிரச்சினை களை தீர்க்கும் இயலுமை, காரண காரியத் தொடர்புகளைளைப் புரிந்து கொள்ளல், எதிர்வுகூறல், தகவல்களை ஒழுங்கமைத்தல், வடிவங்களை இனங்காணல் மற்றும் அறிவுறுத்தல்களைப் பின்பற்றுதல் போன்ற இயலுமைகளை அளவிடுவதை நோக்காகக் கொண்டு வடிவமைக்கப்பட்ட பல்தேர்வு வினாக்களை உள்ளடக்கிய ஒரு வினாப் பத்திரமாகும்.

( காலம் : 1 மணித்தியாலம் - 100 புள்ளிகள்)

**பாட இலக்கம் 03 - பொது அறிவு :**

இலங்கையின் புவியியல், அரசியல், பொருளாதார, சமூகம் மற்றும் கலாசாரச் சூழல் உள்ளடங்கலாக இலங்கையின் முழுமையான சூழல் தொடர்பாகவும், சர்வதேச ரீதியில் முக்கியத்துவம் பெறும் சமகால நிலைமைகள் தொடர்பாகவும், விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்ப வளர்ச்சி தொடர்பாகவும் பரீட்சார்த்தியின் அறிவைச் சோதிக்கும் வகையில் வடிவமைக்கப்பட்ட, பல்தேர்வு மற்றும் சுருக்கமான விடை யளிக்கும் வினாக்களை மாத்திரம் கொண்ட வினாத்தாளாகும்.

( காலம் : 1 மணித்தியாலம் - 100 புள்ளிகள்)

8.2 **சாதாரண நேர்முகப் பரீட்சை :**

(i) மேலே விடய இலக்கம் 07 இல் குறிப்பிட்டுள்ள ஆட்சேர்ப்புக்கான தகைமைகள் பூர்த்தி செய் யப்பட்டுள்ளனவா என்பதையுப் பரிசீலிப் பதற்காகவும், உடல் தகுதியைப் பரிசோதிப்ப தற்காகவும் சாதாரண நேர்முகப் பரீட்சை யொன்று நடாத்தப்படும். மேலும், இதற்கு புள்ளிகள் வழங்கப்படமாட்டாது.

(ii) ஒவ்வொரு பாடத்திலும் ஆகக் குறைந்தது நாற்பது (40) அல்லது அதற்கு மேற்பட்ட புள்ளிகளைப் பெறும் விண்ணப்பதாரர்களில், அனைத்துப் பாடங்களிலும் பெற்ற புள்ளிகளின் கூட்டுத்தொகையின் அடிப்படையில் ஆகக்கூடிய புள்ளிகளைப் பெறும் விண்ணப்பதாரர்கள் சாதாரண நேர் முகப் பரீட்சைக்குத் தோற்றுவதற்குத் தகைமை பெறுவர். தகைமை பெறும் விண்ணப்பதாரர்களில் இருந்து நேர் முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட வேண்டிய விண்ணப்பதாரர்களின் எண்ணிக்கை, சந்தர்ப்பத்திற்கேற்ப, எழுத்துப் பரீட்சையில் அவர்கள் பெற்ற திறமை ஒழுங்கு மற்றும் ஆட்சேர்ப்புச் செய்யப்படவுள்ள எண்ணிக்கை ஆகியவற்றின் அடிப் படையில் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப் படும். தகைமை பெறும் பரீட்சார்த்தி களின் எண்ணிக்கை, மேலே தீர்மானிக் கப்பட்ட எண்ணிக்கைக்குச் சமமாக இல்லாத சந்தர்ப்பங்களில், அவ் வாறான சாதாரண நேர்முகப் பரீட் சைக்குத் தகைமை பெற்ற விண்ணப்ப தாரர்களின் எண்ணிக்கை மட்டுமே அழைக்கப்படுவர்.

(iii) சாதாரண நேர்முகப் பரீட்சைக் குழு அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் நியமிக்கப்படும்.

**கவனிக்க வேண்டியவை :**

நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றுவது, நியமனம் வழங்கப்படுவதற்கான தகை மைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன எனக் கருதப்படமாட்டாது.

8.3 வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப, ஆட் சேர்ப்புச் செய்ய எதிர்பார்க்கப்படும் எண்ணிக் கையினரை, ஆட்சேர்ப்புக்கான தகைமைகளைப் பூர்த்தி செய்த விண்ணப்பதாரர்களிலிருந்து எழுத்துப் பரீட்சையில் பெற்ற புள்ளிகளின் அடிப் படையில் அதிகூடிய புள்ளிகளைப் பெற்ற விண் ணப்பதாரர்களைத் திறமை ஒழுங்கில் இச் சேவை யின் தரம் III இற்கு ஆட்சேர்ப்புச் செய்யப்படுவர்.

8.4 தகுதியின் ஒழுங்கு வரிசைப்படி வெற்றிடங்களை நிரப்பும் போது, ஏதேனும் ஒரு சந்தர்ப்பத்தில் மீதமுள்ள வெற்றிடங்களின் எண்ணிக்கையை விட அதிக எண்ணிக்கையான சமமான புள்ளிகளைப் பெற்ற தகுதியுடைய விண்ணப்பதாரர்கள் இருப்பின் மற்றும் அவ்வெற்றிடங்களை நிரப்புவதற்கான சேவைத் தேவைப்பாடு காணப்படின், அவ்வாறான ஆட்சேர்ப்பு 2024.03.14 ஆந் திகதிய 01/2024 ஆம் இலக்க அரசாங்க சேவைகள் ஆணைக்குழுச் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு அமைவாக மேற்கொள்ளப்படும்.

9. **பரீட்சை மொழிமூலம் :**

(அ) இப்பரீட்சை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் நடாத்தப்படும்.

(ஆ) பரீட்சார்த்திகள் தாம் விரும்பும் ஏதேனும் ஒரு மொழியில் பரீட்சைக்குத் தோற்ற முடியும்.

**குறிப்பு.-**

(i) விண்ணப்பதாரர்கள் இந்தப் பரீட்சைக்குத் தோற்றும் அனைத்து வினாப்பத்திரங்களுக்கும் ஒரே மொழியில் மாத்திரம் விடையளித்தல் வேண்டும்.

(ii) பரீட்சார்த்திகள் தனது விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சை எழுதுவதற் கான ஊடக மொழியை மாற்றுவதற்குப் பரீட் சார்த்திகளுக்கு இடமளிக்கப்படமாட்டாது.

(iii) பரீட்சார்த்திகள் அனைவரும் மூன்று (03) வினாத்தாள்களுக்கும் தோற்றுவது கட்டாய மானதாகும்.

10. **பரீட்சை நிபந்தனைகள் :**

I. நிகழ்நிலை (Online) பரீட்சை விண்ணப்பப்படிவம் ஆங்கில மொழியில் மாத்திரம் பூர்த்தி செய்யப்பட வேண்டும். விண்ணப்பதாரரினால் நிகழ்நிலை மூலம் அனுப்பி வைக்கப்பட்ட மென்பிரதி, செல்லுபடியான விண்ணப்பப்படிவமாக திணைக் களத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளதா/ ஏற்றுக் கொள்ளப்படவில்லையா என்பது, முறைமைக்குள் பிரவேசிப்பதற்குப் பயன்படுத்தப்பட்ட கையடக்கத் தொலைபேசி இலக்கத்திற்கு குறுஞ்செய்தி (SMS) மூலமாக அல்லது மின்னஞ்சல் (E-mail) முகவரிக்கு அறிவிக்கப்படும். நிகழ்நிலை விண்ணப்பப் படிவத்தை பூர்த்தி செய்வதற்கு முன்னர், பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற்காகத் தயாரிக்கப்பட்டுள்ள அறிவுறுத்தல் படிவத்தை (instructions) பதிவிறக்கம் செய்துகொள்ள வேண்டும். விண்ணப்பப் படிவத்தை பூர்த்தி செய்யும் போது, அந்த அறிவுறுத்தல்களைக் கவனமாகப் பின்பற்ற வேண்டும். விண்ணப்பப்படிவத்தின் அச்சிடப்பட்ட பிரதியைப் பெற்றுக்கொண்டதன் பின்னர், விண்ணப்பத்தில் மேற்கொள்ளப்படும் எந்தவொரு திருத்தமும் செல்லுபடியான திருத்த மாகக் கருதப்படமாட்டாது. முழுமையாகப் பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக் கப்படும்.

II. பரீட்சைக்கான கட்டணம் ரூபா 1,200.00 ஆகும். பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தும் போது நிகழ்நிலை (Online) முறையூடாக வழங்கப்படும் பின்வரும் கட்டணம் செலுத்தும் முறைகளின் கீழ் மாத்திரம் பணம் செலுத்தப்பட வேண்டும் :

(i) எந்தவொரு வங்கியினதும் கடன் அட்டைகள் மூலம் (Any Bank Credit Card);

(ii) இணையவழி கொடுப்பனவு வசதியைக் கொண்ட எந்தவொரு வங்கியின் வரவு அட்டைகள் மூலம் (Any Bank Debit Card with the Facility of Internet Transactions);

(iii) இலங்கை வங்கியின் நிகழ்நிலை வங்கி முறைமை / Flex உள்ளீட்டின் மூலம் (Online Banking Method/Flex App of Bank of Ceylon);

(iv) இலங்கை வங்கியின் ஏதேனும் ஒரு வங்கிக் கிளை மூலம் (Any Branch of the Bank of Ceylon).

குறிப்பு:

(அ) இம்முறைகளின் மூலம் எவ்வாறு பணம் செலுத்துவது என்பது தொடர்பான அறிவுறுத்தல்கள் இணையத்தளத்தில் பரீட்சைக்குரிய தொழில்நுட்ப அறி வுறுத்தல்களின் கீழ் வெளியிடப் பட்டுள்ளன.

(ஆ) பணம் கிடைக்கப்பெற்றமை தொடர் பாக குறுஞ்செய்தி (SMS) மூலமாக அல்லது மின்னஞ்சல் செய்தி மூலமாக அறிவிக்கப்படும். பரீட்சைக் கட்டணத்தின் முழுத் தொகையும் செலுத்தப்பட வேண்டும். பரீட்சைக் கட்டணம் குறைவாகவோ அல்லது கூடுதலாகவோ செலுத்தப்பட்டுள்ள விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப் படும். மேலே குறிப்பிட்டுள்ள கொடுப்பனவு முறைகளின் மூலம் பரீட்சைக் கட்டணம் செலுத்தும்போது ஏற்படும் தவறுகள் தொடர்பாக இலங்கைப் பரீட்சைகள் திணைக்களம் பொறுப்பேற்காது.

(இ) பரீட்சைக்காகச் செலுத்தப்பட்ட கட்ட ணம் எக்காரணத்திற்காகவும் மீளச் செலுத்தப்படவோ அல்லது வேறு எந்தவொரு பரீட்சைக்காகவும் மாற்றீடு செய்யப்படவோ மாட்டாது.

12. **பரீட்சை அனுமதி அட்டை :**

வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைக் கொண்ட விண்ணப்பதாரர்கள் மாத்திரமே விண்ணப்பித்துள்ளனர் என்ற எடுகோளின் அடிப்படையில், விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களைச் சமர்ப்பித்த விண்ணப்பதாரர்களுக்குப் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் பரீட்சை அனுமதி அட்டைகள் நிகழ்நிலை (Online) முறையில் மாத்திரம் வழங்கப்படும். பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் வெளியிடப்பட்டதன் பின்னர், இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தினால் அது தொடர்பாக இணையத்தள அறிவித்தல் ஒன்றின் மூலமாகவும்/ விண்ணப்பதாரர்களுக்குக் குறுஞ்செய்தி மூலமாகவும் அறிவிக்கப்படும். பரீட்சார்த்தி ஒருவருக்கு தனது அனுமதி அட்டை கிடைக்கப்பெறாத பட்சத்தில், அவர் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் தாபனப் பரீட்சைகள் ஒழுங்கமைப்புக் கிளையுடன் தொடர்புகொண்டு அது தொடர்பாக விசாரிக்க வேண்டும். அவ்வாறு விசாரிக்கும் போது, விண்ணப்பதாரர் தான் விண்ணப்பித்த பரீட்சையின் பெயர், விண்ணப்பதாரரின் முழுப்பெயர், தேசிய ஆளடையாள அட்டை இலக்கம் மற்றும் முகவரி ஆகியவற்றைத் துல்லியமாகக் குறிப்பிட்டு தயாரிக்கப்பட்ட கோரிக்கைக் கடிதமொன்றை இணையத்தள அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்புவது பயனுள்ளதாக அமையும். அவ்வாறு விசாரிக்கும் போது, பரீட்சைத் திணைக்களத்தினால் கோரப்படும் ஏதேனும் தகவலை உறுதிப்படுத்துவதற்காக, பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவத்தின் நிழற்படப் பிரதியையும் பரீட்சைக் கட்டணம் செலுத்தியதற்கான பற்றுச் சீட்டின் நிழற்படப் பிரதியையும் தம்மிடம் வைத் திருப்பது பயனுள்ளதாக இருக்கும். அனுமதி அட்டையைப் பரிசோதித்துப் பார்த்த பின்னர், ஏதேனும் திருத்தங்கள் இருப்பின், காலதாமதமின்றி பரீட்சைத் திணைக்களத்துடன் தொடர்புகொண்டு, விண்ணப்பப்படிவத்திற்கு அமைய உரிய திருத்தங் களைச் செய்துகொள்ள வேண்டும். பரீட்சை மண்ட பத்திலோ/ நேர்முகப் பரீட்சையின் போதோ திருத்தங் களுக்காக முன்வைக்கப்படும் கோரிக்கைகள் கவனத்திற் கொள்ளப்படமாட்டாது.

12.1 பரீட்சார்த்திகள் தமக்குக் குறித்துரைக்கப்பட்ட பரீட்சை மண்டபத்தில் பரீட்சைக்குத் தோற்ற வேண்டும். ஒவ்வொரு பரீட்சார்த்தியும், தமது கையொப்பம் உரிய முறையில் உறுதிப்படுத்தப் பட்ட அனுமதி அட்டையை, பரீட்சைக்குத் தோற்றும் முதல் நாளிலேயே சமர்ப்பிக்க வேண்டும். ஒவ்வொரு பரீட்சார்த்தியும் கடைப்பிடிக்க வேண்டிய விதிமுறைகள் இவ்வர்த்தமானியின் ஆரம்பத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ளன. பரீட்சையை நடாத்துவது தொடர்பில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் ஒழுங்குவிதி களுக்கும் பரீட்சார்த்திகள் கட்டுப்பட வேண்டும். இவ்வொழுங்குவிதிகளை மீறுமிடத்து, அவர் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப் படும் தண்டனைக்கு உட்படுவார்.

**குறிப்பு**.- பரீட்சார்த்தியொருவருக்கு பரீட்சை அனுமதி அட்டை வழங்கப்படுவது, அவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கான தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ளார் என ஏற்றுக்கொள்ளப்பட்டதாகக் கருதப்படமாட்டாது.

13. **விண்ணப்பதாரர்களின் ஆளடையாளம் :**

பரீட்சை விண்ணப்பதாரர்கள், பரீட்சை மண்டபத்தினுள் தாம் தோற்றும் ஒவ்வொரு பாடத்திற்கும் பரீட்சை மண்டப மேற்பார்வையாளரின் திருப்திக்கமைய தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்தல் வேண்டும். அதற்காகப் பின்வரும் ஆவணங்கள் மாத்திரமே செல்லுபடியானவையாகும் :

(i) தேசிய ஆளடையாள அட்டை;
(ii) செல்லுபடியாகும் கடவுச்சீட்டு;
(iii) செல்லுபடியாகும் இலங்கை சாரதி அனுமதிப்பத்திரம்.

அத்துடன், பரீட்சார்த்திகள் தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக முகத்தை மூடாமலும், மின்னணு தொடர்புச் சாதனங்களை அணிந்திருக்கவில்லை என்பதை உறுதிப்படுத்தும் வகையில் இரு காதுகளையும் மூடாமலும் பரீட்சை மண்டபத்திற்குள் நுழைய வேண்டும். இதற்கு இணங்காத விண்ணப்பதாரர்கள் பரீட்சை மண்டபத்திற்குள் அனுமதிக்கப்படமாட்டார்கள். மேலும் பரீட்சை மண்டபத்திற்குள் நுழைந்த நேரத்திலிருந்து பரீட்சை நிறைவடைந்து மண்டபத்திலிருந்து வெளியேறும் வரை முகத்தையும் இரு காதுகளையும் மூடாமல் இருத்தல் வேண்டும்.

14. வர்த்தமானி அறிவித்தலின் 8.1 பந்திக்கமைய, தகைமையுடைய விண்ணப்பதாரிகள் பரீட்சையில் பெற்றுக்கொண்ட மொத்தப் புள்ளிகளின் அடிப்படையில் தயாரிக்கப்பட்ட பெறுபேறுகள் ஆவணம், செயலாளர், அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவுக்கு அனுப்பி வைக்கப்படும். பரீட்சைக்குத் தோற்றிய அனைத்து விண்ணப்பதாரர்களுக்கும் பெறுபேறுகள் தனிப்பட்ட ரீதியாக அனுப்பி வைக்கப்படும் அல்லது www.results.exams.gov.lk இணையத்தளத்தில் வெளியிடப்படும்.

பரீட்சைப் பெறுபேறுகள் தொடர்பில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் தீர்மானமே இறுதியானதாகும்.

15. **பொய்யான தகவல்களை வழங்குவதற்கான தண்டனை** :

பரீட்சார்த்தியொருவர் தகைமையற்றவர் எனத் தெரியவருமிடத்து, இப்பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடைபெறும் காலப்பகுதியிலோ, பரீட்சையின் பின்னரோ அல்லது எந்தவொரு சந்தர்ப்பத்திலோ அவருடைய பரீட்சார்த்தி உரிமை இரத்துச் செய்யப்படலாம். பரீட்சார்த்தியொருவர் சமர்ப்பித்துள்ள ஏதேனும் ஒரு தகவல் தவறானது என்பதை அறிந்தே சமர்ப்பித்துள்ளார் எனத் தெரியவருமிடத்து, அல்லது ஏதேனும் முக்கியமான தகவலொன்றை அவர் வேண்டுமென்றே மறைத்திருப்பின், அவர் அரசாங்க சேவையிலிருந்து பணிநீக்கம் செய்யப்படுவதற்கு உட்படலாம்.

16. இவ் ஒழுங்கு விதிகளில் குறிப்பிடப்படாத விடயங்கள் ஏதேனும் இருப்பின், அவை தொடர்பாக அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் பொருத்தமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

17. இவ்வறிவித்தலின் சிங்கள, தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளிலான அறிவித்தல்களுக்கு இடையில் ஏதேனும் முரண்பாடுகள் காணப்படின், அத்தகைய சந்தர்ப்பங்களில் சிங்கள மொழியிலான அறிவித்தலின் பிரகாரம் செயற்பட வேண்டும்.

அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் கட்டளைப்படி,

செயலாளர்,
நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு.

நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு,
கொழும்பு - 01.

07-566

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.